# உதயன்

சுடர்: 29 கதிர்: 305 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 11, சனி 27.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

யாழ். - 20/=
வன்னி - 20/=




**விளையாடியது மழை; சிக்கலில் சென்னை**

பக்கம் 18

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# பாதுகாப்புக்கே முன்னுரிமை இந்த முறையும் அதிக நிதி

## கடந்த ஆண்டைவிட 2,891 கோடி ரூபா அதிகரிப்பு

கொழும்பு, செப்.27
2015ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு பிரதமர் டி.எம்.ஜயரட்னவால் நேற்று வெள்ளிக்கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் 2015ஆம் ஆண்டுக்கான செலவினம் ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 229 கோடியே 87 லட்சத்து 18 ஆயிரம் ரூபா (ரூ. 1812 பில்லியன் 29 கோடி 87 லட்சம்) ஒதுக்கப்பட்டுள்ளது.
2014ஆம் ஆண்டுக்கான செலவினம் ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 825 கோடியே 25 லட்சத்து 18 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், 2015ஆம் ஆண்டுக் காக 21 ஆயிரத்து 404 கோடியே 62 லட்சம் ரூபா அதிகமாக ஒதுக் கப்பட்டுள்ளது.
இதேபோன்று, 2014ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திக் காக 25,604 கோடியே 26 லட்சத்து 41 ஆயிரத்து 285 ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், 2015ஆம் ஆண்டுக் கான பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திக்கான செலவினம் 2,891 கோடியே 93 லட்சத்து 58 ஆயிரத்து 715 ரூபாவால் அதிகரிக் கப்பட்டு 28,502 கோடியே 20 இலட்சம் ரூபாவாக ஒதுக்கப்பட்டுள்

19 ஆம் பக்கம் பார்க்க

- மொத்த செலவினம் ரூ. 1812 பில்லியன்.
- ஜனாதிபதி செலவினம் ரூ. 1,970 கோடி.
- வட மாகாணத்துக்கு ரூபா 2041 கோடி.
- கிழக்குக்கு ரூபா 1935 கோடி.

## மோடிக்கு நியூயோர்க் நீதிமன்று அழைப்பாணை

நியூயோர்க், செப்.27
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்குப் பயணமாகவுள்ள நிலையில், அவருக்கு நியூயோர்க் நீதிமன்றம் ஒன்று அழைப்பாணை அனுப்பியுள்ளது.
குஜராத் மாநிலத்தில் 2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற கலவரங்களில் அவர் ஆற்றியதாகக் கூறப்படும் பங்கு தொடர்பாகவே இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டிருக்கிறது.
அமெரிக்க நீதிமையம் என்ற மனித உரிமை அமைப்பும் குஜராத் கலவரங்களில் உயிர் தப்பியோர் இருவரும் சேர்ந்து

19ஆம் பக்கம் பார்க்க

## பயிரை மேய்ந்த வேலி பிடித்து சிறையிலடைப்பு

மன்னார், செப்.27
தலைமன்னாரில் 11 வயதுப் பாடசாலை மாணவன் ஒருவனைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய, பாடசாலை அதிபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுவன் தற்போது மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றான் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
ஆறாம் தரத்தில் கல்விகற்றுவரும் குறித்த சிறுவனை கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையின் களஞ்சியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ள பாடசாலை அதிபர், அங்கு சிறுவனை துஷ்பிரயோகத்துக்கு உட்டுபத்தினார்

19 ஆம் பக்கம் பார்க்க

## மாவை தலைமையில் 2015 இறுதிக்குள் தீர்வு

### முயற்சிக்க வேண்டும் என்கிறார் சம்பந்தன்



கொழும்பு, செப்.27
"தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் அடுத்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வை பெற முயற்சிக்க வேண்டும்" - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திரு

19 ஆம் பக்கம் பார்க்க

## இரத்மலானை வரை பஸ் செல்லும்

யாழ்ப்பாணம்.செப்.27
கொழும்பு செல்லும் யாழ். பயணிகளின் கோரிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணம்-கொழும்புக்கான இலங்கைப் போக்குவரத்து பஸ் சேவை இரத்மலானை வரை நீடிக் கப்பட்டுள்ளது.
இலங்கைப்போக்குவரத்து சபையின் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் பஸ் சேவை இதுவரை காலமும் புறக்கோட்டை மத்திய பஸ் நிலையம் வரைமட்டுமே சேவையில் ஈடுபட்டு வந்தது.
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் பயணி

19 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தின் விடுதியால் உள்ளூர் விடுதிகள் பாதிப்பு

### வடக்கு மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.27
இராணுவத்தினரால் பலாலியில் அமைக்கப்பட்டுள்ள பனைக்கூடல் (தல்செவண) விடுதியால், சுற்றுலாத்துறையை மட்டும் நம்பி அமைக்கப்பட்டுள்ள உள்ளூர் விடுதிகள் பெரும் பாதிப்புக்களை எதிர் கொண்டு வருகின்றன. சுற்றுலாத்துறையை மட்டுமே நம்பி, பெருமளவு பணத்தை முதலீடு செய்துள்ள உள்ளூர் விடுதிகளின் உரிமையாளர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். - இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் தலைவர் ரி.திலகராஜ்.
வடக்கு மாகாண சுற்றுலாத் துறை ஒன்றியத்தால் நடத்தப் படவுள்ள மாநாடு தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நேற்று ரில்கோ விடுதி

19ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு - மு.கா. இன்று சந்திக்கின்றன

யாழ்ப்பாணம், செப். 27
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் இன்று முக்கிய சந்திப்பு இடம்பெறவுள்ளது. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில், சிறுபான்மை கட்சிகளை ஒன்றிணைக்கும் நடவடிக்கையின் ஆரம்பமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த மாதம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டு, புதிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்திருந்தது. இந்தச் சந்திப்பின் போது, இலங்கையிலுள்ள சகல சிறுபான்மைக்

19 ஆம் பக்கம் பார்க்க

## தியாகி திலீபனின் நினைவு எழுச்சியுடன் கடைப்பிடிப்பு

### தமிழர் வாழும் நாடெங்கும் நேற்று நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 27
அகிம்சை வழியில் உண்ணாவிரதம் இருந்து உயிர்த் தியாகம் செய்த, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 27 ஆவது ஆண்டு நினைவு தினம் தமிழர்கள் வாழும்

19 ஆம் பக்கம் பார்க்க



யாழ். குடாநாட்டிலும் அங்காங்கே நினைவு கூரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு ஆதாரமாக உதயனுக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்த படங்களில் ஒன்று.

## வலி.வடக்கு மீள்குடியமர்வை பேசவும் வாய்ப்பு வேண்டும்

### ஜனாதிபதி வருகையின் போது இடமளிக்கக் கோருகிறார் குணசிங்கம்

யாழ்ப்பாணம், செப். 27
வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில், கடந்த 24 ஆண்டுகளாக இடம் பெயர்ந்து வாழும் வலி. வடக்கு மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்கும் இடமளிக்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் வலி.வடக்கு மீள்குடி

19 ஆம் பக்கம் பார்க்க

## மஹிந்தவின் வருகையையொட்டி இம்முறை பாதுகாப்பு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 27
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அடுத்த மாத வடக்குப் பயணத்துக்குரிய ஏற்பாடுகள், மும்முரமாக அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் ஜனாதிபதியின் வடக்குப் பயணத்தின் போது மேற்கொள்ளப்படாத பாதுகாப்பு ஒழுங்குகளும் இந்தப் பயணத்தின் போது விசேடமாக மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
மூன்று நாள் பயணமாக வடக்குக்கு வரும் ஜனாதிபதி, ஒக்ரோபர் 12 ஆம் திகதி கிளி

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதிக்கு எதிராகப் பரப்புரை

கொழும்பு, செப்.27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகத் தேர்தலில் போட்டியிடுவது சட்டவிரோதமானது என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் என்ற அமைப்பு விழிப்புணர்வுப் பரப்புரை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

குறிப்பிட்ட அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி சிறிலால் லக்திலக இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக தேர்தலில் போட்டியிடுவது குறித்து மக்களின் கருத்தை அறிவதற்காக மக்கள் தீர்ப்பாயமொன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மக்களின் கருத்தை அறிந்த பின்னர் அதனை அடிப்படையாக வைத்து சட்ட ஆவணமொன்றை உருவாக்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பிட்ட ஆவணம் 18ஆவது திருத்தத்தின் கீழ் மூன்றாவது தடவையாக போட்டியிடுவது ஜனாதிபதிக்கு தகுதியுள்ளதா என்பதை ஆராயும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த முதலாவது கருத்தரங்கு இந்த மாதம் 29 ஆம் திகதி இடம்பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## நாட்டின் பல பாகங்களில் மழை பெய்யலாம்

கொழும்பு, செப்.27

நாட்டின் பல பாகங்களிலும் மாலை மற்றும் இரவு வேளைகளில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யும் என்றும் அவ்வப்போது பலத்த காற்று வீசும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் மற்றும் தென் மாகாண கரையோரப் பிரதேசங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்யும் என்று காலி முதல் பொத்துவில் வரையில் 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மத்திய கல்லூரி கற்றல் செயற்பாடு திங்கள் ஆரம்பம்

கொழும்பு, செப்.27

விடைத்தாள் மதிப்பீட்டுக்காக மூடப்பட்டிருந்த உயர்தர வகுப்புகள், கற்றல் நடவடிக்கைகளுக்காக மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை திகதி முதல் ஆரம்பமரகும் என்று யாழ். மத்திய கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ற)



முன்னாள் பிரதமர் மறைந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்காவின் 55ஆவது நினைவு தினம் நேற்றாகும். ஹொரகொல்லையில் அமைந்துள்ள அவரது சமாதியில் இந்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அவரது குடும்பத்தார், உறவினர்கள், நண்பர்கள், அமைச்சர்கள், ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பெருந்திரளானோர் இதில் கலந்துகொண்டனர்.

# கண்காணிப்பு பள்ளிகள் மீது தேவை

### ஜாதிக ஹெல உறுமய கூறுகின்றது

கொழும்பு, செப்.27

நாட்டில் உள்ள பள்ளிவாசல்களை புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸாரும், படையினரும் கண்காணிக்க வேண்டும். சோதனை நடத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளது ஜாதிக ஹெல உறுமய கட்சி.

"பள்ளிவாசல்களில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன?, என்ன விடயங்கள் பேசப்படுகின்றன? என்பது குறித்து கண்காணிக்கப்பட வேண்டும். பௌத்த விகாரைகளில் சோதனை நடத்தப்படுகின்ற போது ஏன் பள்ளிவாசல்களில் சோதனை நடத்தப்பட முடியாது?"- என்று கேள்வி எழுப்பியுள்ளார் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"கடும்போக்குவாத மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மதரசாக்களில் வெளிநாட்டு மத போதகர்கள் எதனைச் சொல்கிறார்கள் என்பதனை கண்காணிக்க வேண்டும்.

பாகிஸ்தான், சவூதி அரேபியா போன்ற நாடுகளைச் சேர்ந்த மத போதகர்கள் கொழும்பு, புத்தளம், பேருவளை மற்றும் வடக்குப் பகுதி பள்ளிவாசல்களில் போதனைகளை செய்து வருகின்றனர். இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய சட்டங்கள் தொடர்பில் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகின்றன. அரபு மொழி, வன்முறைகள் கூட போதிக்கப்படலாம்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் முஸ்லிம் சிறுவர்கள் அடிப்படைவாத முஸ்லிம் கொள்கைகளை பின்பற்றக் கூடிய அபாய நிலைமை காணப்படுகின்றது. எனவே இஸ்லாமிய பாடசாலைகளில் புகட்டப்பட்டு வரும் விடயங்கள் குறித்து கண்காணிப்பு செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது. முஸ்லிம்கள் நாள் ஒன்றுக்கு ஐந்து தடவை பள்ளி வாசலில் கூடி தொழுகை செய்கின்றனர், என்ன விடயங்கள் பேசுகின்றார்கள் என்பது பற்றி கவனிக்கப்பட வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையில் முஸ்லிம் கடும்போக்குவாத நடவடிக்கைகள் கிடையாது எனவும் கண்காணிக்கப்பட வேண்டியதன் அவசியம் கிடையாது என்று தெரிவித்துள்ளார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண. இலங்கையில் அனைத்து இன மக்களும் சமாதானத்துடன் வாழ்ந்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## பாவித்தது 6 மின்குமிழ்கள் மின்பட்டியலோ ஒரு லட்சம்

### வீட்டு உரிமையாளர் மாரடைப்பால் வைத்தியசாலையில்

கொழும்பு, செப்.27

ஆறு மின்குமிழ்களை மாத்திரம் பயன்படுத்தும் வீடொன்றுக்கு ஒன்றரை ல்ட்சம் ரூபா, மின் கட்டணமாக வந்தது. அதைப் பார்த்த அந்த வீட்டின் இரு பிள்ளைகளின் தந்தைக்கு மாரடைப்பு ஏற்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் பத்தேகமவில் நடந்துள்ளது.

பத்தேகம, அகுரட்டிய உடகம பிரதேசத்தில் உள்ள குறித்த வீட்டில் இரண்டு குழந்தைகளுடன் தம்பதியினர் வாழ்கின்றனர். அவர்கள் வீட்டுக்கு மின்சாரம் பெற்றுக்கொண்ட நாள் முதல் சுமார் 500 ரூபா மாத்திரமே மின் கட்டணமாக வந்துள்ளது. ஓகஸ்ட் மாதத்தில் 68 மின் அலகுக்கான கட்டணமாக 842 ரூபா 40 சதம் காணப்பட்டுள்ளது. ஆனால் செலுத்த வேண்டிய முழுத் தொகையாக 1,46,561 ரூபா 78 சதம் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதைப்பார்த்த வீட்டு உரிமையாளருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. அதையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பத்தேகம பிரதேச மின் பொறியியலாளர் சிறில் கருணாரட்ன, அது தவறுதலாக நடந்துள்ளது என்றும் - அதனைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ற)

## மஹிந்த ராஜபக்ஷ அரசு போலியானது

### ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.27

மகிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு போலியானது என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார கொள்ளை மனிதாபிமானத்தை கொண்டது. தந்திரமான முறையில் சோஷலிஸ வாதத்தை காண்பித்து முன்னெடுக்கப்படும் நரித்தனமான பொருளாதாரம் அல்ல. தற்போதைய அரசு வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக மக்கள் மீது வரி அறவீடுகளை சுமத்தும் அரசு. 10 ரூபாவை கொடுக்கும் அரசு 100 ரூபாவை மக்களிடம் இருந்து வரியாக அறவிடுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார கொள்கையானது 100 ரூபாவை கொடுத்து 10 ரூபாவை வரியாக அறவிடும் பொருளாதார கொள்கை.

ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்த பொருளாதார கொள்கையை திசைத்திருப்பி எவருக்கும் ஏதுமில்லாத மோசடி நிலைக்கு கொண்டுசென்றுள்ளனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஜே.வி.பி. முக்கியஸ்தர் ஐ.தே.கவுடன் இணைவு

கொழும்பு, செப்.27

ஜே.வி.பியின் மத்திய குழு மற்றும் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான வருண தீப்தி ராஜபக்ஷ எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட உள்ளார்.

ஜே.வி.பியில் இருந்து பிரிந்து முதலாம் முன்னணி உறுப்பினராக இருந்த இவர், அந்தக் கட்சியில் இருந்தும் விலகியுள்ளார். பிரபலமான இளம் அரசியல் செயற்பாட்டாளரான வருண தீப்தி ராஜபக்ஷ, முதலாம் முன்னணி என்ற அமைப்பில் இணைந்து செயற்பட்டு வருகிறார்.

இந்த நிலையில், அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து கட்சியின் வேட்பாளராக போட்டியிட சந்தர்ப்பம் வழங்க ரணில் இணக்கம் தெரிவித்துள்ளார். வருண தீப்தி ராஜபக்ஷவை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைக்கும் முனைப்புக்களை அந்த கட்சியின் உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க மேற்கொண்டுள்ளார். (ற)

## மியான்மார் மதகுரு வருகையால் முஸ்லிம்கள் மத்தியில் கவலை

### ஜனாதிபதியிடம் தெரிவித்தது முஸ்லிம் கவுன்ஸில்

கொழும்பு, செப்.27

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பொதுபல சேனாவின் மாநாட்டுக்கு, மியான்மாரின் சர்ச்சைக்குரிய மதகுரு விராதுவுக்கு அழைப்பு விடுத்துள்ளமை தொடர்பில் முஸ்லிம் கவுன்ஸில் கவலை வெளியிட்டுள்ளது.

மியான்மார் முஸ்லிம்களுக்கு பெரும் வன்முறைகளை தூண்டிவிட்ட குறிப்பிட்ட மதகுரு இலங்கை வருவது இலங்கையின் சமாதான சகவாழ்வுக்கு ஆபத்தாக அமையும் என்றும் முஸ்லிம் கவுன்ஸில் மேலும் குறிப்பிட்டுள்ளது.


அந்த அமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்தக் கடிதத்தில், மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"இஸ்லாமின் வளர்ச்சி, பௌத்தத்துக்கும் மியான்மார் கலாசாரத்துக்கும் ஆபத்தான விடயம் என்ற தீவிர பரப்புரை மூலமாக அந்த நாட்டின் முஸ்லிம் சிறுபான்மையினரின் மீது வன்முறைகளை தூண்டிவிட்டவர் விராது என சர்வதேச அளவில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அவரது பிரசன்னம் முஸ்லிம்களுக்கு எதிராக மேலும் வன்முறைகளை தூண்டலாம், அளுத்தகமவில் ஞானசாரதேரரின் உரை ஏற்படுத்திய விளைவுகளை இது ஏற்படுத்தலாம். குறிப்பிட்ட தேரருக்கு நுழைவிசைவு வழங்கப்பட்டால் இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக வெறுப்புணர்வு பரப்புரைக்கும் இலங்கை அரசுக்கு தொடர்பிருப்பதாக மேலும் குற்றச்சாட்டு எழலாம்"- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மியான்மாரின் கடும்போக்கு பௌத்த அமைப்பான, 969 என்ற அமைப்பின் தலைவரான விராது தேரரை டைம்ஸ் சஞ்சிகை பௌத்த பயங்கரவாதி என்று அடையாளப்படுத்தி அட்டைப்படத்தில் புகைப்படமொன்றை வெளியிட்டிருந்தது. (ற)



பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 11 சனி (27.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 305

# விசாரணைக்குத் தடைவிதிப்பது முழு இலங்கைக்குமே ஆபத்து

## கேடான பாதையில் பயணிப்பதை அரசு உடன் நிறுத்தவேண்டும் என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 27

**"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காமல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான்தோன்றித்தனமாகத் தொடர்ந்து செயற்படுவாராயின் கடும் பின்விளைவுகளை இலங்கை வெகுவிரைவில் சந்திக்க வேண்டி வரும்."**

**- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.**

ஐ.நாவின் அங்கத்துவ நாடான இலங்கை, அந்தச் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விசாரணைக்குத் தடையாக இருப்பது நாட்டுக்குத்தான் ஆபத்து. இந்த ஆபத்தை இலங்கை வெளிப்படையாகச் சந்திக்கும் நிலை ஏற்படும் என்றும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான இலங்கை அரசு நாட்டுக்கும், மக்களுக்கும் கேடான பாதையில் பயணிப்பதை உடனே நிறுத்த வேண்டும். சர்வதேச சமூகத்தின் அறிவுரைகளுக்கேற்ப ஐ.நாவின் விசாரணைக்கு ஒத்துழைத்து - பிரச்சினைகளுக்குப் பொறுப்புக் கூறி தீர்வைக் காணும் வழியில் பயணிக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கை மீதான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகள் அரசியல் நோக்கங்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்தி மாநாடு இன்று

யாழ்ப்பாணம், செப்.27

வடக்கு மாகாண சபை மற்றும் வடக்கு மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் உலக சுற்றுலாத்துறை தினத்தை முன்னிட்ட சுற்றலாத் துறையின் அபிவிருத்தி தொடர்பான மாநாடு இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.ரில்கோ விடுதியில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் சுற்றுலாத் துறை சார்ந்த அதிகாரிகளின் கருத்துரைகள் இடம்பெறவுள்ளதுடன், வடக்கு மாகாண சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

இலங்கையில் ஏனைய மாகாணங்களில் சுற்றுலாத்துறையின் செயற்பாடுகள் மாகாண சபைகளுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் கடந்த 2 வருடங்களாக செயற்படும் வடக்கு மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் முதலாவது முயற்சியாக இந்த மாநாட்டை ஒழுங்கமைப்புச்

(22ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அறிக்கைகள் சிங்களத்தில் வழக்குகளை முன்னெடுப்பதில் சிரமம்

### சட்டமா அதிபரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 27

நீதிமன்றங்களில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் முதல் முறைப்பாட்டு அறிக்கைகள் யாவும் தனிச் சிங்களத்தில் உள்ளமையால் வழக்கைக் கொண்டு நடத்துவதில் சிக்கலை எதிர்கொள்வதாகச் சட்டமா அதிபரிடம் சட்டத்தரணிகள் முறையிட்டுள்ளனர். அது தொடர்பில் ஆராய்வதாக அவர் கூறியுள்ளார்.

வடக்குக்குப் பயணம் மேற்கொண்டு யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு நேற்று முன்தினம் வருகை தந்த அவருக்கும் நீதிபதிகள், சட்டத்தரணிகளுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப்.27

நெல்லியடி மத்திய சந்தைக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம் அடைந்தனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் கரவெட்டியைச் சேர்ந்த எஸ்.யசோதா (வயது 40), இமையாணன் கிழக்கு அறிவாலயத்தைச் சேர்ந்த யாழ்.

(22ஆம் பக்கம் பார்க்க)

# நீடிக்கிறது ஐஸ்கிறீம் ஆபத்து

## மலத்தொற்று அபாயத்திலிருந்து எந்த நிறுவனமும் இன்னும் விடுபடவில்லை என்கிறார் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், செப்.27



யாழ்.மாவட்டத்தில் முன்னணியிலுள்ள மூன்று பிரபல ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங்கள் உள்ளிட்ட பத்து ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங்களின் தயாரிப்புக்களில் மலத்தொற்று மற்றும் பல்வேறு குறைபாடுகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. அந்தக் குறைபாடுகள் இதுவரை குறித்த நிறுவனங்களினால் களையப்படவில்லை.

இதனால் குறித்த நிறுவனங்களின் உற்பத்திகளை நிறுத்தி வைக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பில் பொதுமக்களுக்குப் பகிரங்கமாகத் தெரியப்படுத்தப்படும் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் பல்வேறு ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தச் சோதனை முடிவுகள் கொழும்பிலிருந்து இந்த மாதம்

(22ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீதான விசாரணைக்கு இந்தியா மீண்டும் கடும் எதிர்ப்பு

### விசாரணையின் நம்பகத்தன்மை குறித்தும் கேள்வி

ஜெனீவா, செப்.27

இலங்கைக்கு எதிராக முன்னெடுக் கப்படும் சர்வதேச விசாரணையை, இந்தியா மீளவும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எதிர்த்துள்ளதுடன், முன்னெடுக்கப்படும் விசாரணை முறைகளின் நம்பகத்தன்மை குறித்தும் கேள்வியெழுப்பியுள்ளது.

இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையிலான அரசு அமைந்த பின்னர் நடைபெறும் முதலாவது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விவாதத்தில், இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை இந்தியா பகிரங்கமாக முதல் தடவையாக எதிர்த்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 27 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில், இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்டு வருகின்ற விசாரணை தொடர்பான வாய்மொழிமூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் காவலில் இருந்தபடி திலீபனின் நினைவு அனுஷ்டிப்பு

கொழும்பு, செப்.27

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரும் சொட்டு நீரும் அருந்தாமல் உணவு தவிர்ப்பில் இருந்து உயிர்த் தியாகம் செய்தவருமான தியாக தீபம் திலீபனின் நினைவு நாளான நேற்று சென்னையில் உணவு தவிர்ப்பில் இருக்க முயன்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் படைப்பாளிகள் 50 இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர். எனினும், பொலிஸ் காவலில் இருந்தபடியே கைதுசெய்யப் பட்டோர் தியாக தீபம் திலீபனுக்கு வீர வணக்கம் செலுத்தினர்.

1987 ஆம் ஆண்டு 5 அம்சக் கோரிக் கைகளை இந்தியாவிடம் முன்வைத்து யாழ்.நல்லூரில் உணவு தவிர்ப்பில் இருந்து உயிர்நீத்தார் தியாக தீபம் திலீபன்.

திலீபனின் 27 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, சென்னை கோயம் பேட்டில் நேற்று உணவு தவிர்ப்பில்

(22ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் வியூகம் வகுக்கவே கூட்டமைப்புடன் மு.கா.பேச்சு

### அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவிப்பு

ஏறாவூர், செப்.25

எதிர்கால அரசியல் வியூகத்தை வகுப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் பேச்சில் ஈடுபட ஒப்புக் கொண்டதாக உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் - மீராகேணி பஷீர்

(22ஆம் பக்கம் பார்க்க)



## வடமராட்சியில் நேற்றுப் பகல் கடும் மழை

கரணவாய், செப்.27

நீண்ட கால இடைவெளிக்குப் பின் வடமராட்சிப் பகுதியில் நேற்றுப் பகல் இடியுடன் கூடிய கடும் மழை பெய்தது. இதனால் நிலம் குளிர்ச்சி அடைந்ததுடன் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

கடந்த பல மாதங்களாக மழை இல்லாமல் குளங்கள், கிணறுகள் வற்றின. இதனால் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. அத்துடன்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2010ஆம் ஆண்டு தொடக்கம் 2014.08.31 வரை புளியங்குளம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய

**சு.சிவலிங்கம்**

அவர்களை அவரின் சேவை நலனைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் அவரது சேவை இவ்வுலகில் சிறப்புற அமைய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்: பணியாளர்கள்
Best Wishes புளியங்குளம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்

(52158)(7.6.3)


## வலி.மேற்கில் செஞ்சிலுவை அலுவலகம்

சுழிபுரம், செப்.27

வலிகாமம் மேற்குப் பிரிவு செஞ்சிலுவைச் சங்க பிரிவு அலுவலகத்துக்கான புதிய கட்டடம் குளிப்பன் வீதி, மாவடி வட்டுக்கோட்டை சந்திக்கு அருகில் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கனடா செஞ்சிலுவைச் சங்கத்தினதும் பொது மக்களது உதவியுடனும் இந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஜெகத் அபயசிங்க கட்டடத்தைத் திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக திஸ்ஸ அபேவிக்கிரம, எ.சோதி நாதன், திருமதி நா.ஐங்கரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக. கு.பாலகிருஷ்ணன், க.சுரேஸ்குமார், இ.மயூ ரன் ஆகியோரும் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர். (வ-28)

## விபத்தில் இளம்பெண் காயம்

கிளிநொச்சி நகரில் நேற்று முற்பகல் நடைபெற்ற வீதி விபத்தொன்றில் சிக்கி இளம் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி அரச செயலகம் முன்பாக மோட்டார் சைக்கிளில் பயணித்த குறிப்பிட்ட பெண் வீதி யின் பக்கவாட்டில் திரும்பிய போது பின்னால் வந்த ஹைஏஸ் வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதியது. இதில் வட்டக்கச்சியைச் சேர்ந்த சுமதி (வயது 41) என்ற பெண் கையிலும் காலிலும் காயமடைந்தார். சம்பவ இடத்துக்கு விரைந்த போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (வ-18)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulation

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பெரியப்பா

கவிஞர்

**சோ.பத்மநாதன்**

அவர்களின் 75 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் 'சோ. ப.75' நூல் சிறப்புற அமைய மனமாரப் பாராட்டுவதுடன், அவரின் இலக்கியப்பணி மேன்மேலும் தொடரவும் வாழ்த்துகின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(சி/15969)(4.3.6)

பேரமக்கள்.


## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.27

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். (வ)

## சமாதான நீதிவானாக நியமனம்

முள்ளியவளை, செப்.27

முல்லைத்தீவு சுதந்திரபுரம், உடையார்கட்டைச் சேர்ந்த வரும், வவுனியா வடக்கு கல்வி வலய ஆங்கில பாட முன்னாள் ஆசிரிய ஆலோச கரும், உடையார்கட்டு மகா வித்தியாலய பிரதி அதிபருமான சதாசிவம் சிவகுமார் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிர மாணம் செய்து கொண்டார். (வ-433)


## வீடு விற்பனைக்கு

யாழ்.சுண்டுக்குளியில் 1½ பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: இல.16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.077 614 6434

(52422) (12.3.6)

## சித்திர வகுப்பு

பிரபல சித்திர ஆசிரியரினால் உங்கள் இல்லங்களுக்கு வந்து சித்திரம் கற்பிக்கப்படுகின்றது.

தொடர்பு: 077 910 4426

(52430) (12.3.6)

CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)



Platinum 10.30am, 2.30pm, 6.30pm



Silver 10.15am, 2.15pm, 6.15pm



Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com



HERITAGE

# VACANCIES IN KILINOCHCHI
# கிளிநொச்சியில் தொழில் வெற்றிடங்கள்

இலங்கையில் பொறியியல் துறையில் முன்னணி வகிக்கும் ஒரு பிரத்தியேக நிறுவனம் இயக்கச்சியில் ஒரு விவசாயத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதில் பணியாற்ற, திறமை வாய்ந்தவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம்.

## முகாமைத்துவப் பயிற்சி (Management Training):

இது விரைவாக வளர்ந்து வரும் எங்கள் நிறுவனத்தில் எதிர்கால முகாமையாளர்களை உருவாக்கும் ஒரு திட்டம். முதன் முறையாக வடமாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**பின்வரும் தகைமை கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.**

- இலங்கை விவசாயக் கல்லூரிகளின் டிப்ளோமா பட்டதாரிகள்-கிழக்கிலங்கை அல்லது யாழ்ப்பாணக் பல்கலைக்கழக விவசாயப் பட்டதாரிகள்-இறுதிப் பரீட்சை எழுதக் காத்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்திருப்பது அவசியம், கணினி உபயோகிப்பதில் போதியளவு புலமை இருப்பது அவசியம்
- கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கத் தயாராக இருக்க வேண்டும்.
- உச்ச வயதெல்லை 25.

## நிர்வாக உதவியாளர் (Administrative Assistant):

இயக்கச்சியில் அமைந்திருக்கும் எமது பண்ணை அலுவலகச் செயல்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டும்.

- ஒரு காரியாலயத்தில் 3 வருடங்களாவது பணியாற்றிய அனுபவம்.
- க.பொ.த. உயர்தரத்தில் சித்தியெய்தியிருக்க வேண்டும். கணினியில் Excel, Word, Internet உபயோகிப்பதில் அனுபவம் இருக்க வேண்டும். ஆங்கிலம் பேசும், எழுதும் தகைமை முக்கியம்.
- உச்ச வயதெல்லை 30 வருடங்கள்
- மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் விரும்பத்தக்கது.

உங்கள் அனுபவத்தைக் குறிப்பிட்டு தகுதிச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்கள் கடவுச்சீட்டு அளவுப்படம் ஒன்றையும் இணைத்து விண்ணப்பங்களை கீழ்வரும் விலாசத்துக்குப் பதிவுத்தபாலில் 7 நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**General Manager**
**Heritage Agri Pvt. Ltd. 101, Anandanagar, Kilinochchi.**

(47886) (4.6.3)

# கூட்டுக் கணக்கினூடாக ஓய்வூதியத்தை வழங்குக

## வலி. கிழக்கு பிரதேச செயலக அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கம் வலியுறுத்து

அச்சுவேலி, செப்.27
அரச சேவை ஓய்வூதியம் பெறும் கணவன், மனைவிக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு வழமைபோல கூட்டுக் கணக்கின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று வலி. கிழக்கு பிரதேச செயலக அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.
இதுதொடர்பில் வலி.கிழக்கு பிரதேச செயலக அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் நிர்வாகம் ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானம் தாய்ச் சங்கத்தின் செயலாளர் எஸ்.பி.ராஜநாயக்க மற்றும் யாழ்.மாவட்ட சங்க நிர்வாகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பில் அந்தத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
கணவன், மனைவி தனித்தனிக் கணக்குகளை வங்கிகளில் ஆரம்பித்து ஓய்வூதியக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற புதிய நடைமுறை வயோதிப நிலையில் உள்ள மூத்த பிரசைகளை மனக் குழப்பத்துக்கு உள்ளாக்குவதோடு தனிமை உணர்வை மேலிடச் செய்கின்றது. எனவே கணவன், மனைவி இருவரும் ஓய்வூதியம் பெறும் நிலை கூட்டுக் கணக்கின் ஊடாக ஓய்வூதியம் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.
அரச சேவை ஓய்வூதியர்களுக்கு கொடுப்பனவு கட்டளை (வவுச்சர்) மூலம் வழங்கப்பட்டு வந்த மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு நடைமுறை நிறுத்தப்பட்டு இணையம் மூலம் சம்பந்தப்பட்டவர்களின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.
ஓய்வூதியம் பெறுவோர் குறித்த திகதியில் வங்கிக்குச் சென்று ஓய்வூதியத்தை தமது வங்கிக் கணக்கில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கு கணவன், மனைவி இருவருக்குமான கூட்டுக் கணக்கு ஏற்றுக் கொள்ள முடியாது. இருவரும் தனித்தனிக் கணக்குகளை ஆரம்பித்து அது தொடர்பான கணக்கு இலக்கங்கள் மற்றும் விவரங்களை பிரதேச செயலக ஓய்வூதியக் கிளைக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கம் அனுப்பி வைத்துள்ள தீர்மானத்தில் குடும்ப உறவுகள் மற்றும் பிள்ளைகளைப் பிரிந்து தனிமையில் தவிக்கும் மூத்த பிரஜைகளை இத்தகைய ஓய்வூதியக்கொடுப்பனவுமுறைமை குழப்பத்துக்கு உள்ளாக்குவதாகவும், ஓய்வூதியத் தொகையைப் பெற்று அதனைக் கையாள்வது தொடர்பில் மேலும் தனிமை உணர்வை மேலோங்கச் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-11)

## சான்றிதழ் வழங்கல் குறித்த அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், செப்.27
2010/2012, 2011/2013 கல்வி ஆண்டுகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15ஆம், 16 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்று இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கென விண்ணப்பித்தவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டமும் விழா ஒத்திகையும் எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 8 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளதோடு பட்டமளிப்பு விழா அங்கியும் மற்றும் தேவையான ஆவணங்களும் வழங்கப்படவுள்ளன.
எனவே விண்ணப்பித்த அனைத்து டிப்ளோமா தாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (வ)

## மாற்றுத்திறனாளிகள் 60 பேருக்கு உணவுப் பொதி

யாழ்ப்பாணம்,செப்.27
வேலணை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் 60 பேருக்கு கரித்தாஸ் நிறுவனம் தேங்காய் எண்ணெய், பருப்பு வகைகள் உட்பட உணவுப் பொதிகளை புதன்கிழமை வழங்கியது.
வேலணை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 30 கிராம அலுவலர் பிரிவில் இருந்தும் ஒரு பிரிவுக்கு தலா இரண்டு பேர் வீதம் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த உணவுப் பொதிகள் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், கரித்தாஸ் நிறுவன இயக்குநர் வண.ஜாவிஸ், வேலணை பிரதேச சபை தவிசாளர் என்.சிவராசா ஆகியோரால் கையளிக்கப்பட்டன. (வ-7)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.27
திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க சைவச் சிறுவர் இல்லத்தின் கைப்பணிப் பொருள்கள் மற்றும், யாழ். வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அழகுக் கலை ஆகியவற்றின் கண்காட்சி நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி இல்ல படிப்பு மண் டபத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.வலய முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் கலந்து கொள்வார். (வ)

## ஆலயத்துக்கு அலங்கார வளைவு

சுழிபுரம், பறாளை முருகன் கோயில் முன்பாக கிழக்குப் பக்கமாகவும் தெற்குப் பக்கமாகவும் அலங்கார வளைவுகள் கட்டப்பட்டுள்ளன. (வ-28)

## பரிசளிப்பு விழா

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு பாடசாலை வெளியரங்கில் இடம்பெறும்.
பாடசாலை அதிபர் திருமதி க.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி வசந்தி சிவானந்தம் வழங்குவார். (வ-9)

## நவராத்திரி தின நிகழ்வுகள்

சுழிபுரம், செப்.27
பண்ணாகம் ஸ்ரீ முருகன் வாலிபர் சங்க சனசமூக நிலைய வாசிகசாலை மண்டபத்தில் நவராத்திரி தின நிகழ்வு கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
தினமும் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று, பூசைகள் நிறைவு பெறுகின்றன.
இதில் பெருமளவான சிறுவர்கள் கலந்து கொள்கின்றனர். இந்த வழிபாடுகள் கிராமத்திலுள்ள இளைஞர்களாலும் பெரியோர்களாலும் வழிநடத்தப்படுகின்றது. (வ-28)

♦♦♦

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை ஆரம்பமான நவராத்திரி விரத பூசைகள் தினமும் 4.30 மணிக்கு இடம் பெற்று வருகின்றன.
எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் அம்பாள் தொல்புரம் துரையன் வளவு பிள்ளையார் ஆலயத்துக்குச் சென்று கன்னி வாழை வெட்டி ஆலயம் வந்தடைவார்.
வழி நெடுகிலும் தத்தம் இல்லங்களில் அடியவர்கள் கும்பம் வைத்து அர்ச்சனை செய்து வணங்குவார்கள். ஆலயம் வந்து சேர்ந்ததும் அம்பாளுக்கு பிராயச்சித்த அபிஷேகம், நடைபெற்று விழா நிறைவு பெறும். (வ-28)

♦♦♦

வேலணை, செப்.27
நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையின் நவராத்திரி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னதானசபை மண்டபத்தில் நடைபெறும்.
வேலணை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி விஜிதா தவசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் முன்னாள் நிறைவேற்று உத்தியோகத்தர் நா.யோகநாதன், ஆலய அறங்காவலர் சபை உப தலைவர் அ.சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். அன்னதானசபை முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (வ-7)

♦♦♦


யாழ்ப்பாணம், செப்.27
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நவராத்திரி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆனைப்பந்தி குருகுலத்தில் நடைபெறும்.
இந்து சமய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி [illegible] அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச சமூக சேவைகள் உத்தியோகத்தர் வே.சிவராசா கலந்து கொள்வார். கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (வ-7)

## சீரடி சாயி பாபா தின நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.27
சீரடி சாயி பாபா தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (வ)

### பதின்னான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சுந்தரம் யோகானந்தா**
மலர்வு: 20.10.1954
உதிர்வு: 30.09.2000
திதி:திருதியை 27.09.2014




ஆண்டுதோறும் உங்கள்
நினைவுடன் அவனியில் நாம்
அல்லல் இன்றி வாழ ஈடு
இணையற்ற அனைத்தும்
நிறைவேற்றித் தந்த தங்களை
இழந்து ஈரேழு ஆண்டுகள்
சென்றதையா

மனைவி,மக்கள்,மருமகள்,பேரன்.
நீர்வேலி தெற்கு.
(52445)(5.6.3)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**செல்லத்துரை ஜெயராசா**
மண்ணில் 12.07.1935
விண்ணில் 30.08.2014



எமது குடும்பத்தலைவர்
செல்லத்துரை ஜெயராசா கடந்த
30.09.2014 சிவதமடைந்த செய்தி
கேட்டு நேரில் வந்தும்
தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பல வழிகளிலும் எமக்கு உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [27.09.2014] சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் [29.09.2014] திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு உரும்பிராயில் உள்ள அவரது இல்லத்திலும் நடைபெறும்.
அன்றைய தினம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் [illegible] தொடர்ந்து உரும்பிராய் காளியம்மன் மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன[illegible]கிலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கற்பகப் பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு.
குடும்பத்தினர்.
(52435)(12.3.6)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி




எமது பாடசாலை கல்விசாரா ஊழியர்
**திருமதி லோஜினி ஜெகன்**
அவர்களின் அன்பு மாமனார்
**அமரர் இரத்தினம் பேரம்பலம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை,
அராலி.

### 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **பொ.குகதாசன்**
(பிரபல கட்டடக் கலைஞன்)
மலர்வு: 21.11.1937
உதிர்வு: 30.09.2000
திதி:திருதியை
27.09.2014 சனிக்கிழமை



இராமன் பூண்ட
வனவாசம் போல்
பதினான்கு ஆண்டுகள்
கடந்தனவே.

மனைவி,பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கேமா லேன், அல்வாய் தெற்கு, அல்வாய்.
(52437)(5.6.3)

### விண்ணக வாழ்வின் 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சுவாம்பிள்ளை அக்னெஸ்**
இறப்பு
27.09.1983
ஆண்டுகள் முப்பத்தொன்று
ஆனாலும்
உங்கள் அன்பும் அரவணைப்பும்
எங்கள் நெஞ்சைவிட்டு
என்றும் அகலாது
அகல்விளக்காக எரிந்து
அணைந்து போன உங்களை
நித்தமும் நாம் நினைப்போம்.

பிள்ளைகள், மருமக்கள்,
[illegible]பிள்ளைகள்.
பேரப[illegible]
சில்லாலை வடக்கு, பண்டத்த[illegible]
(52409)(7.6.3)

# சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவோர் தண்டிக்கப்படவேண்டும்

## மன்னார் வாழ் பெண்கள் சார் அமைப்பு கோரிக்கை

மன்னார், செப். 27

நாடளாவிய ரீதியில் சிறுவர், பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் மிக மோசமாக அதிகரித்து வருகின்றமை வேதனைக்குரிய விடயமாகும். இவ்வாறான சம்பவங்கள் எமது பிரதேசத்திலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றபோதிலும் அதிகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த பயத்தின் காரணமாக இவ்வாறான குற்றச் செயல்களைப் பகிரங்கப்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்க முன்வராது போய்விடுகின்றனர் என மன்னார் வாழ் பெண்கள் சார் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கையில்:

குற்றச் செயல்களை பகிரங்கப்படுத்திக் குற்றவாளிகளுக்குத் தண்டனைகளைப் பெற்றுக் கொடுக்க முன்வராது இருப்பதன் காரணமாக இவ்வாறான பயங்கரமான குற்றவாளிகள் சமூகத்தில் மிகச் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் சற்று சிந்தித்து உணரவேண்டும்.

அத்துடன் தமது பிள்ளைகளின் பாதுகாப்பு, போக்குவரத்து, பாடசாலைகள் பிரத்தியேக வகுப்புகளுக்கான ஒழுங்குகள் குறித்து அவதானமாகவும், விழிப்புணர்வுடனும் பெற்றோர்கள் செயற்பட வேண்டும்.

சிறுவர்களின், பெண்களின் மிகப் பெறுமதியான எதிர்காலத்தை உடல் உள ரீதியாகப் பாதிக்கும் வகையில் செயற்படுவோரை இந்தச் சமூகம் தமது பொறுப்பிலிருந்து விலகி நிற்காது தட்டிக்கேட்டல் அவசியம். இது ஒவ்வொருவரது தலையாய கடமையுமாகும். இவ்வாறான சம்பவமானது பிரதேச வாழ் ஒவ்வொரு பெற்றோருக்கும், சமூகத்துக்கும் மிகப்பெரும் படிப்பினையையும் அனுபவத்தையும் ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, பிள்ளைகளுடன் தொடர்புபடுகின்ற வெளிநபர்கள் மாத்திரமன்றி அவர்களுடன் நெருக்கமாகப் பழகுகின்ற அயலவர்கள், குடும்ப உறுப்பினர்கள் தொடர்பிலும் மிக அவதானமாகச் செயற்படுவது பெற்றோரின் பெரிய பொறுப்பாகும்.

அண்மைக் காலமாக அதிகாரத்தில் இருக்கும் சிலர் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தி நலிவுற்றோரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி வருகின்றமை அவதானிக்கப்பட்ட விடயமாக இருந்து வருகின்றது.

குறிப்பாக இவ்வாறான வழக்குகள் நீதிமன்றத்தில் நடைபெறும்போதும், பொதுமக்கள் தங்களது கரிசனைகளையும் வழக்கு நகர்வு குறித்து பெரிய எதிர்பார்ப்பையும் தெரிவிக்கும் வகையில் செயற்படும் போது இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுவோரை எச்சரிக்க முடியும்.

மேலும் பிஞ்சு மனங்களையும், பெண்களையும் வெறும் பாலியல் நோக்கோடு பார்ப்பதும், பயன்படுத்துவதும் நிறுத்தப்படல் வேண்டும்.

குற்றவாளி ஒருவர் சட்டத்தின் ஓட்டைகளை வைத்து எவ்வகையிலும் தப்பிச்செல்ல இந்நாட்டின் நீதித்துறை அனுமதி வழங்கக்கூடாது. இந்தக் குற்றவாளிக்கு நீதிமன்றம் அதி உச்ச தண்டனையை வழங்க வேண்டும்.

இறுதியாகக் கட்டுக்காரன் குடியிருப்பு பாடசாலையில் நடைபெற்ற சிறுவருக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோக வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர் நீதியான வகையில் தண்டிக்கப்பட வேண்டும் என இந்நாட்டு நீதித்துறையை வேண்டிக் கொள்வதுடன் பாதிக்கப்பட்ட சிறுவனின் குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, இவ்வாறான கொடூரச் செயல்கள் இந்த நாட்டில் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

அத்துடன் இந்த நாட்டில் வாழுகின்ற பெண்களினதும், சிறுவர்களினதும் உரிமைகள் நிலைநாட்டப்பட்டு அவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதை அரசும் உறுதி செய்ய வேண்டும்-என்றுள்ளது. (த-56)

### சாவகச்சேரியில் புற்றுநோய்க் கிளினிக்

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மீண்டும் புற்றுநோய்க் கிளினிக் ஆரம்பிக்கப்படவுள்ளது. பிரதேச நோயாளர்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து எதிர்வரும் மூன்றாம் திகதி தொடக்கம் பிரதி மாதத்தின் முதலாவது வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் கிளினிக் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் திருமதி கவிதா இந்திரப் பிரசாத் தலைமையிலான மருத்துவர் குழுவினர் கலந்துகொண்டு சிகிச்சை வழங்கவுள்ளனர்.

முன்னர் மருத்துவமனையில் நடத்தப்பட்டு வந்த புற்றுநோய்க் கிளினிக் மருத்துவ நிபுணரின் இடமாற்றத்தினால் இடைநிறுத்தப்பட்டது. இதனால் இந்த கிளினிக்கில் பங்குபற்றிய 90க்கும் அதிகமான நோயாளர்கள் யாழ். போதனா மருத்துவமனை கிளினிக்கில் பங்குபற்றி வந்தனர்.

யாழ். போதனா மருத்துவமனையில் இயங்கி வந்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. இதனால் தென்மராட்சி பிரதேச மக்கள் உட்பட பளை வடமராட்சி கிழக்கு பூநகரி போன்ற இடங்களைச் சேர்ந்த நோயாளர்கள் தமக்கு ஏற்படும் சிரமங்களைச் சுட்டிக்காட்டி கிளினிக்கை சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு மாற்றுமாறு பொறுப்பதிகாரிக்கு முறையிட்டிருந்தனர். (த-9)

### பாடசாலை முன்பாக மீன்சந்தை அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு முன்பாக மீன்சந்தை அமைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதை அடுத்து மீன் சந்தை அமைப்பதற்கான முயற்சியை வவுனியா நகர சபை கைவிட்டுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் உள்ள சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு முன்பாகவுள்ள அங்காடி வியாபார நிலையப் பகுதியில் மீன் சந்தையை அமைப்பதற்கு வவுனியா நகரசபை முயற்சித்தது.

வவுனியா பொழுதுபோக்குக் கழகத்துக்குரிய இந்தக் காணியை அங்காடி வியாபாரிகளுக்கு வியாபார நிலையம் அமைக்கவென நகரசபை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொண்டது. ஆனால் பொழுது போக்குக் கழகத்தின் அனுமதி இல்லாது இந்த மீன் சந்தை அமைக்கப்பட்டு வருகிறது.

வவுனியாவில் பல இடங்கள் இருந்தும் வவுனியாவில் உள்ள ஒரு சைவ சமயப் பாடசாலை முன்னால் மீன் சந்தையை அமைப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது எனப் பொது அமைப்புக்கள் பல எதிர்ப்பு வெளியிட்டன.

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டையும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் வந்து செல்கின்ற பாடசாலைச் சூழலையும் மாசுபடுத்தும் செயற்பாடாக இது அமைவதுடன் சைவ சமயத்தையும் கொச்சைப்படுத்தும் செயலாகவே அமைந்துள்ளதுஎனவும் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் வவுனியா பொழுது போக்குக் கழகம், அந்தணர் ஒன்றியம், வரியிறுப்பாளர் சங்கம், பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் எனப் பலரும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா நகர சபைத் தலைவர் சத்தியசீலனுடன் தொடர்பு கொண்ட கேட்டபோது,

மீன் சந்தை அமைப்பதற்குப் பொருத்தமான காணியை நகர சபை ஆராய்ந்து வரும் நிலையில் அங்காடியில் தற்காலிகமாக மீன் சந்தையை அமைக்கலாம் என முடிவு செய்யப்பட்டது. குறைந்தது 4 மாதங்களுக்கு அங்காடியில் மீன் சந்தையை அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு தற்போது [illegible] எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் அந்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது -என்றார். (த-14-421)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**Personal Class**

தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammar, சிங்களம் கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (52446) (7.6.3) தொடர்பு: [illegible] வீதி, யாழ்ப்பாணம். T.P : 072 368 2977

**ஆங்கில வகுப்புக்கள்**

உங்கள் குழந்தை ஆங்கிலத்தில் சிறந்து விளங்க விரும்புகின்றீர்களா? அப்படியாயின் இதோ பேச எழுத மிகச் சுலபமான முறையில் 1-தரம் 5 வரை. (52444) (7.6.3) T.P. : 077 393 6961 ஆசிரியர்

**காணி விற்பனைக்கு**

அராலி மேற்கில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(52308) (12.3.6) தொடர்பு: 077 854 8312

**வீடு விற்பனைக்குண்டு**

சுண்டுக்குளியில் 2 பரப்புக்காணியில் 4 அறையும், 2 ஹோல், முழுவதும் மாபிள் பதித்த நல்ல தண்ணீர் கிணற்றுடனும் சகலவசதிகளுடனும் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(52421) (12.3.6) 077 614 6434

**ஒத்துமாறல்**

மட்டக்களப்பில் விஞ்ஞான ஆசிரியராக நகரப் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் யாழ். மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார். (52443)(7.6.3)
தொடர்பு கொள்ளவும் : 077 877 7547

**தேவை**

மேசன், கூலித் தொழிலாளர் உடன் தேவை
PRECIOUS LANKA
RAJAKARIYAR LANE, MANIPAY.
(52634) (46.6.3) T.P. : 077 152 2859

**மணமகள் தேவை**

- 78இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 20½ பாவமுடைய சைவ போசனமுள்ள ஆசிரியருக்கு சைவ போசனமுள்ள மணமகள் தேவை.
- 84இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9½ பாவமுடைய Ph.D ஆஸ்திரேலியாவில் படித்துக் கொண்டிருக்கும் நிரந்தரமான விரிவுரையாளர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 82இல் பிறந்த 12 இல் செவ்வாய் 16½ பாவமுடைய Radiographer சைவபோசன மணமகனுக்கு சைவ போசனமுள்ள மணமகள் தேவை.
- 83இல் பிறந்த 4இல் சூரியனும், செவ்வாயும் 34 பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 84இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 15 பாவமுடைய எலக்ரோணிக் இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 82இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 40 பாவமுடைய சைவ போசனமுள்ள டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி சைவ போசன மணமகள் தேவை. (52601)(7.6.3)

தொடர்பு : [illegible] திருமண சேவை
இல. 62, இராமலிங்கம் வீதி,
[illegible]. T.P : 077 607 0862

**பிற்போடல்**

யா/வயாவிளான்-மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினால் இன்று 2014.09.27 நடத்தப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டு இழுப்பானது தவிர்க்க முடியாத காரணத்தினால் 18.10.2014 பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் (52602) (7.6.3)

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

75 வீதம் பொருள்கள் விற்பனை செய்பவர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக ரூபா 15000/= உம் 125 வீதப் பொருள்கள் விற்பனை செய்பவர்களுக்கு ரூபா 25000/= உம் அத்துடன் தரகுக் கட்டணமும் வழங்கப்படும்.

உணவு இருப்பிடம் இலவசம்.
ஆண், பெண் இருபாலருக்கும் ஆவணங்களுடன் நேரில் வரவும்.

சுஜித் என்ரபிறைசஸ்
பருத்தித்துறை வீதி,
நுணாவில் சந்தி, சாவகச்சேரி.
021 227 0586 (C/15970) (7.6.3)


**ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு**



கடந்த 28.08.2014 சிவபதமடைந்த

திருமதி

**ஜீவமணி சிவலிங்கம்**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (27.09.2014) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல.37, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (Raja Cream House) நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.90, சம்பியன் லேன், கொக்குவில். குடும்பத்தினர். (52480)(12.3.6)

**4ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

திருமதி சின்னப்பிள்ளை சோமசுந்தரம்

அன்னை மடியில் 15.02.1944 — ஆண்டவன் அடியில் 10.10.2010



திதி: 27.09.2014

நான்காண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு என்றென்றும்
எங்கள் மனதில் நிறைந்திருக்கும்
ஐயனார் காலடியே சரணென்று
எம்முறவை மறந்தே புகழுடலில் வாழ்பவரே
காலங்கள் விடைபெறலாம்
ஆனாலும் கண்முன்னே நிழலாடும்
உங்கள் நினைவுகள் ஒருபோதும்
எம்மைவிட்டு அகலாது
உங்கள் ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
ஆ.சோமசுந்தரம் (கணவர்),
சோ.இராசரத்தினம் (கனடா-மகன்),
இ.சரோஜாதேவி (கனடா-மருமகள்),
பேரப்பிள்ளைகள்: றஜீதரன் (லண்டன்),
றஜீவன் (கனடா),
றஜிந்தன், றஜீகரன், றசீலன், றமணதாஸ் } கனடா

மீசாலை கிழக்கு.

# ஐ.நா.தீர்மானம்

## ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதத்தை ஒழிக்க

நியூயோர்க், செப்.27



ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் வெளிநாட்டு தீவிரவாதிகள் இணைவதைத் தடுக்கும் வகையில், ஐ.நா.பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

சிரியா மற்றும் ஈராக்கில் செயற்படும்ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாதிகள் உலகுக்குப் புதிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளனர். அமெரிக்கா வான் தாக்குதல் நடத்தியதற்கு பழி வாங்கும் விதத்தில் அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் இருவரின் தலையைத் துண்டித்து கொன்றனர்.

அமெரிக்காவுக்குப் பிரிட்டன் ஆதரவு தெரிவித்ததால், பிரிட்டனைச் சேர்ந்த தொண்டு நிறுவன ஊழியர் ஒருவரையும் கொன்றனர். தற்போது பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவர்ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் சிக்கிப் பலியாகியுள்ளார். இந்தநிலையில் ஐ.நா. பாதுகாப்பு சபைச் கூட்டம் அமெரிக்க அதிபர் ஒபாமா தலைமையில் நேற்று நடந்தது. அப்போதுஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் வெளிநாட்டு தீவிரவாதிகள் இணைவதைக் கட்டுப்படுத்தும் விதத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

தீவிரவாத நடவடிக்கைகளுக்காக நடைபெறும் ஆள்கள் தெரிவு, திட்டமிடுதல், பயிற்சி அளித்தல், பயிற்சி பெறுதல், பயணத்துக்குநிதி உதவி அளிப்பது போன்ற நடவடிக்கைகளை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகள் தடுக்க வேண்டும். ஐ.எஸ். ஐ.எஸ், அல்-நுஸ்ரப் முன்னணி (ஏ.என்.எப்) மற்றும் அல்கய்தாவின் இதர தீவிர வாத பிரிவுகளில் வெளிநாட்டு தீவிரவாதிகள் இணைவதைத் தடுக்க இந்த தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். தீவிரவாதப் பணிகளை மேற்கொள்வதற்காக வெளிநாடு செல்வோரை விசாரிக்கும் வகையில் உறுப்பு நாடுகள் சட்டம் கொண்டுவர வேண்டும்.

தீவிரவாதப் பணிக்காக வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டவர்கள் மீண்டும் தாய்நாடு திரும்புவதைத் தடுக்க வேண்டும். தீவிரவாதிகளின் செயற்பாடுகள், அவர்களின் வலைத்தொடர்பு போன்ற தகவல்களை உறுப்பு நாடுகள் பகிர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (வ)

# மோடிக்கு அமெ.நீதிமன்று அழைப்பாணை

நியூயோர்க், செப்.27

குஜராத் கலவர வழக்கு தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அமெரிக்க நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

குஜராத்தில் 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற மதக் கலவரத்தில் அப்போதைய முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடிக்கு தொடர்புள்ளது என்று குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கிலேயே, இந்தியப் பிரதமர் மோடிக்கு எதிராக நியூயோர்க் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. அவர் தற்போது, நியூயோர்க் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# கார்க் கதவு மூடாததால் மனைவியை விவாகரத்து

ஜெட்டா, செப்.27

கார்க் கதவை மூட மறுத்த காரணத்துக்காக சவூதி அரேபியர் ஒருவர் தனது மனைவியை விவாகரத்துச் செய்துள்ளார்.

இதுகுறித்து அந்தநாட்டிலிருந்து வெளியாகும் 'அரபு நியூஸ்' இதழில் வெளியான தகவலில்,

சவூதியில் குழந்தைகளுடன் காரில் உல்லாசப் பயணம் சென்ற ஒரு தம்பதியர் வீடு திரும்பினர். அப்போது காரிலிருந்து இறங்கிய மனைவி, தனது குழந்தைகளையும் இறங்க வைத்த பின்னர் வீட்டுக்குள் சென்றிருக்கிறார். மனைவி கார்க் கதவை மூடாமல் சென்றதைக் கண்ட கணவர், கோபத்துடன் கார்க் கதவை மூடுமாறு மனைவிக்குக் கூறியிருந்தார். ஆனால், காருக்கு அருகில் கணவர் இருப்பதால் அவரையே மூடச் சொல்லியிருக்கிறார் மனைவி. இதனால் கோபம் தலைக் கேறிய கணவர், மனைவியை விவாகரத்து செய்வதாகக் கூறியிருக்கிறார். மனைவியும் தனது தாய் வீட்டுக்குச் சென்று விட்டார்.

உறவினர்கள் அவரைத் திரும்பி வருமாறு அழைத்த போது, பொறுப்பில்லாத கணவனுடன் மீண்டும் சேர விருப்பமில்லை என அவர் மறுத்துவிட்டதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)




ஆபிரிக்காவிலுள்ள ஐவரி கோஸ்ட் பாடசாலையில் எபோலா வைரஸ் நோய்க்கு எதிராக நடத்தப்பட்ட விழிப்புணர்வு நாடகத்தின் காட்சி.

# 35 வருடங்களின் பின் இடம்பெற்ற சந்திப்பு

நியூயார்க், செப்.27

35 வருடங்களின் பின்னர் முதல்முறையாக பிரிட்டன், ஈரான் தலைவர்களிடையே புதன்கிழமை பேச்சு நடை பெற்றது.



ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும், ஈரான் ஜனாதிபதி ஹஸன் ரௌஹானியும் அமெரிக்காவுக்கான பிரிட்டன் தூதரகத்தில் சந்தித்துப் பேசினர்.

அந்தச்சந்திப்பின்போது ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈரானின் ஒத்துழைப்பை கமரூன் கோரியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து பிரிட்டன் பிரதமர் அலுவலக செய்தித் தொடர்பாளர் கூறுகையில்:-

"மேற்கு ஆசியப் பகுதியிலுள்ள அனைத்து நாடுகளும், அனைத்து பயங்கரவாத அமைப்புகளுக்கும் நிதி உள்ளிட்ட உதவிகள் அளிப்பதை நிறுத்த வேண்டும் என்ற கருத்தை இரு தலைவர்களும் பகிர்ந்து கொண்டனர்.

ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பால் எழுந்துள்ள அச்சுறுத்தல் குறித்து இருவரும் கவலை தெரிவித்தனர்" என்று தெரிவித்தார்.

1979-ஆம் ஆண்டு ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர் இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியமை இதுவே முதல் முறை. (வ)

# அமெரிக்காவுக்கு ஈரான் அறிவுரை

நியூயோர்க், செப்.27

தமது நாடு அணு ஆயுதம் தயாரிக்குமோ என்ற தேவையற்ற அச்சத்தைக் கைவிட்டு, உலகை அச்சுறுத்தும் ஐ.எஸ். ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பின் மீது கவனம் செலுத்துமாறு அமெரிக்காவுக்கு ஈரான் ஜனாதிபதி ஹஸன் ரௌஹானி அறிவுரை வழங்கியுள்ளார்.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள அவர், தனியார் அமைப்பு ஒன்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் புதன்கிழமை உரையாற்றுகையில் கூறியதாவது:-

அணுசக்திப் பேச்சில் ஈரானுக்குக் கடும் நெருக்கடி கொடுக்கும் தந்திரத்தை அமெரிக்கா கைவிட வேண்டும்.

அணு ஆயுதம் தயாரிப்பதில் ஈரானுக்கு துளியும் நாட்டம் இல்லை. எனவே, முக்கியத்துவம் இல்லாத அந்தப் பிரச்சினையை அமெரிக்கா புறம்தள்ள வேண்டும்.

அதற்குப் பதிலாக, ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிரான போரில் அந்த நாடு அதிக கவனம் செலுத்த வேண்டும்.

பயங்கரவாதமே நிதர்சனமான, தீவிரமான, அனைவருக்கும் பொதுவான அச்சுறுத்தலாகும்" என்றார் ரௌஹானி. (வ)

# எபோலாவால் இறந்தோர் 2,917 ஆக அதிகரிப்பு

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலா வைரஸ் தாக்குதலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2,917 ஆக அதிகரித்துள்ளது. அங்கு மொத்தம் 6,263 பேருக்கு எபோலா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கினி நாட்டில் கடந்த ஆண்டு இறுதியில் எபோலா வைரஸ் பரவத் தொடங்கியது. கடந்த 21ஆம் திகதி வரை அந்த நாட்டில் மட்டும் 1,022 பேர் எபோலா தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இதில் 635 பேர் உயிரிழந்துவிட்டனர். தொடர்ந்து பலருக்கு நோய் பாதிப்பு ஏற்பட்டுவருவதால் உயிரிழப்பு அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

சியோராலியோனில் 1940 பேருக்கு எபோலா தொற்று ஏற்பட்டுள்ளது. இதுவரை 593 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த மாதத்தில் மட்டும் கூடுதலாக 34 சதவீதம் பேருக்கு எபோலா பரவியுள்ளது. முதலில் காய்ச்சல், உடல் தளர்ச்சி, தலைவலி, வயிற்றுவலி, மூட்டுவலி மற்றும் தொண்டைவலி ஆகியவை ஏற்படும். பின்னர் நோய் தீவிரமாகி குருதி இழப்பு ஏற்படும். இதனால் உறுப்புகள் செயலிழக்கத் தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# குண்டு வெடிப்பு சீனாவில் 50 பேர் சாவு

பீஜிங், செப்.27

சீனாவில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவில் ஜின்ஜியாங் மாகாணத்தில் சிறுபான்மையினர் கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பிற மாகாணங்களில் இருந்து சீனர்கள், அங்கு குடியேற்றப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் இந்தக் கலவரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களை ஒடுக்க சீனா திண்டாடி வருகிறது.

அல்கொய்தா ஆதரவு பெற்ற இயக்கமே இந்தக் கலவரத்தைத் தூண்டி விடுவதாக சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தநிலையில், அந்த சிறுபான்மையின கலவரக்காரர்கள் தொடர் குண்டு வெடிப்புகளிலும் ஈடுபட்டனர். ஜின்ஜியாங் மாகாணம் லுன்டாய் மாவட்டத்தில் இந்த குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடைபெற்றன. 2 பொலிஸ் நிலையங்கள், 2 கடைகள் உள்ளிட்டவை இந்தக் குண்டு வெடிப்பில் தகர்க்கப்பட்டன.

மேலும், தொடர் குண்டு வெடிப்புகளில் கலவரக்காரர்களே 40. பேர் வரை உயிரிழந்து விட்டனர். (வ)

# ஆஸியில் மீண்டும் வருகிறது தற்காலிக விசா முறைமை

சிட்னி, செப்.27

ஆஸ்திரேலியாவில் தற்காலிக விசா முறையை மீண்டும் நடைமுறைப்படுத்தவுள்ளதாக குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார். பெரும் எண்ணிக்கையிலான புகலிடக் கோரிக்கையாளர்களின் சட்டரீதியான நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்தநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச ரீதியில் பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்திய புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பான சர்ச்சைக்குரிய கொள்கைகள் கொன்சர்வேடிவ் கட்சியின் பிரதமராக பதவி வகித்த டொனி அபொட்டினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தக் கொள்கை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர், ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரிய 30 ஆயிரம் பேரின் புகலிடக்கோரிக்கையைப் பரிசீலனை செய்வதற்கான சட்ட செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

ஆள்கடத்தல்களை தூண்டாத வகையில், இவர்களுக்கு தற்காலிக பாதுகாப்பு விசாக்களை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக ஸ்கொட் மொரிசன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தை 2008 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ஜோன் ஹவார்ட் அறிமுகப்படுத்தியிருந்தார்.

இதன் அடிப்படையில் 05 வருடங்கள் வசிப்பதற்கான விசா புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு வழங்கப்படுவதுடன், கல்வி கற்பதற்கும், தொழில் செய்வதற்கும், நாட்டின் சில பகுதிகளுக்கு பயணிப்பதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. (வ)

## இந்திய பெருங்கடலில் கண்காணிப்பு தீவிரம்

டில்லி, செப்.27

லடாக்கில் இடம்பெற்ற சீன இராணுவத்தினர் ஊடுருவலைத் தொடர்ந்து, இந்தியப் பெருங்கடல் எல்லைப் பகுதியில் சீன நாட்டுக் கடற்படையின் செயற்பாடுகளை தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம் என்று இந்தியக் கடற்படையின் தலைமைத் தளபதி ராபின் தோவான் தெரிவித்தார்.

இதுகுறித்து, அவர் செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் கூறியதாவது:

"இந்தியப் பெருங்கடலில் எமது எல்லைப் பகுதியில் வழக்கத்துக்கு மாறாக சீனக் கடற்படையின் போர்க் கப்பல்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இந்தநிலையில், லடாக்கில் சீன இராணுவத்தினர் அத்துமீறி ஊடுருவியுள்ளதால், சீனக் கடற்படையின் இந்த நடவடிக்கைகளை கண்காணித்து வருகிறோம்"- என்றார். (வ)

## ராஜபக்ஷவின் உரைக்கு வைகோ கடும் கண்டனம்

### சாத்தான் வேதம் ஓதியது என்கிறார் அவர்

சென்னை, செப்.27

ஐ.நா.சபையில் சாத்தான் வேதம் ஓதியது என்று ராஜபக்ஷவின் உரைக்கு ம.தி.மு.க. செயலர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டிய ஒரு கொடிய கொலைகாரன், குற்றங்களை விசாரிக்க வேண்டிய நீதிபதி மீதே குற்றப்பத்திரிகை வாசிக்கும் அவமானக் கேடு ஐ.நா. சபையில் நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளது.

இலங்கையில் லட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை, பச்சிளம் குழந்தைகளை, பாலகர்களை, தாய்மார்களை, வயது முதிர்ந்தோரை களத்தில் ஆயுதம் ஏந்தாத அப்பாவிகளை ஈவு இரக்கம் இல்லாமல் உலகம் தடைசெய்த குண்டுகளைப் பயன்படுத்தியும், இராணுவத்தை ஏவியும் கொன்றுகுவித்து, தமிழ் இனப்படுகொலை நடத்திய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பன்னாட்டுநீதி விசாரணைக்கு ஆளாக வேண்டிய குற்றவாளி.

அத்தகையவர் ஐ.நா. மன்றத்தின் பொதுச் சபையில், ஐ.நா. அமைப்பையே குற்றஞ்சாட்டியதும், இலங்கையில் சுதந்திரமான பன்னாட்டு நீதி விசாரணை நடத்தத் தீர்மானித்த ஐ.நாவின் மனித உரிமைகள் சபையின் மீது களங்கம் கற்பித்து, உலகத்தில் சில நாடுகள் தங்கள் சொந்தத் திட்டத்தை நிறைவேற்ற, மனித உரிமைகள் என்ற கருவியைப் பயன்படுத்துகிறார்கள். ஐ.நா. அமைப்பில் பாரபட்சமான போக்கு நிலவுவதாகவும், அதனால் ஐ.நா.வின் நம்பகத்தன்மைக்கே கேடு என்றும் சகட்டுமேனிக்கு குற்றஞ்சாட்டியுள்ளார். இதைவிட ஓர் அவமானம் ஐ.நா.அமைப்புக்கு இருக்க முடியாது.

ஏழரைக்கோடி தமிழர்கள் இந்தியாவின் குடிமக்கள் என்ற நிலையில், இந்தியாவின் முந்தைய ஐக்கிய முற்போக்குக்கூட்டணி அரசு ராஜபக்ஷவுக்கு மனித உரிமை சபையில் ஆதரவு தெரிவித்ததும், இன்றைய பிரதமர் நரேந்திர மோடியின் பதவி ஏற்பு விழாவுக்கு ராஜபக்ஷவை அழைத்துக் கௌரவப்படுத்தியதும், தான் ராஜபக்ஷவுக்கு உலக நாடுகள் மன்றத்தில் இப்படி எல்லாம் வசைபாடுவதற்கு துணிச்சலையும், திமிரையும் ஏற்படுத்தியது என்பதுதான் உண்மையாகும்.

இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டையே தொடர்ந்து இந்தியா மேற்கொள்ளும் என்று உறுதி அளித்ததும் இன்னொரு காரணமாகும்.

இலங்கை அரசு நடத்திய இனப்படுகொலைக்கு எதிராக தமிழ்நாட்டில் கட்சி வேறுபாடின்றி கோடான கோடி தமிழர்கள் கொந்தளித்ததும், 19 தமிழர்கள் தீக்குளித்து மடிந்து உயிர்த்தியாகம் செய்ததையும், இன்றைய நிலையிலும் தமிழகத்தில் இலங்கை அரசுக்கு எதிரான ஆத்திரமும் வேதனையும் ஏற்பட்டிருப்பதையும் இந்திய அரசு துச்சமாக எண்ணி, தமிழர்களைக் கிள்ளுக் கீரையாக நினைக்கின்ற போக்கு நீடிக்கிறது.

ஐ.நா.அமைப்புக்கே அவமரியாதை செய்கின்ற ராஜபக்ஷவை இத்தனைக்குப் பின்னரும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி சந்திக்க முற்படுவது தமிழர்களின் காயப்பட்ட நெஞ்சில் சூட்டுக் கோலைத் திணிக்கிற செயலாகும். கொடுமைக்கும் அநீதிக்கும் முடிவு ஒருநாள் வந்துதான் தீரும். நடப்பது அனைத்தையும் வரலாறு தமிழர்களின் மனதில் பதித்துக் கொண்டே வருகிறது. வினை விதைக்கிற வேலையை இந்திய அரசு தொடர வேண்டாம் என்று தியாக தீபம் திலீபனின் நினைவு நாளில் வேண்டுகிறேன்-என்றுள்ளது. (வ)

## லடாக்கிலிருந்து சீனப் படை செப்.30இற்குள் வாபஸ்

### சீன அரசு ஒப்புதல் அளித்ததாக சுஷ்மா தெரிவிப்பு



பீஜிங், செப்.27

லடாக்கில் நிலைகொண்டுள்ள சீன இராணுவத்தினரை எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் திரும்பப்பெற சீனா ஒப்புதல் அளித்துள்ளது. இது குறித்த இந்தியா மற்றும் சீனா இடையேயான பேச்சில் தீர்வு எட்டப்பட்டது என்று வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

எல்லையில் குவிக்கப்பட்ட படைகளை சீனா படிப்படியாகத் திரும்பப் பெறும். படைகள் எதிர்வரும்30 ஆம் திகதிக்குள் முழுமையாக திரும்பப்பெறப்படும் என்று அவர் தெரிவித்தார். எல்லையில் ஊடுருவல் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படுவது மிகப்பெரிய சவாலாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அமெரிக்கா சென்றுள்ளார். ஐ.நா. பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றுள்ள சுஷ்மா சுவராஜ் அதன் ஒரு பகுதியாக இந்தியா, பிரேஸில், தென் ஆபிரிக்கா வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர்:

எல்லையில் ஊடுருவல் பிரச்சினை குறித்து இந்தியா - சீனா ஆகிய இருநாடுகளும் பேச்சு மூலம் தீர்வு கண்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். படைகளைத் திரும்பப் பெறுவதற்கான காலஅளவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது - என்றார். (வ)



சுத்தமான இந்திய மிஷன் பங்கேற்பு செயற்திட்டத்தை செயற்படுத்தும் நோக்கில் இந்திய மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இரானி டில்லியிலுள்ள ஒரு பாடசாலையில் துப்புரவுப் பணியை ஆரம்பித்து வைத்தார்.

## ஈரான் சிறையில் வாடும் தமிழக மீனவரை மீட்குக

### மோடிக்கு ஜெயலலிதா கடிதம்

சென்னை, செப்.27

ஈரான் சிறையில் வாடும் தமிழக மீனவர்களை உடனே மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.



இதுதொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் ஜெயலலிதா நேற்று எழுதியுள்ள கடிதத்தில்:

கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த எல்.சசிகுமார், எஸ். ஆண்டனி, ஆரோக்கியம், எஸ்.அந்தோனி ஆகிய 4 மீனவர்கள் ஒப் பந்த அடிப்படையில் கட்டாருக்கு மீன் பிடிக்கச் சென்றிருந்தனர்.

இந்தநிலையில், கடந்த 22 ஆம் திகதி கட்டார் நாட்டின் கடல் பகுதியில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டு இருந்த போது எதிர்பாராதவிதமாக ஈரான் கடல் பகுதிக்குள் சென்று விட்டனர். அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த ஈரான் நாட்டு கடலோரப் பாதுகாப்புப் படையினர் தமிழக மீனவர்கள் 4 பேரையும் கைது செய்து அந்தநாட்டு கிஷ் தீவில் உள்ள சிறையில் அடைத்துள்ளனர். ஈரான் சிறையில் உள்ள தமிழக மீனவர்களின் குடும்பங்கள், அவர்களின் வருமானத்தை நம்பியே உள்ளன. எனவே, அவர்களை உடனடியாக விடுதலை செய்ய தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (வ)

## 'ஜெ' சொத்துக் குவிப்பு வழக்கில் இன்று தீர்ப்பு

சென்னை, செப்.27

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் இன்று தீர்ப்பு வழங்கப்படவுள்ளதை முன்னிட்டு தமிழக -கர்நாடக எல்லையில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குக்காக பரப்பன அக்ரஹாரா நீதிமன்றத்துக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வரவுள்ளதால் தமிழக - கர்நாடக எல்லை மற்றும் பரப்பன அக்ரஹாரா நீதிமன்ற வளாகம் உள்ளிட்ட இடங்களில் 6,000 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடு படுத்தப்பட்டுள்ளனர்.

தீர்ப்பு வழங்கப்படும் நாளில் தமிழகத்திலிருந்து அதிகமான கட்சித் தொண்டர்கள் அங்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பெங்களூர் பொலிஸ் ஆணையாளர் எம்.என் ரெட்டி தெரிவித்துள்ளார். (வ)

## உறவில் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கும்

### அமெரிக்க பயணத்தின்போது நம்பிக்கை வெளியிட்ட மோடி

அமெரிக்க சுற்றுப்பயணத்தின் மூலம் அந்தநாட்டுடனான உறவில் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கும் என்று பிரதமர் நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் 5 தினங்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்காக நரேந்திர மோடி சிறப்புவிமானம் மூலம் டில்லியில் இருந்து புறப்பட்டார். அதற்கு முன்பாக இந்தச் சுற்றுப் பயணம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமெரிக்கா-இந்தியா இடையேயான உறவைப் புதிய கட்டத்துக்குக் கொண்டு செல்வது குறித்து ஒபாமாவுடன் விவாதிக்கவுள்ளதாக மோடி கூறியுள்ளார்.

இந்தியாவின் முக்கிய கூட்டாளியாக அமெரிக்கா இருப்பதாகக்கூறிய மோடி இருதரப்புகளுக்கும் இடையேயான உறவில் புதிய அத்தியாயத்தின் தொடக்கமாக இந்தப் பயணம் அமையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சிக்கலான நிலையில் இருக்கும் உலக பொருளாதாரம், பரவிவரும் தீவிரவாதம், ஆபிரிக்க நாடுகளைப் பாதித்துள்ள எபோலா, வறுமை ஒழிப்பு உள்ளிட்டவை குறித்தும் ஐ.நா. சபையில் உரையாற்றவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மோடி குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி ஐ.நா. சபையில் இன்று உரையாற்றுகிறார். எதிர்வரும் 29 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை, பிரதமர் நரேந்திர மோடி சந்திக்கவுள்ளார். (வ)

# வறட்சி நிவாரணத்துக்கு 28 கோடி ரூபா தேவை

கொழும்பு, செப்.27
வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள 8 மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது தொடர்பாக 28 கோடி ரூபா நிதி ஒதுக்கீடுகளாகப் பெற்றுக் கொடுக்கும் முழுமையான மதிப்பீடொன்று கடந்த 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.
அரச தரப்பின் பிரதம கொரடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தனவால் இந்த மதிப்பீடு முன்வைக்கப்பட்டுள்ளது.
மன்னார், வவுனியா மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களுக்கு தலா 5 கோடி ரூபாவும், மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கு தலா மூன்று கோடி ரூபாவும், அம்பாறை மாவட்டத்துக்கு 2 கோடியே 50 லட்சம் ரூபாவும், பொலனறுவை மாவட்டத்துக்கு 4 கோடி ரூபாவும், பதுளை மாவட்டத்துக்கு ஒரு கோடி ரூபாவும் நிதி ஒதுக்கீடுகள் தேவை என்று குறித்த மதிப்பீட்டில் கோரப்பட்டுள்ளது. (ற-22)



ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க்குக்கு சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர், அங்கு வந்திருந்த பலஸ்தீன் நாட்டு ஜனாதிபதி மொஹமட் அப்பாஸை சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் பலஸ்தீனுக்கு வழங்குவதாக ஜனாதிபதியால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை, பலஸ்தீன் ஜனாதிபதியிடம் இலங்கை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக கையளித்தார். (ற)

## தனித்து விமல் வென்றால் பதவி விலகுவேன்

*- கடுவலை மேயர்*

கொழும்பு, செப்.27
அமைச்சர் விமல் வீரவன்ஸ, கொழும்பு மாவட்டத்தில், தனித்து தனது கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் பஞ்சாயுதம் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றால், நான் கடுவலை மாநகர மேயர் பதவியிலிருந்து விலகுகின்றேன் என்று ஜீ.எச். புத்ததாச தெரிவித்துள்ளார்.
"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் வாக்குகளை பெற்றே வீரவன்ஸ வீரதீரம் பேசி வருகிறார். ஊவா மாகாண சபைத் தேர்தலில் இதனை காண முடிந்தது. பதுளையில் தேசிய சுதந்திர முன்னணியின் பஞ்சாயுத சின்னத்தில் போட்டியிட்டவர்கள் கட்டுப் பணத்தையும் இழந்துள்ளனர்"- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# 'டிரோன்' தாக்குதல்கள்; இலங்கை கடும் விசனம்

## ஐ.நா.மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில்

கொழும்பு, செப்.27
பயங்கரவாத நடவடிக்கைகளைஒடுக்குவதற்காகஆளில்லா விமானங்களைக் (டிரோன்) கொண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது தொடர்பாக இலங்கை கடுமையான விசனம் தெரிவித்துள்ளது.
ஜெனீவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் தானியங்கிச் சாதனங்கள் மூலமாக இயக்கப்படும் விமானங்கள் மூலமாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் சர்வதேச விதிகள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்டங்களுக்கு உட்பட்டனவா என்பது தொடர்பான விவாதம் ஒன்று இடம்பெற்றது.
இதில் கலந்து கொண்டு உரையாற்றிய மனித உரிமைகள் சபையின் பிரதி ஆணையாளர் பிளேவியா பான்சைரி தெரிவிக்கையில்; கடந்த 15 ஆண்டுகளில் படை நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் இடம்பெறும் போது ஆளில்லாத விமானங்கள் மூலமான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன-என்றார். மனித உரிமைகள் சபையில் இந்த விடயம் விவாதத்துக்கு எடுக்கப்படுவதைச் சில நாடுகளின் பிரதிநிதிகள் எதிர்த்து உரையாற்றினர்.
இந்த விவாதத்தின் போதே இலங்கை தனது விசனத்தை வெளியிட்டது.
பிரான்ஸ், சீனா, அயர்லாந்து, வெனிசுலா, நெதர்லாந்து, பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனி, கியூபா, பாகிஸ்தான், ஈக்குவடோர், இந்தோனேசியா, ரஷ்யா, இலங்கை, மலேசியா, பொலிவியா, சுவிற்ஸர்லாந்து, ஈரான், சிலி, பிரேசில், தென் ஆபிரிக்கா, அல்ஜீரியா, நைஜீரியா, சூடான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டனர். (க)

# ஏற்கமுடியாது

## மஹிந்த ஜனாதிபதியாவதை

### ஜே.வி.பி. திட்டவட்டமாகக் கூறுகின்றது

கொழும்பு, செப்.27
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாம் முறையாக ஜனாதிபதித் தேர்தலில், போட்டியிடுவதை பூரணமாக நிராகரிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத்.
"1978ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தின் அடிப்படையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாம் தவணைக்காக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். அதனால் மூன்றாம் முறையாகவும் அவர் போட்டியிடக் கூடிய சட்ட ரீதியான தகுதி கிடையாது"- என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"ஜனாதிபதித் தேர்தல் குறித்து இன்னமும் எவ்வித தீர்மானமும் கட்சி எடுக்கவில்லை. தேர்தல் பற்றி அறிவிக்கப்படும் போது தீர்மானங்கள் எடுக்கப்படும். தற்போதைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாம் தவணைக்காகப் போட்டியிடுவதைத் தடுக்கும் வகையில் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.
1978ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஜனாதிபதியாக இரண்டு தடவைகள் பதவி வகித்தவர் மூன்றாம் தவணைக்காக போட்டியிட முடியாது. அதே போன்று எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் போட்டியிட முடியாது. ஏற்கனவே இரண்டு தடவைகள் பதவி வகித்து விட்டார்.
2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் ஜனாதிபதிகள் இரண்டு தடவைகளுக்கு மேல் ஆட்சி வகிக்க முடியும். 2005ஆம் ஆண்டிலும், 2010ஆம் ஆண்டிலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்வதாகக் கூறியே ஜனாதிபதி மஹிந்த தேர்தலில் போட்டியிட்டார்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



அமெரிக்காவுக்கு சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, பிரபல இந்திய திரைப்பட நடிகை கஜோலைச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பு நியூயோர்க்கில் நடைபெற்றுள்ளது. நிதி சேகரிப்பு நிகழ்ச்சி ஒன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க் சென்றுள்ளார். அவருடன் ஷிரந்தி ராஜபக்ஷவும் சென்றுள்ளார். (ற)

# அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஹம்பாந்தோட்டையில் போராட்டம்

கொழும்பு, செப்.27
ஊவா தேர்தலுக்குப் பிந்திய வன்முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஹம்பாந் தோட்டையில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.
ஹம்பாந்தோட்டை மாவட்டம் ராஜபக்ஷவினரின் கோட்டை என்பதால், இதுவரை காலமும் அவர்களுக்கு எதிராக யாரும் அங்கு எந்தவித ஆர்ப்பாட்டமோ, போராட்டமோ நடத்தப்பட்டதில்லை. ஆனால் அண்மைக்காலமாக ஹம்பாந்தோட்டையிலும் அரசுக்கு எதிரான அமைப்புக்களால், ஆர்ப்பாட்டங்கள் உருவாகத் தொடங்கியுள்ளன.



மாவட்டத்துக்குள் நடக்கும் விடயங்களின் போது அரச எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் அவற்றின் செயற்பாடுகள் இருந்தன. தற்போது மாவட்டத்திற்கு வெளியே ஊவா மாகாணத்தில் நடக்கும் தேர்தலுக்குப் பிந்திய வன்முறைகளுக்கு எதிராகவும் ஹம்பாந்தோட்டை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பதுளையில் ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்தும் ஆர்ப்பாட்டத்தின் போது கண்டனக் கோஷங்கள் எழுப்பப்பட்டிருந்தன.
வன்முறைகள் மற்றும் தாக்குதல்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர். (ற)

## ஐ.தே.கவில் இணையவுள்ள் ஆளும் கட்சி எம்.பிக்கள்!

கொழும்பு, செப்.27
ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்துகொள்வதற்கு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தயாராக இருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல.
பொதுத் தேர்தலொன்று விரைவில் நடத்தப்பட வேண்டுமென அரசிடம் கோரிக்கை விடுத்த கிரியல்ல , ஐ.தே.கவுடன் இணையவுள்ள ஆளுங் கட்சி உறுப்பினர்கள், இது தொடர்பில் தன்னுடன் பேச்சு நடத்தினர் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ற)



# சட்ட மூலங்களை மீளாய்வு செய்வதற்கு அரசு நடவடிக்கை

கொழும்பு, செப்.27
இலங்கை அரசு 1956 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியிலிருந்து 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அனைத்து சட்ட மூலங்களையும் மீளாய்வு செய்வதற்கும், தேவையானவற்றை ஒன்றிணைப்பதற்கும் தீர்மானித்துள்ளதாக அரச சட்ட வரைஞர் திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியான வருண சாந்த டி சில்வா தெரிவித்தார்.
அரச சட்ட மூலங்கள் பலவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றை சட்ட மூலங்களுடன் இணைத்துக் கொள்வதன் மூலமாக பொது மக்கள், சட்டவாளர்கள், நீதிபதிகள் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் நன்மை அடைவதற்கான சாத்தியம் உள்ளது.
பிரதான சட்ட மூலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களைக் கண்டுபிடிப்பதில் ஏற்படும் தாமதங்களால் நீதிமன்றங்களில் வழக்குகள் இடம் பெறும் போது வீணான தாமதங்கள் ஏற்படுகின்றன.
தற்போது அரச சட்ட வரைஞர் திணைக்களம் இந்த வேலைகளைக் கையாண்டு வருகின்றது. இது போன்றதொரு நடவடிக்கை 1956 ஆம் ஆண்டுபிரதம நீதிபதியாக ஹேயாபச நாயக்க இருந்த போதும் இடம்பெற்றது.
1956 ஆம் ஆண்டிலிருந்து இது வரை 10 ஆயிரம் சட்ட மூலங்கள் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன.
இது தொடர்பாக ஜனாதிபதி அமைச்சரவைப் பத்திரமொன்றை அமைச்சரவையின் ஒப் புதலுக்குச் சமர்ப்பித்தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)



# பாம்பு மனிதன்

இந்தோனேஷியாவில் இளைஞன் ஒருவனுக்கு 41 நாள்களுக்கு ஒருமுறை தோல் உரிவதால் அவன் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளான்.

டாங்கராங் நகரில் வசிக்கும் அரி எனும் இளைஞன் எர்த்ரோடெர்மா என்ற சிவப்புத் தோல் நோயால் பாதிக் கப்பட்டுள்ளான். இந்த இளைஞனுக்கு 41 நாள்களுக்கு ஒரு முறை உடலில், பாம்புத் தோலைப் போன்று தோல் உருவாகி அழிந்து மீண்டும் வருவது வழக்கமாகும்.

மேலும் ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை நீரில் மூழ்கி எழுந்தால்தான் அவனால் உயிர் வாழவே முடியும் என்பதால் நாள்தோறும் நீரில் மூழ்கி வாழ்கிறான். தனது தோல் சுருங்காமல் இருப்பதற்காக மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை உடலில் திரவம் ஒன்றையும் தடவிக்கொள்கிறான். அவ்வாறு செய்யாது விட்டால் அவனது உடல் சிலை போல் ஆகிவிடுகிறது. இதனால் அவனால் நகரக்கூட முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

அவன் தாய் கூறுகையில், இந்த கிராமத்தில் உள்ளவர்கள் இது தெய்வக் குற்றம் என்று நினைத்து வருகின்றனர். நான் கர்ப்பமாக இருக்கும் நேரத்தில் பல்லியைக் கொடுமை படுத்தியதால்தான் அரி இவ்வாறு பிறந்துள்ளதாக கிராம மக்கள் கூறுகின்றனர். மருத்துவர்களும் அவனது நோயைத் தீர்க்க வழியில்லை என்று கை விரித்துவிட் டனர். எனினும் தனது நோயைக் கண்டு மனம் நோகாத அவன், எல்லோருடனும் சகஜமாக பழகுகிறான்.

# பிஞ்சில் ஏறிய போதை

ஸ்லோவாக்கியாவில் பிரிவிட்சா நகரில் சில்வியா-மிரோஸ்லாவ் என்ற தம்பதியினர் தங்களது 4 மாதக் குழந் தையுடன் வசித்து வருகின்றனர். போதை பழக்கத்துக்கு அடிமையான இவர்கள், குழந்தையின் அழுகையை நிறுத்த க்ரிஸ்டல் மெத் என்ற போதைப்பொருளை குழந் தைக்குக் கொடுத்துள்ளனர்.

இதனை உட்கொண்ட சிறிது நேரத்திலேயே குழந்தை மயக்கமடைந்ததால் பதறிய இந்தத் தம்பதியினர் குழந் தையை மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். குழந்தைக்கு போதை மருந்து வழங்கியமை பரிசோத னையில் தெரியவரவே அதிர்ந்த மருத்துவர்கள் குழந்தையின் மூளை செயலிழந்து விட்டது என்றும் அது உயிர் தப்புவது மிகவும் கடினம் எனவும் கூறியுள்ளனர். இதனையடுத்து, போதையூட்டிய பெற்றோரைப் பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

# ஆர்யா வலையில்

நயன்தாரா, அனுஷ்காவைத் தொடர்ந்து, ஆர்யாவின் கவனம், ஹன்சிகாவை நோக்கித் திரும்பியுள்ளதாம். வெளிவராத ஒரு படத்தில், ஹன்சிகாவும், ஆர்யாவும் இணைந்து நடித் துள்ளனர்.

இதில், ஒரு காட்சியில் ஆர்யாவுடன் மிகவும் நெருக்கமாக நடித்ததை நினைத்து, தன் மீதான மதிப்பு பாதிக்கப்படுமோ என்ற கவலையில், படப்பிடிப்பிலேயே கண்ணீர் விட்டு அழுதாராம், ஹன்சிகா.

ஜெயம் ரவி கதாநாயகனாக நடிக்கும் ஒரு படத்தில், ஹன்சிகா கதாநாயகியாக நடிக்கிறார். இதில், சிறப்புத் தோற்றத்தில் ஆர்யா நடிக்கிறார். படப்பிடிப்பின்போது, பழைய பிரச்சினை களை மறந்து, இருவரும் கலகலப்பாக பேசு கின்றனராம். இதனால், ஆர்யாவால் மிகவும் விரும்பப்படும் நடிகைகளின் பட்டியலில் ஹன்சிகாவின் பெயரும் இடம்பெறும் என் கிறது, பொலிவூட் வட்டாரம்.



அடுத்தது யார் ?

# நச்சின்னு கடி



தன் தவறை உணர்ந்து அடிபணிபவன் நேர்மையானவன் !
தனக்குத் தெரியாததை ஒத்துக்கொள்பவன் பண்டிதன் !
எந்தத் தவறும் செய்யாமல், எல்லாம் தெரிந்தும் அடிமையாகிறவன் கணவன் !!!

# ரிலாக்ஸா வாசியுங்க



"எல்லா ஆண்களுக்கும் வேலை கொடுப்பது எப்படி?" என்று மன்னன் கேட்டான்.

அமைச்சர் சொன்னார்,

"ஆண்கள் எல்லோரையும் ஒரு தீவிலும், பெண்களை எல்லாம் வேறு ஒரு தீவிலும் குடியேற்றுங்கள் எல்லா ஆண்களுக்கும் வேலை கொடுத்து விடலாம்"

"விளங்கவில்லையே" என்று மன்னன் சொல்ல, அமைச்சர் தொடர்ந்தார்,

"எல்லா ஆண்களும் மற்றைய தீவுக்குச் செல்ல படகு கட்ட ஆரம்பித்து விடுவார்கள், மன்னா!"

# ஓவியப் பெண்



நியூயோர்க்கை சேர்ந்த 21 வயதுடைய பெண்ணொருவர் தன்னுடைய வித்தியாசமான ஓவிய ஆற்றலால் உலகில் பலருடைய பார்வைகளைத் தம்மீது விழவைத்துள்ளார். ஓவியம் வரைவதில் திறமைமிக்க இந்தப் பெண், தமது எண்ணங்களை வண்ணமாக்க காகிதத்தைத் தேடவில்லை. மாறாகத் தமது முகத்தையே வண்ணங்களால் மின்னச் செய்துள்ளார்.

அழகான சிங்கங்கள் முதல் பதற வைக்கும் பேய்கள் எனப் பல வடிவங்களை இவர் தனது முகத்தில் வரைகிறார். இவர், தனது முகத்தில் வரையும் ஓவியங்களை 'இன்ஸ்டகிராமில்' பதிவேற்றம் செய்து வருகிறார். இவரது இணையத்தளத்தை 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பின்தொடர்கின்றனர்.

நான் இதனை ஒரு பொழுது போக்காகவே செய்து வருகின்றேன். இரவில் எனது படுக்கையறையில் வரைந்து பார்ப்பேன். அப்போதுதான் யாரும் என்னைப் பார்க்கமாட்டார்கள். அதுமட்டுமின்றி, நான் யாருக்கும் இவ்வாறு செய்து வரைந்து காண்பிப்பதுமில்லை.

ஒருநாள் நான் வெளியிலுள்ள மின்விளக்குகளை அணைப்பதற்காக சென்றேன். அப்போது என்னைப் பார்த்துவிட்டு பாதையில் சென்றவர்கள் பயந்தே போய்விட்டனர். சிலர் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றுவிட்டனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.



# சினிமாவில் நடிக்காதது ஏன்?

சின்னத்திரை தொடர் கதாநாயகிகளில் முக்கியமானவர் சந்தோஷி. தற்போது இளவரசி தொடரில் நடித்து வருகிறார். சினிமா நடிகையாக வாழ்க்கையைத் தொடக்கியவர். சினிமாவில் தொடர்ந்து நடிக்காதது ஏன் என்பது பற்றி அவர் தெரிவித்ததாவது;

பாபா படத்தில் மனிஷா கொய்ராலாவின் தங்கையாக நடித்தேன். அதன் பின்னர் ஜெய் என்ற தெலுங்குப் படத்தில் கதாநாயகியாக அறிமுகமானேன். தொடர்ச்சியாக மூன்று தெலுங்குப் படங்களில் நடித்தேன். அதன் பின்னர் கன்னட திரைப்படத்திலும் கதாநாயகியாக நடித்தேன். இறுதியாக அகத்தியன் இயக்கிய காதல் சாம்ராஜ்யம் படத்தில் கதாநாயகியாக நடித்தேன். அந்தப் படம் வெளிவரவில்லை. இதனால் சினிமாவில் உரிய இடத்தை பிடிக்க முடியாமல் போனது. அதன் பின்னர் வந்தது எல்லாமே கவர்ச்சியான கதாபாத்திரம்தான். அப்படி நடிப்பது எனக்கு பிடிக்கவில்லை அதனால் சினிமாவில் நடிப்பதைக் குறைத்துக் கொண்டு சின்னத்திரைக்கு வந்து விட்டேன். இருந்தாலும் வித்தியாசமான கதாபாத்திரங்கள் கிடைத்தால் நடிப்பேன். மற்றபடி யாரையும் தேடிப்போய் வாய்ப்புக் கேட்க மாட்டேன் என்கின்றார்.

# நீங்கள் நன்றாக தூங்குகிறீர்களா?



எட்டு மணி நேரம் வேலை, எட்டு மணி நேரம் தூக்கம் என்று வாழ்க்கைக்குரிய குறைந்தபட்ச அர்த்தத்துடன் வாழ்ந்து வந்தார்கள் எமது முன்னோர்கள். எதையாவது துரத்திக்கொண்டு ஓடிக்கொண்டே இருக்கும் இன்றைய வாழ்க்கையில் தூக்கம் 6 மணி நேரம், வேலை 16 மணி நேரம் என்று மனிதர்கள் தலைகீழாக மாறிவிட்டார்கள். போதாது என்று, 24 மணி நேரமும் ஓடுகின்ற தொலைக்காட்சி, போர்வைக்குள் புகுந்துகொண்ட பிறகும் கைபேசியில் முகநூல் மேய்ச்சல் என்று நம்மைத் தூங்கவிடாத விடயங்கள் பெருகி விட் டன. எல்லாவற்றையும் விரல் நுனியில் செய்து முடித்து விட முடியும் என்கிற நிலை இருக்கின்ற போதும்கூட நம்மில் பலருக்கும் முதல் நாள் தூக்கம் கண்களை அழுத்திக்கொண்டே தான் இருக்கின்றது.

நமக்கு நாமே புத்துணர்வு ஏற்படுத்திக் கொள்வதற்குத் தூக்கம் மிகமிக அவசியமான ஒன்று. வளர்ந்த மனிதர்கள் அனைவருக்கும் 6 முதல் 8 மணி நேரத் தூக்கம் அவசியம். மாதவிடாய்க் காலங்களில் பெண்களுக்குத் தூக்கத்தின் நேரம் கூடும். புதிதாகப் பிறந்த குழந்தைகள் 18 மணி நேரம் முதல் 20 மணி நேரம் தூங்குகின்றனர். இவர்களைத் தவிர, தூக்கமின்மையால் அதிக அவதிக்குள்ளாகும் மற்றொரு பிரிவினர் முதுமையடைந்தவர்கள். பகலில் தூங்கு வது, முறையான உடற்பயிற்சி இல்லாமல் இருப்பது போன்ற வற்றால் இவர்களுடைய இரவுத் தூக்கம் பாதிக்கப்படுகிறது.

முறையான தூக்கம் இல்லையென்றால் கவலை, மனஅழுத்தம், அதிகம் கோபப்படுதல், ஞாபக மறதி மற்றும் சக மனிதர்களுடனான தகவல் தொடர்புப் பரிமாற்றத்தில் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும். மொத்தத்தில் உங்களுடைய செயற்பாட்டுத் திறன் பாதிக்கப்படும்.

அத்துடன் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, இதய நோய்கள் மற்றும் பக்கவாதம் போன்றவையும் ஏற்பட வாய்ப்பு உண்டு என்கிறார்கள் மருத்துவர்கள். எனவே தினமும் குறிப்பிட்ட நேரத்தில் படுக்கச் சென்று, குறிப்பிட்ட நேரத்தில் விழித்துக்கொள்ளப் பழக வேண்டும். தூங்குவதற்கு 2 மணி நேரத்துக்கு முன்பு இரவு உணவை உட்கொள்ள வேண்டும். காலையில் நடைப் பயிற்சி மேற்கொள்வது நல்ல தூக்கத்துக்குக் கைகொடுக்கும். ஒரு டம்ளர் பால் அல்லது ஒரு வாழைப்பழம் நல்ல தூக்கத்தைத் தரும். தூங்குவதற்கு முன்பு கடுமையான உடற் பயிற்சி மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். இவ்வாறான விடயங்களை நாளாந்தம் பின்பற்றினாலே போதும் நீங்கள் நன்றாகத் தூங்கலாம்.

# நினைவாற்றலை அதிகரிக்கும் உணவுகள்

பால், தயிர், சத்துள்ள உணவு வகைகளால் அதிக அள்வு ஆற்றல் கிடைக்கிறது. அதனால் சோம்பேறித்தனம் நீங்கிச் சுறு சுறுப்பு அதிகமாகிறது.

உடலில் உள்ள எந்த உறுப்பையும் விட அதிக அளவு ஒட்சிசனை எடுத்துக்கொள்வது மூளைதான். தேவையான சத்துணவு, தேவையான அளவு கிடைக்காத போது மூளைக்குக் கிடைக்கும் ஒட்சிசன் அளவு குறைகிறது. அதனால் மூளையின் செல்கள் அழிந்துவிடுதல், ஞாபகமறதி நோய், ஞாபக சக்தியை ஒரு முகக் கவனத்துடன் செயற்படும் ஆற்றலை இழப்பது, பலவீனம், குழப்பம், நோய் தாக்குதல் முதலியவை ஏற்படுகின்றன.

மூளைக்கு எப்போதும் ஞாபகசக்தி இருக்க வேண்டும். அதற்குக் கொழுப்பு, வெண்ணெய், நெய் முதலியவற்றிலிருந்து கிடைக்கும் கொழுப்பு தீங்கானது. மூளைக்கு உதவும் சரியான உணவைத் தேர்ந்தெடுக்க ஓர் எளிய வழி உண்டு. ஒளிரும் நிறத்தில் இருக்கும் உணவு வகைகள் மூளையின் பசியைப் போக்கும் முக்கியஉணவு வகைகளாகும்.

ஏனென்றால், இந்த உணவு வகைகளில் போதுமான அளவு விற்றமின்கள், தாது உப்புகள் போன்றவை உள்ளன. ஞாபகசக்தி குறைவாக இருப்பவர்கள் தோடை, கொய்யா, திராட்சை, அப்பிள், வாழைப்பழம், தக்காளி, பேரீச்சம்பழம், அன்னாசி, பசலைக் கீரை, கொத்துமல்லி, வல்லாரை, முருங்கைக் கீரை, கறிவேப்பிலை, பச்சைப் பட்டாணி, பாசிப் பருப்பு, கொண்டைக் கடலை, பாதாம் பருப்பு, சோயா, சோயா எண்ணெய், பால், தயிர், அரிசி, கோதுமை போன்ற உணவு வகைகள் புதிய இரத்தச் செல்கள் உருவாகவும் மூளை சுறுசுறுப்பாக இருக்கவும் உதவுகின்றன. பால், தயிர், சத்துள்ள உணவு வகைகளால் அதிக அளவு ஆற்றல் கிடைக்கிறது. அதனால் சோம்பேறித்தனம் நீங்கிச் சுறுசுறுப்பு அதிகமாகிறது.



அரிசி, கோதுமை, கேழ்வரகு போன்ற உணவு வகைகளுடன், இரும்புச் சத்து நிறைந்துள்ள பேரீச்சம்பழம், பட்டாணி போன்றவற்றையும் உணவில் சேர்த்துக்கொள்வதால் கோபம், பதற்றம் போன்ற உணர்ச்சிகள் மெல்ல மெல்லக் குறைந்து நரம்பு மண்டலம் அமைதியாகி மூளை சுறுசுறுப்பாக இருக்கும்.

மாதமொரு முறை கோதுமை அல்வா சாப்பிடுவதாலும், இயற்கை இனிப்பு வகைகளைச் சாப்பிடுவதாலும் ஞாபக சக்தி அதிகரிக்கிறது.

சிந்தனை தெளிவும் உண்டாகிறது. மனதை அமைதிப்படுத்தித் தன்னம்பிக்கையை உணர்த்துகிறது வெள்ளைப் பூண்டு. மூளையின் செல்கள் வேகமாக அழிந்து போய்விடாமல் பாதுகாப்பதில் வெள்ளைப் பூண்டுக்கு நிகர் வேறு இல்லை. ஞாபகச் சக்தி உள்ள உயிரினங்கள் எல்லாம் நீண்ட நாள் உயிர் வாழ்கின்றன.

# மஞ்சள் ஆரோக்கியத்தின் ஆரம்பம்

மஞ்சளின் பிரகாசமான நிறத்துக்கு, அதிலுள்ள கர்கியூமின் என்ற நிறமியே காரணம். இது மிகவும் முக்கியமான வேதிப்பொருள். சக்தி வாய்ந்த குணப்படுத்தும் பண்புகளைக் கொண்டது.

அழற்சி-வீக்கத்தைக் குறைக்கும் அற்புதமான நிறமி. மார்புச் சளி அல்லது கன்றிப் போன ஊமைக் காயத்துக்குப் பாலில் மஞ்சள் தூள் கலந்து குடிப்பது சிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது.

இதன் குணமளிக்கும் பண்பை அதிகரிக்க, பனங்கற்கண்டு சேர்ப்பது கூடுதல் பயன் தரும். இதனுடன் கொஞ்சம் ஏலக்காய் சேர்ப்பது ருசியைக் கூட்டுவதுடன், கவலையையும் போக்கும்.

காரணம், ஏலக்காய் உற்சாக மனநிலையைத் தரக்கூடியது. முதுமையைத் தள்ளிப்போடுவதற்குப் படுக்கப் போகும் முன்னர் பலரும் மஞ்சள் கலந்த பாலை அருந்துவது வழக்கம். அதே நேரம் பக்கெற் பாலுக்குப் பதிலாக, பசுப்பாலை இதற்குப் பயன்படுத்துவது சிறந்தது.

சூடாக்கப்பட்ட கடுகு எண்ணெயும் மஞ்சள் பொடியும் சேர்ந்த கலவை, சுளுக்கையும் தசைப் பிசகுப் பிரச்சினைகளையும் குறைக்கும். சேதமடைந்த தோலைச் சீரமைக்க உதவும். மஞ்சள் தூள் கலந்த பால், முடக்குவாதத்தால் ஏற்படும் மூட்டு வீக்கங்களைக் குறைப்பதாகவும் நம்பப்படுகிறது. நோய் எதிர்ப்பாற்றலை வலுவாக்குகிறது.

செரிமானத்தை எளிதாக்குவதுடன், கருப்பை கட்டிகள், கருப்பை நீர்க்கட்டி களையும் குறைக்கிறது.



அழற்சி வீக்கத்தைக் குறைப்பது மட்டுமல்லாமல், பக்றீரியாவையும் அழிக்கக்கூடியது.

இரத்தத்தில் உள்ள சீனியின் அளவை முறைப்படுத்தவும் சிலர் மஞ்சளைப் பயன்படுத்துகிறார்கள்.

# நலம் தரும் நடைப்பயிற்சி

இன்றைய இயந்திர மயமான வாழ்க்கைச் சூழலில், உடலுழைப்பு என்பது அனைவருக்கும் குறைந்துவிட்டது. நமது உணவு முறையும் மாறிவிட்டது. இயற்கை உணவு வகைகள், நம்மை விட்டு விலகிச் சென்று விட்டன. செயற்கை உணவு வகைகளும் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளும் நம்மை ஆக்கிரமித்துவிட்டன.

இதனால், இளமையிலேயே உடற்பருமன், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, பக்கவாதம் என்று நோய்களின் வரிசை நீள்கிறது.



இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்றால், உடற்பயிற்சி செய்வது தான் சிறந்த வழி. உடலுக்கு நன்மை செய்யும் உடற் பயிற்சிகளில், நடைப்பயிற்சி மிகவும் முக்கியமானது. சிரமமில்லாதது. எல்லோருக்கும் ஏற்றது. உச்சி முதல் உள்ளங்கால் வரை உடல் முழுமைக்கும் ஒரே நேரத்தில் பயிற்சி கொடுக்க வேண்டுமானால், அது நடைப்பயிற்சியால் மட்டுமே முடியும்.

வேறு எந்த உடற் பயிற்சியைச் செய்ய முடிவெடுத்தாலும், அதற்கெனப் பிரத்தியேகக் கருவிகளும் பயிற்சியாளரும் பயிற்சி மையங்களும் தேவைப்படும். செலவும் ஆகும்.

ஆனால், நடைப்பயிற்சிக்கு இவை எதுவும் தேவை யில்லை. பணச் செலவும் இல்லை. இதனால் தான் நடைப் பயிற்சியை 'உடற்பயிற்சிகளின் அரசன்' என்கிறோம்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த நடைப் பயிற்சி பெரிதும் உதவுகிறது. நீரிழிவு நோயாளிகளுடைய தசைகளில் சோம்பலுடன் சுருண்டு கிடக்கும் மெல்லிய இரத்தக் குழாய்கள், நடைப்பயிற்சியின் போது பல கிலோ மீற்றர் அளவுக்கு விரிந்து கொடுக்கின்றன.

நடைப்பயிற்சி இரத்தக் குழாய்களின் மீள்திறனை அதிகப்படுத்துவதால், உயர் இரத்த அழுத்தம் கட்டுப்படுகிறது.

வேகமாக நடக்கும்போது இதயத் துடிப்பு அதிகரிப்பதால், இதயத் திசுக்களுக்கு இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது.

இதனால், இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவது தவிர்க்கப் படுகிறது. அத்துடன் மாரடைப்பு, பக்கவாதம் ஆகியவை தாக்கும் வீதம் குறையும்.

ஒரு மணி நேரம் வேகமாக நடக்கும்போது உடலில் 300 கலோரி வரை சக்தி செலவாகிறது. இந்தச் சக்தியைத் தருவது கொழுப்பு. இதன் பயனாக, உடலில் தேவையற்ற கொழுப்பு கரைகிறது. இரத்த கொலஸ்ரோல், உடல் பருமன் ஆகிய பாதிப்புகளும் குறைவடைகிறது நடைப் பயிற்சியால் எலும்பைச் சுற்றியுள்ள தசைகள் வலுவடைகின்றன.

முழங்கால் மூட்டுகள் உடல் எடையைத் தாங்குவதற்குச் சிரமப்படும்போதெல்லாம், அந்த எடையைக் கால் தசைகள் தாங்கிக் கொள்கின்றன.

இதன் பயனாக, முழங்கால் வலி வருவது தடுக்கப்படுகிறது. இவை தவிர, உணவு நன்றாகச் செரிமானம் ஆகிறது. மலச்சிக்கல் ஏற்படுவதில்லை. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. நன்றாக உறங்க முடிகிறது. நாள் முழுவதும் புத்துணர்வுடன் செயற்பட முடியும்.

# பாப்பரசர் வருகையை முன்னிட்டு மன்னாரில் விசேட டெங்கு ஒழிப்பு

## கொழும்பில் இருந்து விசேட குழு

மன்னார், செப். 27
பரிசுத்த பாப்பரசர் மன்னார் மடு தேவாலயத்துக்கு எதிர் வரும் ஜனவரி மாதம் வருகை தரவுள்ளதை அடுத்து மன்னாரில் மேலதிக விசேட டெங்கு ஒழிப்பு வேலை திட்டம் ஒன்றைக் கொழும்பிலிருந்து வருகைதந்துள்ள டெங்குக் கட்டுப்பாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் தலைமையிலான குழு முன்னெடுத்து வருகிறது.
டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மன்னார் நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் இரண்டு நாள்களில் 5 ஆயிரம் வீடுகளைப் பரிசோதனை செய்து டெங்கு இல்லாத மன்னார் மாவட்டத்தை உருவாக்க முதற்கட்ட வேலைத்திட்டம் முடுக்கி விடப்பட்டுள்ளது.



அண்மைக் காலமாக மன்னார் மாவட்டத்தில் டெங்கு பரவும் அபாயம் மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதிகளிலும், மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலும் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து கடந்த 22ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை டெங்கு வேலைத்திட்டம் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.
இந்த நிலையில் பரிசுத்த பாப்பரசர் மன்னார் மடு தேவாலயத்துக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் வருகைதரவுள்ளதை அடுத்து மேலதிக விசேட டெங்கு ஒழிப்பு வேலை திட்டம் ஒன்றை கொழும்பிலிருந்து வருகைதந்துள்ள டெங்கு கட்டுப்பாட்டுத் திணைக்களக் குழு முன்னெடுத்துள்ளது.
இந்த நிலையில் முதற்கட்டமாக நேற்று வெள்ளிக்கிழமை 5 பிரிவுகளாக எமில் நகர், பனங்கட்டுகொட்டு, எழுத்தூர், சின்னக்கடை, சாந்திபுரம் ஆகிய பகுதிகளிலும் - இன்று சனிக்கிழமை 5 பிரிவுகளாக பள்ளிமுனை, உப்புக்குளம், மூர் வீதி, பெரிய கமம், சாவற்கட்டு ஆகிய பகுதிகளிலும் - டெங்கு இல்லாத மன்னாரை உருவாக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.
மழை காலத்துக்கு முன்னர் டெங்கு அல்லாத மன்னாரை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இதற்கென பொலிஸ், இராணுவம், கடற்படை, பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், ஜி.எப்.ரி.எம். தன்னார்வுத் தொண்டர்கள் மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் உள்ளடங்கலாக சுமார் 300 பேர் டெங்கு ஒழிப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (த)

# வவுனியா வடக்கு பிரதேச இலக்கிய விழா

வவுனியா, செப்.27
வவுனியா வடக்கு பிரதேச செயலக கலை இலக்கிய பெருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை நெடுங்கேணி கந்தசாமி ஆலய வளாகத்தில் இடம்பெற்றது. வவுனியா வடக்கு கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் வவுனியா வடக்கு பிரதேச் செயலர் க.பரந்தாமன் தலைமையில் இடம்பெற்றஇந்தநிகழ்வுகாலை 9 மணிக்கு நெடுங்கேணி மாகாவித்தியாலய முன்றிலில் இருந்து பண்பாட்டு பேரணியுடன் ஆரம்பமாகியிருந்தது. இதன்போது தமிழர்களின் பாரம்பரிய கலைகள், பொய்க்கால் குதிரை ஆட்டம், கரகாட்டம், வேடன் ஆட்டம், காவடி, கோலாட்டம் என்பவற்றுடன் தமிழ் வீரர்கள் மற்றும் பெரியார்களின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தியும் பண்பாட்டு பேரணியில் அடங்கியிருந்தது. இதனையடுத்து மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கலை, பண்பாட்டலுவல்கள் கல்வி அமைச்சின் பிரதி பணிப்பாளர் திருமதி உசா சுபலிங்கமும், விருந்தினர்களாக வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.மதிதரன், வவுனியா வடக்கு கல்வி பணிப்பாளர் திருமதி க.பராசக்தி, வவுனியா தமிழ்ச் சங்க செயலாளர் தமிழருவி த.சிவகுமாரன், வவுனியா வடக்கு பிரதேச சபை செயலாளர் க.பிரபாகரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (த)

# கடை தீக்கிரையான வர்த்தகருக்கு நிதியுதவி

மல்லாவி, செப். 27
மல்லாவியில் கடந்த மாதம் 10 ஆம் திகதி மின்னொழுக்கினால் கடையொன்று எரிந்து தீக்கிரையானது.
இந்தக் கடையின் உரிமையாளருக்கு மல்லாவி வர்த்தக சங்கத்தினரால் நிதியுதவி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
குறித்த தீ விபத்தில் பல லட்சம் ரூபா மதிப்பிலான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
மல்லாவி வர்த்தகர் சங்கத்தினால் நேற்றுமுன்தினம் 4 லட்சத்து 16 ஆயிரம் ரூபா பணம் குறித்த வர்த்தகருக்கு வழங்கப்பட்டுள்ளது. (த-415)

# முன்பள்ளி மாணவரின் அறிவூட்டும் ஊர்வலம்

'பாசத்துடன் பிள்ளைகளைப் பாதுகாப்போம்' எனும் தொனிப் பொருளில் முன்பள்ளிபிள்ளைகளின் கல்வி மற்றும் ஆளுமையை விருத்தி செய்வதற்காக பெற்றோர்களுக்கான ஆறிவூட்டல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னாரில் இடம்பெற்றது.
மன்னார் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மன்னார் உலக தரிசன நிறுவனத்தின் நிதி உதவியுடன் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம் பெற்றது.
மன்னாரில் உள்ள 10 முன்பள்ளி மாணவர்களை ஒன்றிணைத்து மாணவர்களின் பொற்றோர் மற்றும் ஆசிரியர்கள் இதனை நடத்தினார்கள்.



மன்னார் சிறுவர் பூங்காவுக்கு முன்பாக நேற்றுக் காலை 9 மணியளவில் குறித்த ஊர்வலம் ஆரம்பமாகி மன்னார் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.
இதில் கலந்து கொண்ட முன்பள்ளி மாணவ, மாணவிகள் பல்வேறு வசனாங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். (த-56)

# தலைமன்னார்ப் பகுதியில் இடி தாக்கி இருவர் காயம்

மன்னார், செப். 27
தலைமன்னார் பியரில் இடி விழுந்ததில் கணவனும் மனைவியும் காயமடைந்ததுடன் வீடும், அங்கிருந்த மின்சார உபகரணங்களும் பெரும் சேதத்துக்கு உள்ளாகின.
இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை மன்னார் பகுதியில் இடி மின்னலுடன் இலேசான மழை பெய்தது. இரவு7.30 மணியளவில் தலைமன்னார் பியரில் தலைமன்னார் தபால் அலுவலகத்தில் கடமை புரியும் என்.பாலச்சந்திரன் என்பவரும் அவரின் மனைவியும் வீட்டில் இருந்தவேளை அவர்களின் வீட்டின் சுவரில் இடி விழுந்துள்ளது.
இதனால் கணவனும் மனிவியும் காயங்களுக்கு உள்ளானதுடன் வீடு சிறு சேதத்துக்கு உள்ளாகியது. அங்கு பொருத்தப்பட்டிருந்த மின் வயர்கள் முற்றாக எரிந்ததுடன் மின்சார உபகரணங்கள் யாவும் சேதம் அடைந்துள்ளன என தலைமன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த)

# மன்னார் பொது வைத்தியசாலையின் கண்ணியல் பிரிவுக்குப் பொருள்கள்

மன்னார், செப்.27
மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் இயங்கி வரும் கண்ணியல் சிகிச்சை பிரிவுக்கு மூக்குக் கண்ணாடி விற்பனை நிலைய உரிமையாளரான இ.லேனாட் லக்சன் என்பவர் சுமார் 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருள்களை நேற்று வெள்ளிக்கிழமை காலை அன்பளிப்பாக வழங்கினார்.



மன்னார் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வின்சன் ரூபன் லெம்பேட் மற்றும் கண் வைத்திய அதிகாரி க.யூட் ரவி பச்சேக் ஆகியோரிடம் குறித்த பொருள் களை அவர் கையளித்தார். (த-56)

# மினி சூறாவளியினால் 201 குடும்பங்கள் பாதிப்பு

வவுனியா, செப். 27
வவுனியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஏற்பட்ட மினிசூறாவளியால் 201 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன என மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
மன்னாங்குளம் பம்பைமடு கூமாங்குளம், மரக்காரம்பளை, நெளுக்குளம், இரர்சேந்திரங்குளம், உக்கிளாங்குளம், கற்பகபுரம் உள்ளிட்ட பலகிராமங்கள் பாதிப்படைந்துள்ளன. வவுனியா மாவட்டத்தில் மினிசூறாவளி காரணமாக 201 குடும்பங்களைச் சேர்ந்த 259 பேர் பாதிப்படைந்துள்ளனர். இவர்களில் 7 குடும்பங்களின் வீடுகள் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளதுடன் 194 குடும்பங்களின் வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன எனவும் அவர்கள் தெரிவித்தனர். (த)

# வவுனியாவில் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு கதிரைகள் வழங்கல்

வவுனியா, செப். 27
வவுனியா மாவட்டத்தில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட 10 கிராமங்களின் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்குக் கதிரைகள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.
வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராஜாவினால் மாகாண சபையால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வவுனியா மாவட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களின் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு தலா 50 கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன.



வவுனியா உள்வட்ட வீதியில் அமைந்துள்ள பல நோக்குப் பயிற்சி மண்டபத்தில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் து.மு பெலிசியஸ் தலைமை தாங்கினார். வவுனியா நகர கோட்டக் கல்வி அதிகாரி எம்.பி.நடராஜ், வட மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டு கதிரைகளை வழங்கினர்.
இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராஜா உரை நிகழ்த்தும் போது:-
மாகாண சபையால் எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி சரியான முறையில் மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்பதே எமது நோக்கம். ஆகவே பொருளாதார சிக்கலில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 10 கிராமங்களைத் தெரிவு செய்து அங்குள்ள மக்கள் பயன் பெறும் வகையில் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன.
இந்தக் கதிரைகள் மக்களின் தேவைக்கேற்ப கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒழுங்கு படுத்தலுடன் வழங்கப்படும் - என்றார். (த-421)

# உயரதிகாரியின் முடிவினால் பழுதடையும் உருளைக்கிழங்கு

## வறட்சிப் பாதிப்புக்கு வழங்கவென எடுத்து வரப்பட்டவை



தென்மராட்சி, செப்.27

வறட்சி நிவாரணமாக அரசால் வழங்கப்பட்ட உருளைக் கிழங்கு விநியோகத்தை குறிப்பிட்ட ஒரு இடத்தில் வைத்தே மேற் கொள்ள பிரதேச உயர் அதி காரி எடுத்த முடிவால் பெருமளவு கிழங்கு பழுதடைந்து போயுள்ளது.

இதனால் நாள்கள்செல்லச்செல்ல மக்களுக்கான விநியோக அளவின் தொகையும் குறைவடையலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட செயலகத்தால் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு 10 ஆயிரத்து 741 குடும்பங்களுக்கு வழங்கவென 53 ஆயிரத்து 705 கிலோ உருளைக்கிழங்கு வழங்கப்பட்டது.

இவை கொடிகாமம், கைதடி, சாவகச்சேரி ஆகிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கொடிகாமம், கைதடி ஆகிய இரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் மறுநாளே தமது கிளைக் கடைகள் மூலம் அனைத்துப்பயனாளிகளுக்கும் நிவாரண உருளைக்கிழங்கை விநியோகித்துள்ளன. சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மட்டும் பிரதேச உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் சங்கத் தலைமை அலுவலக களஞ்சியத்தில் வைத்துக் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் கிளை ரீதியாக விநியோகித்து வருகின்றனர்.

விநியோகம் தொடங்கி 7 ஆவது நாளானநேற்றுசுமார் 300கிலோ வரையான உருளைக்கிழங்குகள் பழுதடைந்துள்ளன. 23 கிளைகளைக் கொண்ட சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்று வரை பத்துக் கிளைகளைச் சேர்ந்த பொது மக்களுக்கே இவை விநியோகிக்கப்பட்டுள்ளன.

அனைத்துக் கிளைகளுக்கும் உரிய கிழங்கு விநியோகம் பூர்த்தியடைய இன்னமும் ஒரு வாரத்துக்கு மேல் செல்லும். இந்த நிலையில் பழுதடையும் கிழங்கின் தொகையும் அதிகரிக்கலாம்.

உரிய அதிகாரியுடன் சங்கத்தினர் தொடர்பு கொண்டு கிழங்கு பழுதடைவது பற்றிக் கூறியபோது, பழுதடையும் கிழங்கின் தொகைக்கேற்ப அளவில் குறைத்து வழங்குமாறு அவர் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விநியோக நாள் தொடர்ந்து நீடிக்குமாயின் கடைசியில் மிகக் குறைந்த நிறையான கிழங்கு தான்பயனாளிகளுக்குக்கிடைக்கலாமெனப் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பிரதேச சபையுடன் தொடர்புள்ள சட்டங்கள் மக்களின் பார்வைக்கு

## வலி.தென்மேற்குப் பிரதேச சபை நடவடிக்கை

வலி.தென்மேற்கு, செப்.27

பிரதேச சபையுடன் தொடர்புடைய சகல சட்டங்களையும் அதிகாரிகள் மட்டுமல்ல பொது மக்களும் அறிந்து கொள்ளுவதற்கு வசதியாக உள்ளூராட்சி அமைச்சினால் காலத்துக்குக் காலம் நிறைவேற்றப்படும் சட்டப் புத்தகங்கள் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் கீழுள்ள நான்கு உப அலுவலகங்களிலும் வைக்கப்படவுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் நிதிக் குழுக்கூட்டத்தில் இது குறித்து உறுப்பினர்களால் ஆராயப்பட்டுள்ளது. மேற்படி சபையின் நிதிக் குழுக் கூட்டம் தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற 30 ஆயிரம் ரூபாவுக்கு நூல்கள் வாங்குவது பற்றிக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

தேவையற்ற புத்தகங்களை வாங்கி அடுக்கி வைத்து இடத்தை நிரப்பாமல் நூல்களை வாங்கும்போது மாணவர்களின் கல்விப் பயன்பாட்டுக்குரிய நூல்களை வாங்குவதன் மூலம் மாணவர்கள் நன்மையடைவதுடன் பிரதேச சபைக்கும் திருப்தி ஏற்படும்.

பிரதேச சபையின் சட்ட திட்டங்கள் பற்றிய அறிவு அதிகாரிகளுக்கு மட்டுமல்ல பொதுமக்களுக்கும் தெரியாமலிருப்பதனால் வேலைத் திட்டங்களை நிறைவேற்றும் பொழுது தடங்கலும் தாமதமும் ஏற்படுகின்றன. இதனால் பிரதேச சபைக்கும் பாதிப்பு உண்டாகின்றது.

வேலைத் திட்டங்களை இலகுவாக மேற்கொள்ளுவதற்கு வசதியாக உள்ளூராட்சி அமைச்சினால் காலத்துக்குக் காலம் உருவாக்கும் சட்டப் புத்தகங்களை அதிகாரிகளும் பொதுமக்களும் நன்மையடையக் கூடிய வகையில் நான்கு உப அலுவலகங்களிலும் வைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டுமென்று கூட்டத்தில் உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(த-115)

# பொலிஸார்- கிராம சேவகர்கள் கூட்டத்தில் கடும் வாக்குவாதம்

## சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில்

வலி.வடக்கு செப். 27

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கிராம அலுவலர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் பலத்த வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த புதன்கிழமை பகல் உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் கிராம அலுவலர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், ஏனைய வெளிக்கள அலுவலர்களைக் கொண்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது கிராம அலுவலர்களினால் தமது பிரிவுகளில் இடம் பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டதுடன் பொலிஸார் நடவடிக்கைகள் எடுக்கவில்லையென்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டன.

இதனைப் பொலிஸார் மறுக்க முயன்றபோது கிராம அலுவலர்கள் பல குற்றச்செயல்களைப் பட்டியலிட்டுக் காட்டமுற்பட்டமையால் இந்த வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

குறிப்பாகப் புன்னாலைக்கட்டுவன் உட்பட பல இடங்களில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்கள், வீதிகளில் பெண்கள் மீது தகாத முறையில் நடந்து கொள்ளுதல் போன்ற பல விடயங்கள் கிராம அலுவலர்களால் முன்வைக்கப்பட்டன.

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் வாளால் வெட்டுவதற்கு வந்தவர்களிடம் இருந்து வாள் பறித்தெடுக்கப்பட்டுச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு ஒன்றரை மாதங்களுக்கு மேலாகின்றபோதிலும் வழக்கு எதுவும் பதிவு செய்யப்படாததுடன் நீதிமன்றத்திலும் குறிப்பிட்ட சான்றுப் பொருள் சமர்ப்பிக்கப்படவில்லையெனவும் குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன. பொலிஸார்இதனைச் சமாளித்துவிட்டுச் சென்றனர்.

(த-86)

# வரணி, மாசேரிப் பகுதிகளில் பொது மண்டபங்கள் தேவை

வரணி, மாசேரி மற்றும் வரணி வடக்கு கிராம சேவையாளர் பிரிவுகளுக்குப் பொது மண்டபங்கள் அரசினால் அமைத்துத் தரப்படவேண்டும் என பொது மக்கள், அபிவிருத்தி ஆர்வலர்கள் யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் கோரியுள்ளனர்.

கடந்த 2005 ஆம் ஆண்டு கால கட்டத்தில் நியாப் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வரணிப் பிரதேசத்தில் பல கிராம அலுவலர் பிரிவுகளில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன்ஒவ்வொருகிராமஅலுவலர் பிரிவுகளுக்கும் அந்தத் திட்டத்தின் கீழ் தலா ஒரு பொது மண்டபங்களும் அமைக்கப்பட்டு கொடுக்கப் பட்டன. இதன் பிரகாரம் குடமியன், வரணி, இயற்றாலை, கரம்பைக் குறிச்சி, இடைக்குறிச்சி, மற்றும் நாவற்காடுஆகிய இடங்களுக்குப்பொது மண்டபங்கள் அமைக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருந்தன.

இருந்தும்மாசேரிமற்றும்வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவுகள்மட்டும்அந்தக்காலகட்டத்தில் குறித்த திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படவில்லை பொதுக் கூட்டங்கள் நடத்துவதில் பிரதேச மக்கள், பொது நிறுவனங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எதிர்காலத்திலாவது குறித்த இரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் பொதுமண்டபங்கள் அமைக்க யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலர் முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பிரதேச மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (த-122)

# மருந்து விசிறியவர் மயங்கி வீழ்ந்தார்

தென்மராட்சி, செப். 27

மிளகாய்க் கன்றுகளுக்கு மருந்து விசிறியவர் மயங்கி வீழ்ந்தார். இவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப் பட்டார்.

அவர் கடந்த 24ஆம் திகதி மருந்து விசிறியதாகவும் நேற்று முன்தினம் மயங்கி வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் விடத்தற்பளையைச் சேர்ந்த ஜெயராஜசிங்கம் கவியரசன் (வயது-23) என்பவரே பாதிக்கப்பட்டவராவார்.

(த-9)

# நீர்வேலியில் இடி தாக்கி தென்னை மரங்கள் நாசம்



யாழ்ப்பாணம்,செப்.27

நீர்வேலி தெற்கில் திடீரென மின்னலுடன் கூடிய இடி தாக்கியதால்இரண்டுபயன்தரும்தென்னை மரங்கள் கருகி நாசமாகியதோடு வீடுகள் அருந்தப்பில் தப்பின.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம்பிற்பகல் ஒருமணியளவில் இடம்பெற்றுவானம்கருமுகிலாக மாறி மழை பெய்யும் என்ற ஆவலுடன் மக்கள் இருந்த சமயம் திடீரென மின்னலுடன் கூடிய கடும் இடி முழக்கம் ஏற்பட்டது. இந்த இடி இரண்டு தென்னை மரங்களைத் தாக்கின. ஆயினும் அருகில் உள்ள வீடுகள் தப்பித்துக் கொண்டன. அத்துடன் பிரதேசத்துக்கான மின்சாரமும் தடைப்பட்டது.

இடியின்தாக்கத்தினால்தென்னை மரங்கள் பற்றி எரியத் தொடங்கின. பல வீடுகளில் மின் சாதனப் பொருள்கள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. அரைக்கும் ஆலை ஒன்றின் மின் இயந்திரமும் பழுதடைந்தது.

உடனடியாக யாழ். மாநகர தீயணைக்கும் பிரிவுக்கும் அறிவிக்கப்பட்டது. தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்கு வந்து தீயை அணைத்து கட்டுப்படுத்தியதால் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (த-17)

# வலி.வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 57 தொழிலாளர்களுக்கு பணிக்கொடை

யாழ்ப்பாணம்.செப்.27

போர் சூழலால் தொழில் வாய்ப்பிழந்துள்ள வலி.வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 57 தொழிலாளர்களுக்கான பணிக்கொடை நிதியாக 1.03 மில்லியன் ரூபாவை யாழ்.மாவட்ட தொழில் திணைக்களம் நேற்று பெற்றுக் கொடுத்துள்ளது.

வலி. வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் 5 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய கைத்தொழிலாளர்கள் போர்க்காலச் சூழலில் தொழில் வாய்ப்பை இழந்து இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. லங்கா சிமெந்து தொழிற்சாலையில் பணியாற்றிய இவர்கள் 5 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய நிலையில் இவர்களுக்கானபணிக்கொடை வழங்கப்படாமல் இருந்தன.

எனினும் 5% தொழிலாளர்கள் முன்வந்து 2011 ஆம் தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை வழங்கியிருந்தனர். இதனடிப்படையில் தொழில் திணைக்களம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 100 வீதமான பணிக்கொடையில் 60 வீதமான பணிக்கொடையாக 31.1 மில்லியன் ரூபா நிதியை நிறுவனத்திடம் இருந்து பெற்றுத் தொழிலாளர்கள் 5% பேருக்கும் கிடைக்க வேண்டிய பணிக்கொடைக்கு ஏற்ப வழங்கியுள்ளது.

தொழிலாளர்களுக்குக்கிடைக்க வேண்டிய பணிக்கொடையில் 40 வீதமான பணிக்கொடைகள் இன்னும் வழங்கப்பட வேண்டிஇருந்ததன் அடிப்படையில் 20 வீதமான பணிக்கொடையாக 1.03 மில்லியன் ரூபா நிதியை இரண்டாம் கட்டமாக நேற்றுத் தொழில் திணைக்களத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இன்னும் 20 வீதமான பணிக்கொடைகள் இந்த வருட இறுதிக்குள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

தொழிலாளர்கள் 57 பேருக்கான பணிக்கொடையை வடக்கு மாகாண தொழில் திணைக்களத்தில் வைத்து வடக்கு மாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன், யாழ்.மாவட்ட தொழில் ஆணையாளர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் வழங்கினர்.

இது தொடர்பில் வடக்கு மாகாணப் பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவிக்கும்போது, 5 வருடங்கள் தொடர்ச்சியாக ஒரு நிறுவனத்தில் பணியாற்றும் போது அவர்களுக்காகப் பணிக்கொடையை நிறுவனம் வழங்கவேண்டும் என்பது தொழில் சட்டமாக உள்ள நிலையில் லங்கா சிமெந்து நிறுவனத்தில் பணியாற்றிய 57 தொழிலாளர்கள் தாமாகவே முன்வந்து தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை வழங்கியதன் அடிப்படையில் படிப்படியாக இவர்களுக்கான பணிக்கொடைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அங்கு பணியாற்றிய வேறு பணியாளர்களும் தமக்கான பணிக்கொடைகள் வழங்கப்படாத பட்சத்தில் தொழில் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தமது முறைப்பாட்டை வழங்குவதன் ஊடாகப் பரிசீலித்து தொழில் திணைக்களம் அவர்களுக்கான பணிக்கொடைகளைப் பெற்றுக் கொடுக்கும் எனத் தெரிவித்தார்.

குறித்த தொழிற்சாலை 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூடப்படுவதற்கு முன்பாக 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்துள்ளனர். அத்துடன் சிமெந்து தொழிற்சாலை இந்த வருடத்துடன் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-14-ரி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கில் வாழ்பவர்கள் எந்த நாட்டு மக்கள்?

போரால் பாதிக்கப்பட்ட வடக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கென மேலும் 50 ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருமாறு வடக்கு அரசு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

வடக்கு அரசின் அரசியல் தீர்மானங்கள் குறித்து வழக்கமாக வரிந்துகட்டிக்கொண்டு கருத்துத் தெரிவிக்கும் கொழும்பு அரசின் அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகள் இந்தத் தீர்மானம் குறித்துக் கிஞ்சித்தும் அக்கறை காட்டிக்கொள்ளவில்லை என்பது ஆச்சரியமளிக்கிறது.

இலங்கை என்கிற ஒரு நாட்டுக்குள், அதுவும் ஒற்றையாட்சியின் கீழ் இந்த நாட்டைத் தானே ஆள்வதாக மார் தட்டிக்கொள்ளும் கொழும்பு அரசு ஒன்றுக்குக் கட்டுப்பட்ட மாகாண அரசு ஒன்று தனது பகுதிக்குள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித்தரவேண்டும் என்று அயல் நாட்டிடம் கோரிக்கை வைத்துத் தீர்மானம் நிறைவேற்றுகிறது. ஆனால் நாட்டின் இறைமை போய்விட்டது என்று கொழும்பில் இருந்து ஒரு குரலாவது எழும்பக் காணோம்.

நாட்டை ஆள்வதற்கு ஓர் அரசு இருக்கக்கூடியதாக அயல்நாட்டு அரசு ஒன்றிடம் தமக்கு வீடமைத்துக் கொடுங்கள் என்று ஒரு தொகுதி மக்கள் கோரிக்கை விடுவதைப் போன்ற கேவலம் உலகில் வேறு எந்த நாட்டிலாவது நடந்திருக்குமா என்று தெரியவில்லை. அதே 50 ஆயிரம் வீடுகளை அமைத்துத் தருமாறு அந்த மக்கள் கொழும்பு அரசிடம் கோரிக்கைகூட வைக்க முயற்சிக்கவில்லை என்பது எவ்வளவு பெரிய கேவலம் - இறைமை மீறல்! இது கொழும்பு அரசியல் தலைவர்களுக்கு உறைக்கவே இல்லை என்பது வியப்பளிக்கிறது.

இது பற்றி அவர்கள் அலட்டிக்கொள்ளாததன் பின்னணியில், தமிழ் பேசும் மக்களை இலங்கை நாட்டுக்குரிய மக்களாக அவர்கள் கருதவில்லை என்றே பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனாலேயே தமிழ் பேசும் மக்கள் யாரிடமாவது கேட்டுவிட்டு எதையாவது வாங்கிவிட்டுப் போகட்டும் எமக்கு என்ன வந்தது என்று வாளாவிருந்துவிட்டார்கள் போலும்.


இயற்கை அழிவு, பேரிடர் காலங்களில் அயல் நாடுகளிடம் உதவி பெறுவதும் அபிவிருத்தி, மேம்பாட்டுத் திட்டங்களுக்குக் கடன் பெறுவதும் எந்த ஒரு நாட்டிலும் ஏற்புடையதே. ஆனால் தமது மக்களுக்கு அடிப்படை வீடமைப்பைச் செய்து கொடுப்பது ஒவ்வொரு அரசினதும் அடிப்படைக் கடமை.

கொழும்பு அரசு தனது தலைநகரிலும் ஏனைய பகுதிகளிலும் இதனைச் செய்கிறது. நெல்லுக்கு இறைக்கும் நீர் ஆங்கே பொசிந்து புல்லுக்கும் செல்வதைப் போல், அதில் மிகச் சில வீடுகள் வடக்கு - கிழக்கு வாழ் மக்களுக்கும் கிடைத்திருக்கின்றன. ஆனால், போரால் பாதிக்கப்பட்ட - அனைத்தையும் இழந்த - மக்களுக்கு அது போதுமானதல்ல. விசேட அக்கறையின் பேரில் அந்த மக்களது தேவையை உடனடியாகக் கவனித்திருக்க வேண்டிய கொழும்பு அரசு அதைச் செய்யாமல் புறக்கணித்ததன் விளைவே இப்போது இந்தியாவிடம் தமிழ் பேசும் மக்கள் உதவியை எதிர்பார்ப்பதற்கான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. தனது குடிமக்களாக கொழும்பு அரசு தமிழ் பேசும் மக்களை கருதாததன் விளைவு இது என்றும் அதனைக் குறிப்பிட முடியும்.

இப்படி வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் மிக முக்கியமான தேவைகளை இந்தியாவே கவனித்துக்கொள்ளவேண்டும் என்ற தார்மீகப் பொறுப்பை அதனிடம் கொழும்பு தள்ளி விடுமாக இருந்தால், வடக்கு - கிழக்குப் பகுதிகள் இலங்கையுடன் இணைந்ததா இந்தியாவுடன் இணைந்ததா என்ற கேள்வி எதிர்காலத்தில் எழுந்து விடுவதைத் தவிர்க்க முடியாது.

# தமிழ்நாட்டு அரசியலில் காட்சிகள் மாறும் அறிகுறி





சேரலாதன்

இந்தியாவின் தமிழ் நாட்டில் அரசியல் மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட முயற்சிகள் இடம்பெற்று வருவதை அறிய முடிகின்றது. ஆளும் அ.இ.அ.தி.மு.க. அரசை எவ்வாறாயினும் வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்ற வைராக்கியம் அநேகமான எதிர்க்கட்சிகளிடையே ஏற்பட்டு அதனைச் செயலுருவில் மாற்றிக் காட்டுவதில் அவை தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இதுவரை திராவிட முன்னேற்றக் கழகத்தை வெறுத்து ஒதுக்கிய சிலர் தற்போது அதனுடன் இணைந்து செயற்பட்டால் மட்டுமே அ.இ.அ.தி.மு.க.வினரின் கொட்டத்தை அடக்கிவிடமுடியுமென நம்புகின்றனர்.

### தேர்தலில் படுதோல்வி

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தொகுதியில் கூட வெற்றியீட்ட முடியாததொரு அவல நிலை கலைஞர் தலைமையிலான தி.மு.கவுக்கு ஏற்பட்ட போதிலும் தமிழ் நாட்டின் வாக்கு வங்கியைப் பொறுத்தவரையில் அது பிரதான இடத்தையே வகித்து வருகின்றது. இலங்கையில் இடம்பெறுவது போன்று விகிதாசார முறையிலான தேர்தல் நடவடிக்கைகள் இந்தியாவிலும் இடம் பெற்றிருந்தால் திராவிட முன்னேற்றக் கழகம் கணிசமான நாடாளுமன்ற இடங்களைக் கைப்பற்றியிருக்கும். மேலும் தற்போதைய அரசியல் நிலவரப்படி அ.இ.அ.தி.மு.க.வுக்கு அடுத்த இடம் தி.மு.க.வுக்கே உண்டு.

### தி.மு.க.வுக்கு சிக்கல்கள்

கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது தி.மு.க. பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டிருந்தது. அழகிரி, ஸ்டாலின் முறுகல் நிலை, ஜி2 அலைக்கற்றை வரிசையை ஒதுக்கியதில் ஊழல் நடந்ததாகக் கூறி கலைஞரின் ஒட்டுமொத்தக் குடும்பமே விசாரணையை எதிர்கொண்டமை, தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொள்வதற்கு பிரதான அரசியல் கட்சிகள் பின்னடித்தமை, இந்தப் பலவீனங்களையெல்லாம் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஜெயலலிதா வகுத்த புதிய வியூகங்கள்- இவ்வாறு பல விடயங்களைக் குறிப்பிட முடியும். இதற்கு எல்லாம் மேலாக தொண்ணூறு வயதைக் கடந்த நிலையிலும் கலைஞர் கட்சிப் பணிகளைச் சுமந்து செல்லும் அவல நிலைவேறு.

### அழகிரியின் எதிர்ப்பு

ஸ்டாலினிடம் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஒப்படைப்பதற்குக் கலைஞர் விரும்பினாலும் அவரது இன்னொரு மகனான அஞ்சாநெஞ்சன் மு.க.அழகிரி இதனைக் கடுமையாக எதிர்த்து வருகின்றார். கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் தென்மாவட்டங்களில் தி.மு.க.எதிர்கொண்ட பெரும் சரிவுகளுக்கு அழகிரி மீதே குற்றம் சாட்டப்படுகின்றது. இதில் ஓரளவு உண்மையும் உண்டு. தமிழ் நாட்டின் தென்மாவட்டங்களைப் பொறுத்தவரையில் தி.மு.க. என்றால் அழகிரி, அழகிரி என்றால் தி.மு.க. என்ற நிலையே காணப்பட்டது. அந்த அளவுக்கு அழகிரி செல்வாக்குச் செலுத்தும் நிலையொன்று அங்கு காணப்பட்டது. தி.மு.க.விலிருந்து அழகிரி தற்காலிகமாக இடை நீக்கம் செய்யப்பட்டதால் கட்சிக்குள் அவரது செல்வாக்கு ஓரளவு மங்கத் தொடங்கிய போதிலும் அவரது செல்வாக்கை முழுமையாகக் குறைக்க முடியவில்லை. தற்போது அழகிரியை மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

### தி.மு.க. பக்கம் பார்வை-

இது ஒருபுறமிருக்க தி.மு.க.விலிருந்தும், கலைஞரிடமிருந்தும் ஒதுங்கி நின்றவர்கள் தற்போது அந்தப் பக்கம் பார்வையைச் செலுத்த ஆரம்பித்து விட்டனர். ஒரு காலத்தில் தி.மு.க.வின் போர் வாள் என வர்ணிக்கப்பட்டவர் ம.தி.மு.க. தலைவர் கோபாலசாமி. அவர் தி.மு.க.விலிருந்து ஓரம் கட்டப்பட்டதும், தனியான கட்சி அமைத்ததும் பழைய கதைகள், பின்னர் கலைஞருடனும், ஜெயலலிதாவுடனும் கூட்டணி அமைத்துத் தேர்தல்களில் போட்டியிட்டார். சமீபத்தில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் ஆளும் பாரதீய ஜன்தாக் கட்சியுடன் அவர் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்ட போதிலும் தோல்வியே கிடைத்தது. தற்போது ஜெயலலிதாவும் வேண்டாம், பாரதீய ஜனதாவும் வேண்டாம் என்ற நிலையில் அவர் கலைஞர் பக்கம் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாரதீய ஜனதாக்கட்சி மத்தியில் ஆட்சியில் அமர்ந்துள்ள போதிலும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இப்போதைக்கு காலூன்றுவது என்பது சாத்தியமான விடயமல்ல. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது கூட பாட்டாளி மக்கள் கட்சி, ம.தி.மு.க., தே.மு.தி.க. ஆகிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்ததன் காரணமாகவே இரண்டு நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற முடிந்தது. அதில் ஒன்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் மருத்துவர் ராமதாஸின் மகன் அன்புமணிக்குக் கிடைக்க ஒரேயொரு ஆசனம் மட்டுமே பா.ஜ.கவுக்குக் கிடைத்தது. இந்தியாவின் வட மாநிலங்களில் வீசிய மோடி அலையால் தமிழ் நாட்டில் வீச முடியவில்லை. திராவிடக் கட்சிகளின் ஆதிக்கத்திலுள்ள தமிழ் நாட்டில் இந்துத்துவ கடும் போக்காளர்களைக் கொண்ட பாரதீய ஜனதாவால் கால்தடம் பதிப்பது என்பது இலகுவான விடயமல்ல. மேலும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கற்றுக்கொண்ட பாடங்களை வைகோவும், விஜயகாந்தும் ஒரு போதுமே மறக்கமாட்டார்கள். மேலும் தேர்தலில் தோல்வியுற்ற தமது மைத்துனருக்குத் தாம் எவ்வளவு பாடுபட்டபோதிலும் அமைச்சர் பதவி வழங்கப்படாமையால் மோடியின் மீது ஏற்பட்ட வெறுப்பு விஜயகாந்தின் மனதில் இன்னமும் மாறாத நிலையிலேயே காணப்படுகின்றது. வைகோ கூடத் தமது தோல்வியை ஜீரணிக்க முடியாத நிலையிலேயே உள்ளார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமது மகன் வெற்றி பெற்ற போதிலும் அமைச்சர் பதவியொன்று வழங்கப்படாமை ராமதாஸின் மனதிலும் கடுப்பை ஏற்படுத்திவிட்டது. இந்த நிலையில் இந்த மூவரும் வேறொரு பிரதான கட்சியை நாடவேண்டிய நிலைக்குள் தற்போது தள்ளப்பட்டுள்ளனர். இதில் ஜெயலலிதா புறமொதுக்கப்படுவார் என்றால் கலைஞரே முன்னிலை பெறுகின்றார். ஆகவே அடுத்து இடம்பெறப்போகும் சட்டமன்றத் தேர்தலில் புதிய கூட்டணி உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.


### தி.மு.க. தலைமையில் கூட்டணி

திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகளும், கம்யூனிஸ்ட்டுகளும் ஜெயலலிதா பக்கம் திரும்பிப் பார்க்க மாட்டார்கள் என்பதால் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணியொன்று உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளன. சிலவேளை ஜெயலலிதா பாரதீய ஜனதாவுடன் கூட்டு அமைப்பதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. ஆனால் மிகச் சில தொகுதிகளே பி.ஜே. பிக்கு ஒதுக்கித் தரப்படும் என்பதையும் மறக்க முடியாது. ஏனென்றால் நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றிக்களிப்பு ஜெய லலிதாவின் மனதிலிருந்து இன்னமும் மறையவில்லை.

ஆகவே எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் பல்வேறு மாற்றங்களை எதிர்கொள்ளப் போவதை எவரும் மறுக்க முடியாது.

# அகிம்சைவாதி திலீபனின் கனவு

ஆதித்தன்



ஈழத் தமிழர்களின் வரலாற்றிலேஒருமிகப்பெரும் சோகத்தையும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் பேரெழுச்சியையும் கொடுத்தது திலீபனின் இழப்பு. அகிம்சை ரீதியாகப் போராடினால் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், உலகத்தில் அகிம்சைதான் சிறந்த ஓர் ஆயுதம் என்றும் வரையப்பட்ட வசனம் நல்லூரான் வீதி யிலே பொய்யாகிப்போனது. உணவின்றி நீரின்றி வாடிப்போன அந்த இளைஞனை அகிம்சையினைப் போதிக்கும் எந்த ஆசானும் கண்டுகொள்ளவில்லை. அணுகுண்டையும் ஆட்லெறியையும் கைகளில் வைத்துக்கொண்டு அகிம்சை பேசும் ஆசாமிகளும் காந்தியதேசம் என்றும், புத்தன் பிறந்த பூமி என்றும் புனிதம் பேசும் இந்தியாவும் பார்த்துக்கொண்டிருக்கப் பறிக்கப்பட்டது பார்த்திபனின் உயிர். எல்லோரும் இன்புற்றிருப்பதைத் தவிர வேறொன்றும் அறியேன் என்ற தமிழனின் பிள்ளை பட்டினித் தீயிலே கருகிப்போனது. ஓர் இனத்தின் விடியலுக்காகத் தனது உயிரையே தியாகம் செய்யும் அளவுக்கு இன்றைய நவீன உலகில் மனிதர்கள் யாரும் இல்லை. தாய் செத்தால் என்ன, தந்தை செத்தால் என்ன அவசர உலகில் நின்றுவிடாத இயந்திரங்களாகவும், பணத்துக்கும் பதவிக்கும் பகட்டு வாழ்க்கைக்கும் தன்மானத்தையும் தனித்துவத்தையும் அடகு வைக்கும் மனிதர்கள் அதிகமாக வாழும் இந்தப் பூமியில் திலீபன் பிறந்தான். வாழ்ந்தான். வாழ்ந்துகொண்டிருக்கின்றான் இன்னும் இந்த மண்ணிலே என்பது பெருமிதமான விடயம்.

இளமையும் துடிப்பும் மிக்க அந்த இளைஞனுக்குள் எப்படி இவ்வளவு தியாக உணர்வும், அகிம்சைமீது விருப்பும், சாகும் வரையிலும் அதன்மீது தளராத நம்பிக்கையும் வந்தது என்று தெரியவில்லை. ஆனால் அந்த அகிம்சையே அவனுக்கு எமனாகியது என்பது வேதனையான விடயம். திலீபன் அப்படி எதைக் கேட்டான்? திலீபனின் கோரிக்கைகள்தான் என்ன? மனித குலத்துக்கே ஒவ்வாத ஒன்றைக் கேட்டானா? அவன் கேட்டது நியாயமானது. அவனது கோரிக்கைகள் அத்தனையும் சிங்கள இனவாதிகளால் அழிக்கப்பட்டுக்கொண்டிருந்த தமிழ் மக்களின் விடுதலைக்கானது. தனது இனம் இன்னொரு இனத்தால் அழிக்கப்பட்டு சித்திரவதைப் படுவதைக் கண்டு அவர்களின் விடியலுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து அதனை ஏற்றுக்கொள்ளும் வரையும் உணவின்றி, நீரின்றி அந்த நல்லூரான் வீதியிலே பட்டினியால் துடித்து மடிந்தான் திலீபன்.

வன்முறை வேண்டாம். ஆயுதக் கலாசாரம் வேண்டாம். எங்கும் அமைதி, அமைதி என்று பகட்டுவித்தைக் காட்டும் மனிதர்கள் அன்று அகிம்சை ரீதியாகத் தன் இனத்துக்கு நீதிகேட்டு தவம் இருந்த திலீபனைக் கண்டுகொள்ளவில்லை. காரணம் என்ன?

ஆடைகளுக்குள் ஆயுதங்களை மறைத்துவைத்து அகிம்சைபேசும் போலி மனிதர்களை நம்பி திலீபனைப் பலி கொடுத்தது ஈழத்தமிழினம் விடுதலைப் புலிகள் வன்முறையாளர்கள் என்றும் அவர்கள் பயங் கரவாதிகள் என்றும் முத்திரை குத்திய இந்தியா உட்பட்ட உலக நாடுகள் அனைத்தும் அன்று திலீபனின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்திருந்தால் அவனின் அகிம்சை வெற்றிபெற்றிருந்தால் இன்று இந்த அளவுக்கு ஆயுதக் கலாசாரம் வளர்ச்சியடைந்திருக்காது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை திலீபனுடன் அகிம்சையும் மரணித்துப்போனது என்பதுதான் உண்மை. எனவேதான் அவர்கள் ஆயுதங்கள்மீது நம்பிக்கை கொள்ள வேண்டியிருந்தது. ஆயுதங்கள் மூலம்தான் உலகத்தின் பார்வை அவர்கள்மீது திரும்பியது என்பதையும் மறுக்கமுடியாது. அவர்கள் திலீபனின் மரணத் தோடு அகிம்சையை முற்றாக வெறுக்க நேரிட்டது. அதன் விளைவுதான். ஒரு சிறிய போராட்டக் குழுவாக இருந்த விடுதலைப்புலிகள் உலகின் வல்லரசு நாடுகளில் ஒன்றான இந்தியாவுடன் சரிநிகராகக் களத்தில் நின்று சண்டைசெய் யும் மனோபலத்தைக் கொடுத்தது திலீபனின் மரணம்.

காந்தித் தாத்தா என்றும் காந்திஜீ என்றும் அகிம்சையில்

> தனது இனம் இன்னொரு இனத்தி னால் அழிக்கப்பட்டு சித்திரவதைப் படுவதை கண்டு அவர்களின் விடியலுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து அதனை ஏற்றுக்கொள்ளும் வரையும் உணவின்றி நீரின்றி அந்த நல்லூரான் வீதியிலே பட்டினியால் துடித்து உயிர் விட்டான் திலீபன்.

உலகத்தில் சிறந்தவர் காந்திதான் என்றெல்லாம் பெருமிதப்படுத்திக்கொள்ளும் இந்தியா, எமது தேசத்தில் தண்ணீர்கூட அருந்தாது தனது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று காந்தியின் வழியில் காந்தியதேசத்தை நம்பி மரணித்துப்போன திலீபனை இன்னமும் பயங்கரவாதி என்று கூறுவது மிக மிக கேலிக்குரியவிடயம். இதற்கான காரணம் என்ன? ஒரு வேளை திலீபனை அகிம்சாவாதி என்று கூறிவிட்டால் காந்தியிலும் சிறந்தவன் என்ற பெயரைத் திலீபன் பெற்றுவிடுவான் என்ற அச்சமாகக்கூட இருக்கலாம். இந்தியத்தேசம் தமது பெயர் மங்கிவிடக் கூடாதென்பதற்காகவும் திலீபனின் மரணத்தில் தமக்கும் பங்கு உண்டு என்ற காரணத்தினாலும் புனிதனாகப் பூசிக்கப்பட வேண்டிய அந்த அகிம்சாவாதியைப் பயங்கரவாதியாகச் சித்திரிக்கின்றது. திலீபன் இந்த மண்ணைவிட்டுச்சென்று 27 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் இன்னமும் அவனது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை அகிம்சையை நம்பி மரணித்த அந்த வீரனின் இழப்புக்குக் காரணமான இந்தியா அதற்காக ஒருசிறிய ஆதங்கத்தைக்கூட வெளிப்படுத்தவில்லை.

சட்டங்களும் சம்பிரதாயங்களும் வல்லமைகொண்டவர்களுக்குத் தான் வாலாட்டும் என்பது இதில் நிதர்சனமாகிறது. அமைதிப்படை என்ற பெயரில் நாடுவிட்டு நாடு வந்து எங்கள் உறவுகளைக் கொன்று குவித்த இந்திய வல்லாதிக்க இராணுவத்தினருக்குப் பலாலியில் நினைவுத்தூபி அமைத்து மாலையிட்டு மரியாதை செய்யும் இலங்கை அரசு, நல்லூர் வீதியிலே அமைக்கப்பட்ட திலீபனின் நினைவாலயத்தைக் கூட விட்டுவைக்கவில்லை.

திலீபனின் கோரிக்கைகள்தான் என்ன? இலங்கை பெரும்பான்மையாளர்கள், தமிழ்மக்கள் மீதும் தமிழ் நிலங்கள்மீதும் கட்டவிழ்த்துவிட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுத்தல், மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாகத் திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தல், சிறைக் கூடங்களிலும் இராணுவ- பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படல், அவசர காலச் சட்டம் முழுமையாக நீக்கப்படல், ஊர் காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங் கள் முற்றாகக் களையப்படல், தமிழர் பிரதேசங்களில் புதிதாகப் பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படல் வேண்டும் ஆகிய் கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருந்தான். ஆனால் இதில் ஒன்றைக்கூட ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கவில்லை அன்றைய சிங்கள ஆட்சிபீடம். ஆனாலும் இந்தியா இதில் தலையிட்டுத் தனது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வைக்கும் என்று ஆழமாக நம்பிய திலீபனை, இந்தியாவின் மௌனமும் பொறுப்பற்ற தன்மையும் கொன்று போட்டது. மரணப்படுக்கையிலே திலீபன் சொன்னதுபோல மக்கள் புரட்சி ஒன்று வெடிக்கட்டும் என்பது இன்றுவரையும் நடக்கவேயில்லை.

---

நன்றி-ராவய



# அளுத்கம இன்னமும் இருளுக்குள்

## அங்கு இடம்பெற்றமை சிறு சம்பவமா?

நாம் புதிய நிலைமையை அறிந்து கொள்வதற்கு அளுத்கமவுக்குச் சென்றோம். அளுத்கம, பேருவளை ஆகியன தீயால் எரிந்து, அணைந்து மூன்று மாதங்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன. ஜூன் நடுப்பகுதியில் எரிந்த இனவாதத்தீயின் இருண்ட நினைவு முழுமையாகவே அணைந்துள்ளதா? அதனை எதிர்கொண்ட மனிதர்கள் முன்னரைப்போன்று பழக்கப்பட்ட நிலையில் காலம் கழிக்கின்றனரா? அனைத்து நிலவ்ரங்களும் அளுத் கமவுக்குள் பிரவேசித்து பார்க்க வேண்டியவைகளாகும்.

அளுத்கம இன்னமும் இருண்டு காணப்படுகிறது. நகர மத்தியில் அமைந்திருந்த மல்லிகாவின் கட்டடம் எரிந்து மீண்டும் உயிர்பெறாத நிலையில் காணப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டிலும் தீப்பற்றி எரிந்த இந்தக் கட்டடம் இம்முறையும் அவ்வாறே இருந்தது. அது ஜூனை நினைத்து அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

**தர்கா நகரிலிருந்து**

தர்காநகரில் வழமையான காரியங்கள் நிறைவேறிய போதிலும் ஏதோ குறையொன்று தெரிந்தது. தர்காநகரூடாக, அதிகாரிகொட, சீனாவத்தை, பதிராஜகொட, நந்த விகாரையின் பின்புறமாக உள்ள வீதிகள் அனைத்திலும் நாம் பயணம் மேற்கொண்டோம். கறுப்பு ஜூனுக்கு எரிந்து சாம்பலாகிய வீடுகள் புதிதாக உயிர் பெற்றிருந்தன. இது வேறொருவரது தவறுகளைச் சுமந்தாலும் இராணுவ வீரர்களது கரங்களால் உயிர் பெற்றுள்ளன. இராணுவ அதிரடிப் படையினரை நேரடியாகக் குற்றம் சுமத்தியவர்கள் இன்று இராணுவத்துக்கு நன்றி தெரிவிக்கின்றனர். இராணுவ அதிகாரிகள் நல்லவர்கள். அவர்கள் வீடுகளை நன்றாக நிர்மாணிக்கின்றார்கள். ஒரு சில விடயங்களில் சிறிது கால தாமதம். பிரச்சினையில்லை. வேலை நன்றாக நடைபெறுகிறது. அது முஸ்லிம் ஒருவரது கருத்து. இவ்வாறான கருத்துக் கொண்ட அநேகமானவர்கள் அங்கு வாழ்கின்றார்கள். மூன்று மாடிகளைக் கொண்ட வீடொன்று முழுமையாக நாசமாகியுள்ளது. அங்கிருந்த கதவு நிலைகளைத் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளார்கள். அந்த வீட்டிலிருந்த கோடிக்கணக்கான பெறுமதியான பொருள்களையும் எடுத்துச் சென்றுள்ளார்கள். அனைத்தும் முடிந்த நிலையிலும் இன்னும் அங்கு மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆயுத மேந்திய வாறு காவல் புரிகின்றனர்.

விகாரைகளில் ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்கள். இது ஏன்? எனது முஸ்லிம் நண்பரொருவரிடம் நான் தொடுத்த கேள்வி இது. சம்பவத்தின் பின் இவ்வாறுதான். விகாரைகளைப் பாதுகாக்கிறார்கள். நாம் விகாரைக ளுக்கல்ல, எந்தவொரு சிங்கள வீட்டுக்கும்கூட கைவைக்கவில்லை. இங்கு நிர்மாணிக்கப்படும் வீடுகள் யாருடையவை எனப் பாருங்கள். ஒரேயொரு சிங்கள வீடு மட்டுமே உடைக்கப்பட்டிருந்தது. அதை இன்று நன்றாக நிர்மாணித்துள்ளார்கள். அவர் எங்களை அழைத்துச் சென்று அந்த வீட்டைக் காட்டினார். அது தற்போது புதிய வீடொன்றைப் போன்று காட்சி தருகின்றது. வசதி வாய்ப்பு உள்ளவர்களின் வீடுகள் அவசர அவசரமாக நிர்மாணிக்கப்படுகின்றன. குறைந்த வசதிகளைக் கொண்ட குடும்பங்களது வீடுகள் குறைந்த கவனிப்புடன் நிர்மாணிக்கப்படுகின்றன. அது எவ்வாறெனினும் இராணுவம் தொடர்புபட்டிருப்பதால் முறையாக வேலைகள் இடம்பெற்று வருகின்றன. அவர்களே தாக்கி விட்டு அவர்களே கட்டுகின்றார்களல்லவா? நாம் அவ்வாறு கேட்டதற்கு யாரும் அவ்வாறு கூறவில்லை. அது மீண்டும் தீயை ஊதுவதற்கு இவர்கள் விரும்பாத காரணத்தால் ஆக இருக்கலாம். என்றாலும் ஊதுபவர்களும் இருக்கிறார்கள்.

**மீண்டும் உசுப்பேற்ற முயற்சித்தல்**

கடந்த ஓகஸ்ட் 30ம் திகதி ஜூன் கலவரத்துக்கு இலக்காகி காலொன்றை இழந்த 18 வயதுடைய இளைஞரொருவர் உதைபந்தாட்ட போட்டி யொன்றைக் கண்டு கழிப்பதற்கு போய் வரும் வழியில் சிங்களவர்கள் சிலர் அவர் மீதுள்ள கோபத்தால் கூக்குரலிட்டு அவரை அவமானப்படுத்தினார்கள். இந்த விடயம் நீண்டு செல்ல, அனைவரையும் அளுத்கம பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார்கள். அனைவரும் சமாதானப்படுத்தப்பட்டு ஆரத்தழுவியவாறு பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறிச் சென்றுள்ளார்கள். எனினும் இதனை அறிந்த பத்திராஜகொட விகாரையின் தலைமைத் தேரர், மீண்டும் பொலிஸ் நிலையம் சென்று குறித்த முஸ்லிம் இளைஞரை அழைத்து வந்து தாக்கவேண்டுமெனவும் அவ்வாறின்றேல் தான் பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேற மாட்டேன் என்வும் அடம் பிடித்தார்.

(தொடரும்)

# நீருக்கு அடியிலும் காணொலி பதிவு செய்யும் அதிநவீன கமரா




கொன்ரூர் (Contour) நிறுவனம் றோம்ஸ் 3 (ROAM3) என்ற சிறிய ரக காணொலி கமரா ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.
200 டொலர்கள் பெறுமதியான இந்தக் கமராவைக் கொண்டு நீருக்கு அடியிலும் காணொலி பதிவு மேற்கொள்ள முடியும்.
அதற்கு ஏற்ற வகையில் 30 அடி ஆழத்திலும் நீர் உட்புகாத தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
இவை தவிர 270 டிகிரியில் திருப்பக்கூடிய லென்ஸ், 30fps வேகம் கொண்ட 1080p HD வீடியோ, 60fps வேகம் கொண்ட 720p வீடியோ பதிவு என்பவற்றையும் இது கொண்டுள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | 8 | 3 | | 6 | |
| | | 5 | | 1 | | | 9 | 8 |
| 4 | | 8 | | | | | | 5 |
| 1 | | | | 9 | | 2 | 5 | 6 |
| | | 2 | | 4 | | 8 | | |
| 8 | 5 | 6 | | 3 | | | | 7 |
| 7 | | | | | | 6 | | 9 |
| 5 | 8 | | | 6 | | 4 | | |
| | 6 | | | 2 | | | 7 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 2 | 5 | 8 | 7 | 4 | 3 | 1 |
| 7 | 3 | 8 | 4 | 1 | 6 | 9 | 2 | 5 |
| 4 | 5 | 1 | 2 | 3 | 9 | 7 | 6 | 8 |
| 5 | 7 | 3 | 6 | 2 | 8 | 1 | 9 | 4 |
| 6 | 1 | 9 | 3 | 7 | 4 | 5 | 8 | 2 |
| 2 | 8 | 4 | 9 | 5 | 1 | 3 | 7 | 6 |
| 3 | 2 | 7 | 8 | 4 | 5 | 6 | 1 | 9 |
| 1 | 4 | 6 | 7 | 9 | 2 | 8 | 5 | 3 |
| 8 | 9 | 5 | 1 | 6 | 3 | 2 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

## சொந்த இலட்சியங்கள் வெற்றியைத் தரும்



ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று ஒரு சொந்த இலட்சியத்தை வைத்துக் கொள்ள வேண்டும். அதனை நிறைவேற்றப் பெருமுயற்சி செய்ய வேண்டும். அப்படியில்லாமல் பிறருடைய இலட்சியங்களை எடுத்துக் கொண்டு அதை நிறைவேற்றுவதற்குப் பாடுபட்டு வேதனை அடையக் கூடாது. உதாரணமாக ஒரு குழந்தையிடம் இருபது மைல் தூரம் நடந்து செல்லக் கூறுவதாக வைத்துக் கொள்வோம். அந்தக் குழந்தை பிணமாகும் அல்லது களைத்துக் களைத்து நடந்து அரைப்பிணமாக எல்லைக்கோட்டை தொடும். உலகத்தில் பொதுவாக நாம் செய்ய முயல்வதும் இது போன்றது தான்.
உலகத்தில் உள்ள எந்தவொரு ஆணும் பெண்ணும் ஒரே மாதிரியான மனமும் திறமையும் செயல்புரியும் சக்தியும் பெற்றவர்களாக இல்லை. அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான இலட்சியங்களைக் கொண்டவர்களாகவே நிச்சயம் இருப்பார்கள். அவர்களை நிந்திப்பதற்கு எமக்கு உரிமை கிடையாது. ஒவ்வொருவரும் தம் முடைய இலட்சியம் நிறைவேறுவதற்கு முடிந்த வரை சிறப்பாக முயலவேண்டும். உனது இலட்சியத்தை வைத்துக் கொண்டு நீ என்னை எடை போடுவதும் எனது இலட்சியத்தை வைத்துக் கொண்டு நான் உன்னை எடை போடுவதும் சரியானதல்ல.
ஒரு சவுக்கு மரத்தை அப்பிள் மரத்தின் தகுதியை வைத்து மதிப்பிடக்கூடாது. சவுக்கு மரத்தை மதிப்பிட வேண்டுமானால் அதன் தகுதியின் பேரில் அதை மதிப்பிட வேண்டும். இப்படியே ஒவ்வொரு மனிதனையும் அவரவர்களுடைய தகுதிகளுக்கு ஏற்ப மதிப்பிட வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை என்பது தான் படைப்பின் திட்டம். ஒவ்வோர் ஆணும் பெண்ணும் எவ்வளவுக்கு எவ்வளவு வேறுபட்டிருந்தாலும் ஆதார நிலையில் ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் சில குணங்கள் அமைவது படைப்பில் இயல்பாகவே அமைகின்ற வேற்றுமையாகும். எனவே எல்லோர் மீதும் ஒரே இலட்சியத்தைத் திணிக்கக் கூடாது. நம்முடைய கடமை ஒவ்வொருவரையும் அவர்கள் தங்களுடைய உன்னதமான இலட்சியங்களை அடைவதற்காக உதவி செய்வதும் அதே வேளை முடிந்தவரையில் அந்த இலட்சியம் சத்தியத்தை ஒட்டி இருக்கும்படி அமைத்துத் தருவதுமேயாகும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா


**மேடம்**: வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கடும் முயற்சிகள் பலன் தரும். செலவு அதிகரிக்கும். தேவையான உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.


**இடபம்**: எதைச் செய்வது, எதை விடுவது என்ற மனத் தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களைப் பற்றிக் கூறுவதைத் தவிர்ப்பது நல்லது.


**மிதுனம்**: குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். எந்த ஒரு காரியத்தையும் விடாமுயற்சியுடன் செய்வதன் மூலம் எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும்.


**கடகம்**: எந்த ஒரு வேலையையும் மனத் திருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கப் பெறுவார்கள்.


**சிங்கம்**: குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான ஆடைகள் போன்றவைகளை வாங்குவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.


**கன்னி**: உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் இருக்கும். திடீரென்று அவசர முடிவை எடுக்க வேண்டியிருக்கும். கோபத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு. உறவினர்களிடம் சுமுகமான நிலை நீடிக்கும்.


**துலாம்**:எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். தடைப்பட்ட பணவரத்து தடைநீங்கி கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.


**விருச்சிகம்**: தொழில் ஸ்தானத்தில் இருக்கும் குருவினால் மனதில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும்.. நீங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றப் பாடுபடுவீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.


**தனுசு**: எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும். உடற்சோர்வு உண்டாகலாம்.


**மகரம்**: தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகம் தொடர்பான பணிகள் தாமதப்படும்.


**கும்பம்**: எதிலும் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்துச் சாதாரணமாகப் பேசுவது நல்லது. நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.


**மீனம்**: ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்கவேண்டி வரும். யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் கூட தவறாகப் புரிந்து கொள்வார்கள். முன்கோபத்தால் பகை உண்டாகும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

## நாளை

**புரட்டாதி-12 ஞாயிற்றுக்கிழமை | 28.09.2014**

திதி: சதுர்த்தி பி.ப.02.09 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.இ.10.38 வரை

சுபநேரம்:09.02-10.32 வரை
இராகுகாலம்:04.32-06.02 வரை
சதுர்த்தி விரதம்

# திக்கம் உதைபந்தாட்டத் தொடர் லீக் சுற்றுக்கு முன்னேறிய அணிகள்

கரணவாய், செப்.27
பரபரப்பான ஆட்டத்தில் நெடியகாடு விளையாட்டுக் கழகத்தை சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி கொண்டு லீக் முறைச் சுற்றுப் போட்டிக்குள் நுழைந்தது கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்.
திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின.
இளம் வீரர்களை அதிகளவாகக் கொண்டு களமிறங்கிய இரு அணியினரும் தமது உச்சத்திறமைகளை வெளிக்காட்டி சம பலத்துடன் மோதினர். இதனால் இரு அணியினருக்கும் கோல் போடுவதற்கான வாய்ப்பு எட்டாக்கனியாகவே இருந்தது. முதல்பாதி ஆட்டத்தில் இரு அணியினருக்கும் கோல் போடும் சந்தர்ப்பங்கள் பல கிடைத்த போதும் அவற்றை அவர்கள் சரியாகப் பயன்படுத்தாததால் கோல்களைப் பெறாத நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.
இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 4 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணி வீரர் நிஷாந்தனின் கால்களுக்குள் பந்து அகப்பட அதனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து எதிரணியினருக்கு போக்குக் காட்டி அருமையான கோல் ஒன்றைப் போட ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. அவர்கள் கோல் போட்டதற்கான பரபரப்பு அடங்குவதற்குள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக வீரர் மாதவன் பதில் கோல் போட்டு ஆட்டத்தை சமநிலைக்குக் கொண்டு வந்தார். தொடர்ந்து இரு அணியினரும் மோதி கோல்களைப் போடாத நிலையில் 1:1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் நிறைவடைந்தது.
இதனை அடுத்து வெற்றியாளர்களைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 3:2 என்ற கோல்கள் அடிப்படையில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று லீக் சுற்றுப் போட்டிக்கு முன்னேறியது. இதேவேளை- இதற்கு முதல் இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக்கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.
ஆட்டம் முழுவதும் முழுமையான ஆதிக்கம் செலுத்திய சென்.சேவியர் அணி எதிரணியினர் கோல் போடுவதைத் தடுத்ததோடு தாங்கள் கோல் மழை பொழிந்தனர். இதனால் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது சென் சேவியர் அணி. அந்த அணி சார்பாக கனியூட் 2 ஆவது, 40 ஆவது நிமிடங்களிலும், நிஷாந்தன் 10 ஆவது நிமிடத்திலும் நிரோசன், திலீப் முறையே 23, 35 ஆகிய நிமிடங்களிலும் கோல் போட்டு அசத்தினர்.
இதேவேளை- கடந்த புதன் கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் எதிரணியை தண்டனை சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி கொண்ட சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் அடுத்த கட்டப் போட்டியான லீக் சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றது.
முதற்கட்டப் போட்டிகளில் எதிரணிகளை தோற்கடித்து இந்த இரு அணிகளும் சமபலத்துடன் களமிறங்கியதால் ஆட்டம் பெரு விறுவிறுப்பாக இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் எந்த அணி வெற்றி பெறும் என்று எதிர்வு கூறமுடியாத வகையில் இரு பகுதியினரதும் ஆட்டங்களிலும் அனல் பறந்தது. இதனால் பந்தும் இரு பகுதியின் கோல் பரப்புக்குள் அடிக்கடி சென்று வந்த வண்ணம் இருந்தது. இறுதியில் இரு அணியினரும் கோல் போடாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
இதனை அடுத்து வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் 5:4 என்ற கோல்கள் அடிப்படையில் வென்று அடுத்தகட்டப் போட்டியான லீக் சுற்றுப் போட்டிக்கு முன்னேறியது.
இதேவேளை- இதற்கு முன்னம் இடம்பெறவிருந்த ஆட்டத்தில் பங்கு பற்றவிருந்த மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணி குறித்த நேரத்துக்கு வராத காரணத்தால் எதிரணியான கொலின்ஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதனால் இந்த அணியும் லீக் முறைச் சுற்றுப் போட்டிகளுக்கு தகுதி பெற்றது. ஏற்கனவே அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம் என்பன லீக் முறைச் சுற்றுப் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளன. (ரி-108)

## இன்றைய ஆட்டம்

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:
பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு பிறைஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் அராலி அண்ணா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ரி.108)

* * *

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் லீக் முறையிலான ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை முதல் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
அதில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளும் விவரம் வருமாறு:
பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ரி-108)

* * *

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 19 வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவு 3 க்கான கிரிக் கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஸ்ரீபியரட்ணமத்தியகல்லூரிஅணி மோதவுள்ளது. (ரி- 23)

# சென்.அன்ரனிஸ், எவறெஸ்ட் அணிகள் வெற்றி



யாழ்ப்பாணம்,செப்.27
விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டங்களில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுள்ளன.
யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் ஈ.கே குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
நேற்று வெள்ளிக்கிழமை முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதில் ஆட்டநாயகனாக பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியில் கலிஸ்ரட்ஸும், அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியில் சுசிகாந்தனும் தெரிவானார்கள்.
இரண்டாவது ஆட்டத்தில் யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இதில் ஆட்டநாயகனாக புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழக அணியில் தர்சனும், யாழ்.ஐக்கிய விளையாட்டுக் கழக அணியில் அமானியும் தெரிவானார்கள். (ரி- 23)

## போராடி வென்றது மைக்கல்

கரணவாய், செப்.27
பலத்த போராட்டங்களின் மத்தியில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி அல்வாய் மைக்கல் விளையாட்டுக் கழகமும், சுடரொளி விளையாட்டுக் கழகத்தை இலகுவில் வீழ்த்தி யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறின.
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் அல்வாய் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும், இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் இரு அணியினரும் மாறி மாறி கோல் போட ஆட்டம் சுவாரசியத்தின் உச்சக் கட்டத்துக்கே சென்றது ஆட்டம் தொடங்கி 4 ஆவது நிமிடத்தில் மைக்கல் அணி வீரன் சயந்தன் முதலாவது கோலைப் போட 7 ஆவது நிமிடத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக வீரர் விந்தனும் தமது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார். அதற்கு அடுத்த 7 ஆவது நிமிடத்தில் மைக்கல் அணி சார்பாக சயந்தனும், 15 ஆவது நிமிடத்தில் இளைஞர் அணியின் உதயசீலனும் கோல் போட 2:2 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.
இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 3 ஆவது நிமிடத்திலும் 27 ஆவது நிமிடத்திலும் மைக்கல் அணி சார்பாக தர்சனும் 35 ஆவது நிமிடத்தில் இமையாணன் இளைஞர் அணி சார்பாக விந்தனும் கோல் போட 4:3 என்ற கோல் கணக்கில் அல்மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.
அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் கர வெட்டி சுட ரொளி விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் 7:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்து சுற்றுக்கு முன்னேறியது. அந்த அணி சார்பாக கணேஸ் 3 கோல்களையும்,ரவிதாஸ், கௌதமன் ஆகியோர் தலா 2 கோல்களையும் போட்டனர்.(ரி-108)

## கரம் சுற்றுப்போட்டி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும், கரம் ஆண்கள் அணியும் இணைந்து நடத்தும் யாழ். மாவட்ட அழைக்கப்பட்ட கழக ஆண்களுக்கு இடையிலான லீக் முறையிலான கரம் சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் நடைபெறவுள்ளன. சுற்றுப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணினி விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் யாழ்.பல்கலைக்கழக கரம் அணியின் முன்னாள் தலைவருமான சோமஸ்கந்தன் சுதாகர் கலந்துகொள்ளவுள்ளார். இறுதிப்போட்டி நாளை மாலை 4மணிக்கு நடைபெறும். (ரி)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், செப்.27
முள்ளியவளை விநாயகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் பத்துப் பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விலகல் முறையிலான மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்தச் சுற்றுப் போட்டியில் முல்லைத்தீவில் பதிவு செய்யப்பட்ட பதினெட்டு அணிகள் பங்குபற்றுகின்றன.



சுற்றுப்போட்டியின் கால், அரை இறுதியாட்டங்கள் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன. (ரி)


## போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.27
யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் ஈ.கே குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.
குறித்த போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ரி- 23)

வரையுங்கள்...
கார்ட்டூன் வரையுங்கள்
வரைந்ததை அனுப்புங்கள், தரம்கண்டு பிரசுரிக்கப்படும்.
அனுப்பவேண்டிய முகவரி
வரையுங்கள் கார்ட்டூன்
உதயன்,
இல. 361. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.



# விளையாடியது மழை; சிக்கலில் சென்னை



கொட்டித் தீர்த்த அடைமழை காரணமாக ஒரு பந்து கூட வீசப் படாத நிலையில் ஆட்டம் கைவி டப்பட, சென்னை அணியின் அரை யிறுதி வாய்ப்பு சிக்கலுக்கு உள்ளா கியுள்ளது.

சம்பியன் லீக் தொடரில் பெங்க ளூர் சின்னச்சாமி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற இருந்த ஆட்டத்தில் ஐ.பி.எல் அணி யான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், பாகிஸ்தானின் லாகூர் லயன்ஸ் அணியும் மோத இருந் தன. ஆனால் கனமழை காரண மாக ஆட்டத்தை கைவிடுவதாக நடுவர்கள் தெரிவித்தனர். இதனை யடுத்து இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்பட்டன.


இதனால் அரையிறுதிக்கு சென்னை முன்னேறுவதற்கு, பேர்த் ஸ்கோர் சர்ஸ் அணிக்கு எதிராக இன்று நடக்கவுள்ள கடைசி லீக் ஆட்டத் தில் வென்றாக வேண்டிய கட்டா யம் ஏற்பட்டுள்ளது.

ஏ பிரிவில் இதுவரை முடிந்த லீக் ஆட்டங்களின் முடிவில், 12 புள்ளிகளுடன் கொல்கத்தா அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. மீதமுள்ள ஒரு இடத்துக்கு சென்னை (6 புள்ளி), பேர்த் (4புள்ளி), லாகூர் (2புள்ளி) அணிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது. இந்த நிலையில் சென்னை அணி, அரையிறுதிக்கு முன்னேற பேர்த் அணிக்கு எதிராக நடக்கவுள்ள கடைசி லீக் ஆட்டத்தில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும். அதேவேளை பேர்த் அணி அரையிறுதிக்கு தகுதி பெறுவதற்கு, மீதமுள்ள 2 ஆட்டங்களில் சென்னை மற்றும் லாகூர் அணிகளை வீழ்த்த வேண்டும். அதே போல் லாகூர் அணி, அரையிறுதி வாய்ப்பை பெற அடுத்து நடக்கவுள்ள ஆட்டங்களில் டொல்பின்ஸ் மற்றும் பேர்த் அணிகளுக்கு எதிராக வெற்றி பெற வேண்டும். (ரி)

## கரம் பற்றினார் ரஹானே

இந்திய கிரிக்கெட் அணியின் இளம்வீரர் ரஹானே தனது நீண்டநாள் தோழியான ராதிகாவை கரம் பிடித்துள்ளார்.

சமீபத்தில் நடந்து முடிந்த இங்கிலாந்து தொடரில் விளையாடியிருந்த ரஹானே சிறப்பான இன் னிங்ஸை ஆடியிருந்தார். அந்தத் தொடரின் பின்னர் அவரது நீண்டநாள் தோழியான ராதிகாவுடன், ரஹா னேவுக்கு பெற்றோர்கள் நிச்சயம் செய்துவைத்தனர். இந்தநிலையில நேற்றைய தினம் ரஹானே ராதி காவை மணந்தார். (ரி)



# கட்டாரில் நடக்குமா உலகக்கிண்ணம்?

2022ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்துத் தொடர் கட்டார் நாட்டில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை கட்டார் நாடு நடத்தாது என்று சர்வதேச உதைபந்துக் கூட் டமைப்பான பிபாவின் ஜேர் மனி நாட்டு தலைமை குழு உறுப்பினர் தியோ ஜுவா ன்ஜீகர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தெரி விக்கையில், கட்டார் நாட்டில் 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்து தொடர் நடைபெறாது என்று நான் நினைக்கிறேன். உலக அள வில் காணப்படும் போட் டியை கோடை காலத்தின் அதிக வெப்பநிலை காரண மாக கட்டார் நாடு இழக்கும் நிலை உள்ளது. உலகக் கிண்ணத் தொடர் என்பது மைதானத்துடன் நின்று விடு வதில்லை. உலகின் நான்கு மூலைகளில் இருந்தும் போட்டிகளைக் காண ரசிகர்கள் வருவார்கள். அவர்களை வெப்பம் அதிகமாக பாதிக்கும் என்று அவர் தெரிவித்துளார்.

எனினும் கட்டார் 2022 அமைப்புக் குழுவின் பொதுச் செயலாளர் ஹசன் அல்-ரவாடி கூறுகையில், 2022 உலகக்கிண்ணத் தொடர் நிச்சயமாக கட்டாரில் நடக்கும். நான் கவலை எதுவும் கொள்ளவில்லை. முதலில், உலகக்கிண்ணத்தை நடத்தும் வாய்ப்பை இழப்பதற்கு நாம் தயாராக இல்லை. அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளில் நடக்கும் முதல் உலகக்கிண்ணத் தொடர் இதுவாகும் என்று அவர் தெரிவித்தார். (ரி)

# சாஸ்திரியின் பதவி நீடிப்பு

அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடர் வரை, இந்திய கிரிக்கெட் அணியின் இயக்குநராக ரவி சாஸ்திரி பதவி நீடிப்புச் செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்தியா படுதோல்வி அடைந்ததை அடுத்து இந்திய கிரிக்கெட் அணியின் இயக்குநராக ரவிசாஸ்திரி நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவியாக சஞ்சய் பங்கர், ஸ்ரீதர் மற்றும் பாரத் அருண் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், இந்திய கிரிக்கெட் சபை செயற்குழுக் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. ரவிசாஸ்திரியுடனான ஒப்பந்தத்தை நீடிப்பது குறித்து நடைபெற்ற விவாதத்தின் முடிவில் ஒப்பந்ததை அடுத்த ஆண்டு ஆஸி, நியூசிலாந்தில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடர் வரை நீடிக்க கிரிக்கெட் சபை செயற்குழுவில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் உதவியாளர்கள் சஞ்சய் பங்கர், ஸ்ரீதர் மற்றும் பாரத் அருண் ஆகியோரின் ஒப்பந்தமும் நீடிக்கப்பட்டுள்ளது. (ரி)



## இன்றைய CLT-20 ஆட்டங்கள்

| மாலை 4 மணி | | இரவு 8 மணி | |
|---|---|---|---|
| டொல்பின்ஸ் | லாகூர் லயன்ஸ் | பேர்த் ஸ்கோர்ச்சேர்ஸ் | சென்னை சுப்பர் கிங்ஸ் |

## தொடர்ச்சிகள்

### பாதுகாப்புக்கே

எது அத்துடன், சட்டம் ஒழுங்கு ஆகியவற்றுக்கு 5,750 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செலவினமும் இம்முறை 288 கோடியே 40 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 1,970 கோடியே 33 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவாக ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் முக்கியமான அமைச்சுகளுக்கு செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளநிதிகள் வருமாறு:-

நிதி அமைச்சு
18,092 கோடியே 50 லட்சம். இது 2014ஆம் ஆண்டை விடவும் 2823 கோடியே 46 லட்சத்து 20 ஆயிரம் ரூபா அதிகம்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
11300 கோடி ரூபா. கடந்த வருடத்தை விடவும் 782 கோடியே 52 லட்சத்து 50 ஆயிரம் ரூபா குறைவு.

சுகாதார அமைச்சு:
13,949 கோடியே 49 லட்சத்து 31 ஆயிரம் ரூபா. கடந்த வருடத்தை விடவும் 626 கோடியே 79 லட்சத்து 33 ஆயிரம் ரூபா அதிகம்.

போக்குவரத்து அமைச்சு:
7565 கோடியே 80லட்சம் ரூபா.

மின்சக்தி அமைச்சு:
24 கோடியே 32 லட்சத்து 20 ஆயிரம் ரூபா.

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு:
208 கோடி ரூபா.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு:
15371 கோடியே 60 லட்சம்.

கல்வி அமைச்சு:
4760 கோடி ரூபா. இது கடந்த வருடத்தை விடவும் 455 கோடி ரூபா அதிகம்.

உள்ளூராட்சி மாகாணங்கள் அமைச்சு:
23,468 கோடியே 66 லட்சத்து 40 ஆயிரம் ரூபா. இது கடந்த வருடத்தை விடவும் 8124 கோடியே 27 லட்சத்து 43 ஆயிரம் ரூபா அதிகம்.

வட மாகாணம்
இதில் வடக்கு மாகாணசபைக்கு 2014ஆம் ஆண்டுக்கு 1745 கோடியே 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், 2015 ஆம் ஆண்டுக்கு 295 கோடியே 78 லட்சம் ரூபா அதிகமாக்கப்பட்டு 2041 கோடியே 8 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம்
கிழக்கு மாகாணசபைக்கு 2014 ஆம் ஆண்டு 1617 கோடியே 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில், 2015ஆம் ஆண்டு 317 கோடியே 53 லட்சத்து 20 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டு 1935 கோடியே 33 லட்சத்து 20 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட கைத்தொழில் துறை அமைச்சு:
461 கோடியே 60 லட்சம் ரூபா.

மீள்குடியேற்ற அமைச்சு:
37 கோடியே 80 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

உயர்கல்வி அமைச்சு:
4110 கோடி ரூபா.

சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சு:
1417 கோடியே 30 லட்சம் ரூபா.

சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு:
5750 கோடி ரூபா. (ம-சி)

### வலி.வடக்கு

யேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் எதிர்வரும் 13 ஆம் திகதி, வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகள் ஜனாதிபதி செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி, வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது. அத்துடன் கலந்துரையாடலின் போது மக்களையும் அனுமதிக்கவுள்ளனர் என்று தெரியவருகின்றது. இந்த நிலையிலேயே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"வடக்கு மாகாணத்தின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக வலி.வடக்கு மீள்குடியேற்றம் உள்ளது. 24 வருடங்களாக சொந்த நிலத்துக்கு திரும்ப முடியாமல் வாடகை வீடுகளிலும், உறவினர் - நண்பர்கள் வீடுகளிலும், நலன்புரி நிலையங்களிலும் எமது மக்கள் தங்கியுள்ளனர்.

எமது மக்கள் பொருளாதார ரீதியிலும் சரி, வாழ்வாதார ரீதியிலும் சரி பல்வேறு பிரச்சினைகளை தினமும் எதிர்கொண்டிருக்கின்றனர். எனவே எமது வலி.வடக்கு மக்களின் பிரச்சினைகளைச் சொல்வதற்கும், அதற்குரிய தீர்வைப் பெற்றுத் தருவதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, எமது பிரச்சினைகளைத் தெரியப்படுத்துவதற்கு, மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இடம் ஒதுக்கித் தரப்பட வேண்டும்"- என்று தெரிவித் தார். (ம-5)

### மஹிந்தவின்

நொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி மகாவித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை திறந்து வைக்கவுள்ளார். அதன் பின்னர் மாவட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாவட்ட செயலகக் கட்டடத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

மறுநாள் 13 ஆம் திகதி பளையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான புகையிரத சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ள ஜனாதிபதி கொடிகாமம் நாவற்குழி பகுதிகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புகையிரத நிலையங்களை திறந்து வைக்கும் அதேவேளை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரதான புகையிரத நிலையத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

மு.ப. 10 மணியளவில், யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஜனாதிபதி அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள மாகாண விசேட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் பங்கேற்கும் அதேவேளை துரையப்பா விளையாட்டரங்கில் அரச உத்தியோகத்தர்களுக்கு 2 ஆயிரம் மோட்டார் சைக்கிள்களையும் வழங்கி வைக்கவுள்ளார்.

அதன் பின்னர் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களையும் திறந்து வைக்கவுள்ளார்.

14 ஆம் திகதி நயினாதீவிற்கு பயணம் மேற்கொள்ளும் ஜனாதிபதி நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலுக்கும், நாகதீபம் விகாரைக்கும் சென்று விசேட வழிபாடுகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து நெடுந்தீவிற்கு சென்று அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலக கட்டடத்தையும் திறந்து வைக்கவுள்ளார். இதேபோன்று நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தையும் திறந்து வைக்கவுள்ளார். இதேதினம் வேலணை பகுதிக்குச் செல்லும் ஜனாதிபதி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலக கட்டடத்தை திறந்து வைப்பதுடன் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, காரைநகர் தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆகியவற்றில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களையும் திறந்து வைக்கவுள்ளார்.

13 ஆம் திகதியும், 14 ஆம் திகதியும் யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளார். வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வு, நெடுந்தீவு, மருதங்கேணி, வேலணை பிரதேச செயலகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன. மேலும், பல பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக, ஜனாதிபதி செயலகத்திலிருந்து அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர். இந்தக் குழுவினால் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று பல்வேறு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்குக்கு வரும்போது சாதாரணமான பாதுகாப்பு ஏற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும், தற்போதைய பயணத்துக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு விசேட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. (ம-5)

### இராணுவத்தின்

யில் நடைபெற்றது. அப்போது, "வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் இராணுவத்தினரால் தல்செவன போன்ற விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதனால் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய உள்ளூர் விடுதிகள் பாதிப்பை எதிர்கொள்ளாதா?"- என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"வடக்கு மாகாணத்தில் உள்ள விடுதிகள், காணிகளை நிரந்தரமாக வாங்கி அதற்கேற்ப உரிய தொழிலாளர்களை பயிற்றுவித்து தொழிலை ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில் இங்குள்ள இராணுவத்தினர் பொதுக்காணிகளில் தல்செவன போன்ற விடுதிகளை அமைத்து இங்கு வரும் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எம்மால் ஒரு எல்லைக்குள் மட்டும்தான் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இங்கு பெரும் முதலீடுகளை இட்டு, சுற்றுலாத்துறையை மட்டும் நம்பி விடுதிகளை ஆரம்பித்துள்ளவர்களுக்கு இது பெரும் தலையிடியாகவே மாறியுள்ளது"- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும்போது:

"2016 ஆம் ஆண்டு 2.5 மில்லியன் சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு வரவழைக்க வேண்டும் எனும் இலக்கில் மத்திய அரசு பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. எனவே இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் வடமாகாணத் துக்கும் வரும் வகையில் சில கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது.

அதற்காக சுற்றுலாத்துறை சார்ந்தவர்களுக்கான கருத்தமர்வுகள், பயிற்சிப்பட்டறைகளை சுற்றுலாத்துறை ஒன்றியம் மேற்கொண்டு வருகிறது.

இதனைவிட வலய மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு அவர்களது பிரதேசம் சார்ந்த விடயங்கள் தொடர்பான கட்டுரைப் போட்டிகளையும் நடத்தவுள்ளோம். வடக்கு மாகாணத்தில் உள்ள விடுதிகள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் இருப்பதால் மாகண அமைச்சுடன் இணைந்து செயற்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஊடாக ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. சுற்றுலாத்துறை அதிகார சபையில் பதிவு செய்யப்படாத விடுதிகளை பதிவு செய்யுமாறும் கோருகின்றோம்"- என்று தெரிவித்தார். (ம-14,ரி)

### கூட்டமைப்பு

கட்சிகளையும் ஒன்றிணைக்குமாறு பிரதமர் மோடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

அதன்பின்னணியில், தமிழர் தரப்பின் மிகப்பெரும் கட்சியாகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், முஸ்லிம் தரப்பில் மிகப்பெரும் கட்சியாகவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் முதலாவது சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவிக்கையில்,

"முதலாவது சந்திப்பாக இது அமையவுள்ளது. அவர்கள் எங்களுடன் இணைந்து செயற்படுவார்களா என்பதை இந்தச் சந்திப்பிலேயே அறிய முடியும். ஏனெனில் அவர்கள், அரச தரப்பின் பங்காளிக் கட்சியாக இன்னமும் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

இன்றைய சந்திப்பில், பெரும்பாலும் அவர்கள் என்ன சொல்கின்றார்கள், அவர்கள் எவ்வாறு இணைந்து செயற்படப் போகின்றார்கள் என்பதைப் பற்றி அறிவதே எமது நோக்கமாக இருக்கும்" என்று குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான துரைரெட்ணம், ஹென்றி மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டை அறிவதற்காக, அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் ஹசன் அலியுடன் பலமுறை தொடர்பு கொண்டபோதும் அவர் பதிலளிக்கவில்லை.(ம-5)

### தியாகி

தேசம் எங்கிலும் நேற்று உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கை இந்திய அமைதிப் படை ஆக்கிரமித்திருந்த காலத்தில், காந்திய தேசத்துக்கு எதிராக அகிம்சை வழியில் 5 கோரிக்கைகளை முன்வைத்து இராசையா பார்த்தீபன் என்ற இயற்பெயர் கொண்ட திலீபன் உணவு தவிர்ப்பிலிருந்தார். 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி நல்லூர் கோயில் முன்றிலில் திலீபனின் உணவு தவிர்ப்பு ஆரம்பமானது.

மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும், கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும், சிறைக்கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பமான உணவு தவிர்ப்புப் போராட்டம், தொடர்ச்சியாக 12 நாள்கள் நீடித்தது. ஐந்து அம்சக் கோரிக்கைகளில் ஒன்றையேனும் நிறைவேற்றுவதற்கு இந்திய மத்திய அரசு முன்வரவில்லை. திலீபனின் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முடித்து வைக்கவும் இந்தியா எந்த முனைப்பும் காட்டவில்லை. 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி மு.ப. 10.48 மணியளவில் தனது போராட்டத்தில் உறுதியாக இருந்த திலீபன் உயிர் பிரிந்தது.

இவரது நினைவு நாள் தாயகத்திலும், புலத்திலும் நேற்றைய தினம் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வமாகக் நடந்தது. அதில் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். சென்னை செங்கொடி அரங்கத்தில், திலீபனின் நினைவாக மாணவர்கள் மற்றும் தமிழின உணர்வாளர்கள் உண்ணாவிரதம் இருப்பதற்காகச் சென்று கொண்டிருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ம-5)

### இரத்மலானை

கள் அதிகளவு வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி பிரதேசங்களில் தங்கியிருப்பதால் அதற்கு அண்மித்த பிரதேசத்தில் இருந்து பஸ் சேவை இடம்பெற வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைவாக இலங்கைப் போக்குவரத்து சபை பஸ் சேவையை நீடிப்பு செய்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் பஸ் இரத்மலானை வரை இனி சேவையில் ஈடுபடும். மீண்டும் அங்கிருந்து காலி வீதியூடாக புறக்கோட்டை பஸ் நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கான சேவை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

### பயிரை

என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்த மாணவனின் பெற்றோர் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததை அடுத்த, பொலிஸார் நேற்றுமுன்தினம் குறித்த பாடசாலை அதிபரைக் கைது செய்துள்ளனர். அவர் விரைவில் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-56)

### மோடிக்கு

இந்த வழக்கைத் தொடுத்திருக்கின்றனர்.

இந்தக் கலவரங்களில் 1000க் கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் முஸ் லிம்கள். மோடியை இந்திய நீதிமன்றங்கள் இந்தக் கலவரங்கள் தொடர்பான வழக்குகளில் குற்றமற்றவர் என்று கூறி தீர்ப்பளித்திருக்கின்றன. இந்தக் கலவரங்களில் மோடிக்கு இருந்ததாகக் கூறப்படும் தொடர்பு காரணமாக, அண்மையில் நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் அவரது பெரு வெற்றிக்கு முன்னதாக, அமெரிக்க நுழைவிசைவு அவருக்கு மறுக்கப்பட்டிருந்தது. (ம)

### மாவை

கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

"நீண்டகாலமாக இந்த நாட்டில் குற்றவாளியே நீதிவானாக இருக்கின்றார். அதனால் தமிழ் மக்களே பாதிப்படைந்தவர்களாக இருக்கின்றார்கள். இதனால் வேறு பலர் நீதிபதிகளாக மாறவேண்டிய நிலைமையை அவர்களே உருவாக்கியிருக்கின்றமையால் தற்போது சர்வதேச சமூகம் ஒரு நீதிபதியாக மாறியிருக்கின்றது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவு செய்யப்பட்டமையைப் பாராட்டும் முகமாக கட்சியின் கொழும்புக்கிளையின் ஏற்பாட்டில் பாராட்டு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"எமது பலம் எமது மக்கள். எமது உரிமைப் போராட்டம் ஆரம்பித்த காலம் முதல் எமது மக்கள் தமது உறுதியான நிலைப்பாட்டை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிரூபித்திருக்கின்றார்கள். தமிழ் மக்களின் உரிமையைப் பெற அகிம்சை ரீதியாக - ஆயுத ரீதியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

எமது அரசியல், பொருளாதார, சமூக கலாசார ரீதியான தேவைகளை நாமே முடிவெடுத்து நாமே நிறைவேற்றக்கூடிய வகையில் எமக்கு ஒரு அரசியல் தீர்வு தேவை. இக்கோரிக்கையில் எவ்வாறான தவறுமில்லை.

ஜனாதிபதி எமக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்க முடியாது எனக் கூறுகின்றார். எமக்குப் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் நாம் அதனைப் பக்குவமாகப் பயன்படுத்துவோம். அவர்களை விடவும் சிறப்பாகப் பயன்படுத்துவோம்.

ஒரு படித்த அனுபவம் வாய்ந்த தலைவர் 1957ஆம் ஆண்டு எமக்கு வழங்கிய காணி அதிகாரத்தை விடவும் குறைவான அதிகாரத்தை நாம் பெறலாமா? இது தற்போதுள்ள கேள்வி?

நீண்டகாலமாக இந்த நாட்டில் குற்றவாளியே நீதிவானாக இருக்கின்றார். இந்த நாட்டிலுள்ள பாரம்பரியத்தின் அடிப்படையில் குற்றவாளியும் நீதிவான்களில் ஒருவராகக் காணப்படுகின்றார். அதனால், தமிழ் மக்களே பாதிப்படைந்தவர்களாக இருக்கின்றார்கள்.

தற்போது சர்வதேச சமூகம் ஒரு நீதிபதியாக மாறியிருக்கின்றது. தொடர்ந்தும் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட முடியாது. பாதுகாப்பாக - கௌரவமாக ஒரு சமூகம் வாழ்வதற்குரிய அதிகாரங்கள் பகிரப்படவேண்டுமென சர்வதேச சமூகம் வலியுறுத்துகின்றது.

மத்தேகமவில் இருக்கும் மித்தபான தேரரை அண்மையில் சந்தித்தபோது, பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவதற்காக சத்தியாக்கிரகத்தில் தான் இருந்ததாகவும் அது எவ்வளவு பெரும் தவறு என்பதைத் தற்போது உணர்வதாகவும் கூறினார்.

என்னுடைய கருத்தின்படி அது மட்டுமன்றி, சிங்களத் தலைவர்கள் முன்வந்து உண்மையைச் சொல்பவராக இருந்தால் 85 வீதமான மக்கள் அதிகாரப் பகிர்வை ஆதரிப்பார்கள் என்றும் சொன்னார். இதுதான் நிலைமையாகும்.

தம்பி மாவை சோனாதிராசாவின் தலைமையில் அடுத்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கான ஒரு முடிவை நாம் காண முயற்சிக்க வேண்டும்" - என்று தெரிவித்தார். (ம-சி)

## கலந்துரையாடல்

வரணி, செப். 27
மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலக குழு வினரின் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமைபி.ப. 3மணியளவில் இடம் பெறும் என்று சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.
சங்க அங்கத்தவர்களை தவறாது வருடாந்தச் சந்தப் பணம் ரூபா 120ஐ கட்டி சங்க வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (வ-122)

# சோரம் போகாதவர்கள் படுவான்கரை மக்கள் நிலம் பறிபோகாததற்கு அதுவே காரணம்

## அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு

பட்டிப்பளை, செப். 27
படுவான்கரை மக்கள் எவருக்கும் சோரம்போகாத தமிழ் உணர்வு மிக்கவர்களாக இருப்பதன் காரணமாகவே அங்கு நிலம் அபகரிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டிருக்கின்றது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.
மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச சபைக்கு உட்பட்ட கெவுளியாமடு கிராம மக்களை வியாழக்கிழமை சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
படுவான்கரையில் அமைச்சர் ஒருவர் உருவாகி இருந்தால் படுவான்கரை நிலத்தில் அரைவாசி நிலப்பரப்பில் சிங்களவர்கள் குடியேறி இருப்பார்கள்.
படுவான்கரைப் பிரதேசம் என்பது தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற. நேசித்து வருகின்ற ஒரு பிரதேசமாகும் இங்குள்ள சிலர் அற்பசொற்ப ஆசைகளுக்காக வேண்டி மாற்றுக்கட்சியில் இணைந்து கொண்டார்கள் என்பதற்காக ஒட்டுமொத்த தமிழர்களும் அவர்கள் பின்னால் போக மாட்டார்கள் என்பதைக் காலம் அவர்களுக்குக் காட்டி நிற்கும்.
இதனைப் புரிந்து கொள்ளாத அரசிலிருக்கும் சில தமிழ் அமைச்சர்கள் படுவான்கரையில் தமிழ் அமைச்சர் ஒருவரை எதிர்காலத்தில் உருவாக்க வேண்டும் என நினைத்



துள்ளார்கள். படுவான்கரை பிரதேசத்தில் உள்ள பேர்பெற்ற தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம் தாந்தாகம என பெயர்மாற்றப்பட்டிருந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.
பட்டிப்பளை பிரதேசத்துக்குட்பட்ட கெவுளியாமடுவில் கடந்த வருடம் மட்டக்களப்பில் இருக்கும் பௌத்த பிக்கு ஒருவர் சட்டவிரோதமாக சிங்களக் குடியேற்றம் செய்ய முற்பட்டபோது அதனைத் தடுத்து நிறுத்தி எமது மக்களின் பூர்வீக நிலங்களைக் காப்பாற்றியவர்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.
அது மட்டுமல்ல மாற்று இனங்களால் தமிழர்களது பூர்வீக நிலங்கள் எங்கெங்கெல்லாம் அபகரிக்கப்பட்டு வருகின்றனவோ அங்கெல்லாம்சென்று அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்வதும், அதற்கான தீர்வை வேண்டி நிற்பவர்களும் கூட்டமைப் பினர் தான். இலங்கை முழுவதிலும் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு எமது வரிப்பணத்தில் இருந்து 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படுகின்றது. இந்தச் செயற்பாடானது முழு இலங்கையருக்கும் செய்யப்படும் ஒரு நடைமுறையாகும். ஆனால் மட்டக்களப்பில் உள்ள அரசில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகள் இந்த மாவட்டத்துக்கு மாத்திரம்தான் இந்த நிதி ஒதுக்கப்படுவதாகவும் இதற்கு தாங்கள்தான் காரணம் என்றும் மக்களுக்கு தவறான பரப்புரையை செய்து அதில் அரசியல் இலாபம் தேடுகின்றார்கள்- என்றார். (ஒ-10)

## ஹஜ் கடமைக்கு வழிகாட்டுகின்றது கல்முனை மாநகர சபை

ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு நிறைவேற்றப்படவுள்ள உழ்ஹிய்யா கடமையை சீராக மேற்கொள்வதற்கு கல்முனை மாநகர சபை வழி காட்டல் களை வழங்க முன் வந்துள்ளது.
மாநகர முதல்வர் எம்.நிஸாம் காரியப்பரின் ஆலோசனையின் பேரில் மாநகர சபை சுகாதாரத் திணைக்களம் இதற்கான திட்டத்தை வகுத்துள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் வியாழக்கிழமை கல்முனை மாநகர சபையில் சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எம்.சி.எம். மாஹிர் தலைமையில் இடம் பெற்றது.
இதன்போது உழ்ஹிய்யா கடமையை பொது மக்கள் இடையூறின்றி சிறப்பாக மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக விவரிக்கப்பட்டதுடன் அவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.
குறிப்பாக உழ்ஹிய்யாவுக்காக அறுக்கப்படுகின்ற மாடுகளின் கழிவுகளை பொது மக்கள் இலகுவாக அகற்றுவதற்கு மாநகர சபை மேற் கொண்டுள்ள திட்டம் பற்றியும் அதி காரிகளினால் விவரிக்கப்பட்டது.
இதன் பிரகாரம் இந்தக் கழிவுகளை உரிய இடங்களுக்கு சென்று இலவசமாக சேகரிப்பதற்கு தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக மாநகர சபை நடவடிக்கை எடுத்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது. (ஒ-10)



கனடா நாட்டின்விசேட பிரதிநிதி ஜவாத் குரோசி நேற்று வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீதை திருகோணமலையில் அமைந்துள்ள அவரது பணிமனையில் சந்தித்து பேச்சு நடத்தினார்.
இந்தச் சந்திப்பில் பிரதானமாக கிழக்கில் போருக்குப் பின்னரான நிலைமை மக்களின் இயல்பு வாழ்வு. மூவின மக்களின் நல்லுறவு குறித்தும் கலந்துரையாடினார்கள். இதன் போது முதலமைச்சர் கல்வி- சுற்றுலா மற்றும் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் விசேடமாக அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கைத்தறி (நெசவு) உற்பத்தியை நவீன முறையில் முன்னெடுப்பதோடு ஏற்றுமதி செய்வதற்கான ஒத்தாசைகளை வழங்குமாறும் கேட்டுக் கொண்டார். (ஒ-10)

## கலையம்சங்களை மறந்து ஜடங்களாகி விட்டனர் மனிதர்

### ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் கவலை

ஏறாவூர், செப். 27
தற்காலத்தில் கலையம்சங்களை மறந்த ஜடங்களாக நாம் நமது வாழ்க்கை முறையை இயந்திர மயமாக்கிக் கொண்டிருக்கின்றோம் என ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா தெரிவித்துள்ளார்.
ஏறாவூர் நகர பிரதேச செயலக கலாசாரப் பிரிவு ஏற்பாடு செய்திருந்த மாணவர்களுக்கான ஆக்கத்திறன் விருத்திப் பயிற்சி நெறி வியாழக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,
கலாசார விடயங்களைப் பேணிக்காப்பதிலே நாம் மிகவும்பின்தங்கியிருக்கின்றோம். பாரம்பரிய கலாசார பண்பாட்டு விழுமியங்கள் அருகி வருகின்றன. பாரம்பரியங்களிலுள்ள சிறப்பம்சங்களைப் பாதுகாத்து அவற்றை எதிர்கால சந்ததிக்கு ஒப்படைக்க வேண்டும் என்பதற்காக உலகின் பல பாகங்களிலும் ஆர்வலர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கலை கலாசார அம்சங்களுக்காக நடத்தப்படுகின்ற போட்டிகளில் மாணவர்களின் ஈடுபாடு அருகி வருவதைக் காணக் கூடியதாக வுள்ளது.
கலையம்சங்களுக்குப் புத்துயிரூட்ட வேண்டும் என்பதற்காக கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்கமைவாகவே ஏறாவூர் நகரப் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவு ஏறாவூர் கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஆக்கத் திறன் பயிற்சியை அளிக்க முன்வந்துள்ளது.
டிஜிற்றல் தொழில் நுட்பத்தில் உருவான உயிரோட்டமில்லாத இறக்குமதி செய்யப்பட்ட கலாசார அம்சங்களை நாம் பணம் கொடுத்து வாங்கி அதனை இருந்த இடத்தில் அமர்ந்தவாறேரசித்துக் கொண்டிருக்கின்றோம். இது ஒரு மரத்துப்போன வாழ்க்கைமுறைக்கு நாம் பழக்கப்பட்டு விட்டோம் என்பதன் வெளிப்பாடாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது.
இதுஒருசவால்மிக்கவாழ்க்கை முறை. இயற்கையோடும் யதார்த்தத்தோடும் பொருந்தாத ஒன்றை நாம் ரசித்துக் கொண்டிருக்கின்றோம். எனவே சவால்களை முறியடிப்பதற்காக எமது இளஞ் சமுதாயத்தினரை கலையம்சம் பொருந்திய உணர்வுள்ளவர்களாக மாற்ற வேண்டும் எனத் தெரிவித்தார். (ஒ-10)

# தமக்குரிய நியமனம் வேறொருவருக்கு நீதி கோரி ஜனாதிபதிக்குக் கடிதம்

## அனுப்பி வைத்தார் பெண் நூலக உதவியாளர்

பாலமுனை, செப், 27
நிரந்தரமாக தமக்கு வழங்கப்பட வேண்டிய தொழில் நியமனத்தை, தன்னை விடவும் குறைந்த தகைமையுடைய ஒருவருக்கு வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும், பாரபட்ச நடவடிக்கைக்கு எதிராக நீதி கோரி அட்டாளைச்சேனை பிரதேச சபையின் கீழுள்ள பாலமுனை நூலகத்தில் கடமையாற்றும் பெண் ஒருவர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.
பாலமுனை நூலகத்தில் மேற்படி பெண் 14 வருடங்களுக்கும் மேலாக சமயாசமய அடிப்படையில் நூலக உதவியாளராகக் கடமையாற்றி வருகின்றார். இந்த நிலையில், தன்னை விட அனுபவமும், குறித்த தொழிலில் தகைமையும் குறைந்த நபரொருவருக்கு தான் வகித்து வரும் பதவியை நிரந்தரமாக வழங்குவதற்கான நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்படுவதாகவும், அதனைத் தடுத்து நிறுத்தி குறித்த பதவியை தனக்கு நிரந்தரமாக வழங்குமாறும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் அந்தப் பெண்.
நூலக உதவியாளருக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படும்போது, இந்தப் பெண்ணுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென பிரதேச சபையினரால் பல்வேறு தடவைகளில் உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, தகைமையுடையவர்களிடம் இருந்து கடந்த ஜூன் மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.
அட்டாளைச்சேனை பிரதேச சபையில் நிலவும் மின் தொழிலாளி, நூலக உதவியாளர், களத் தொழிலாளி மற்றும் சுகாதாரத் தொழிலாளிகளுக்கான பதவிகளுக்கு நிரந்தரமாக ஆள்களை நியமிக்கும் வகையில் மேற்படி விண்ணப்பங்கள் கோரப் பட்டன.
அட்டாளைச்சேனை பிரதேச சபையில் நூலக உதவியாளர் இரு வெற்றிடங்களும் காணப்படுகின்றன. எனவே பாலமுனை நூலகத்தில் நூலக உதவியாளராகக் கடமை யாற்றிவரும் மேற்படி எஸ். நபீஸதுல் மிஸ்றியா நூலக பரிசாரகர் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தார்.
இந்த நிலையில், கடந்த ஜூலை மாதம் 17 ஆம் திகதியன்று அட்டாளைச்சேனை பிரதேச சபைக் காரியாலயத்தில் நூலக உதவியாளர் பதவிக்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்று தற்போது அட்டாளைச்சேனை பிரதேச சபையில் நிலவும் நூலக உதவியாளர் பதவிக்கான இரு வெற்றிடங்களுக்கும் நிரந்தரமாக ஆள்களை நியமிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆயினும், நூலக உதவியாளர் பதவி வழங்கப்படவுள்ளோருக்கான பட்டியலில் தனது பெயர் புறக்கணிக்கப் பட்டுள்ளதாக மிஸ்றியா தெரிவிக்கின்றார்.
இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகியோருக்கும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் பிரதிகளை மிஸ்றியா அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

அதிகரித்துவரும் இளவயதுத் திருமணத்தையும், பாடசாலை இடைவிலகலையும் தடுக்கும் வகையில் வாகனேரியில் நடத்தப்பட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு கோகுலம் வித்தியாலயத்தில் நடைபெற்றது.



கோறளைப் பற்றுதெற்கு (கிரான்) பிரதேச செயலகத்தின், சிறுவர், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புப் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உளநல மருத்துவர் டாக்டர் ஜூடி ஜெயக்குமார். மற்றும் கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேசசெயலகத்தின், சிறுவர், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு அதிகாரி ஏ.ஆர்.எம். குசைட் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கியிருந்ததுடன் வாகனேரி கோகுலம் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பங்கேற்றிருந்தனர். (ஒ-10)

# தாயாரொருவர் கணவனுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் முறைப்பாடு

### தமது பிள்ளைகளை துஷ்பிரயோகம் செய்ததாக

தனது இளம் பராயத்திலுள்ள குழந்தைகளை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய கணவருக்கு எதிராகத் தாயாரொருவர் உயர் நீதி மன்றத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

அடிப்படை உரிமைகள் தொடர்பான இந்த முறைப்பாட்டில் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரசபை, பெண்கள், குழந்தைகளுக்கான பொலிஸ் பிரிவு, பொலிஸார் ஆகியோர் உரிய நடவடிக்கை எடுக்காத காரணமாக் பிரதிவாதிகளாக உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தமது கணவன் 10 மற்றும் 8 வயதுள்ள தமது முதல் தாரத்துப் பெண் குழந்தைகளையும், மேலும் இரு குழந்தைகள் இருவரையும் தனது கணவன் துஷ்பிரயோகம் செய்ததாக அவர் சமர்ப்பித்துள்ள மனுவில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தின் பெண்கள் சிறுவர்பிரிவுக்கான பணிப்பாளர் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரான அனோமா திஸநாயக்க, மாரவில பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

தாம் மாரவில்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்வதற்கு 10 இல் இருந்து 12 தடவைகளுக்கும் மேலாக அங்கு சென்றதாகவும் ஆனால் அங்குள்ளவர்கள் தமது முறைப்பாட்டைப் பதிவு செய்யவில்லையெனவும் மனுதாரர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்த முறைப்பாடு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் பெண்கள், சிறுவர்பிரிவினர் குழந்தைகளைத் துஷ் பிரயோகம் செய்தவரைக் காப்பாற்ற முனைவது நீதிமன்றத்தையும், நீதித்துறையையும் தவறாக வழிநடத்தும் செயலெனவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# இலங்கையில் 45,000 போதைப்பொருள் அடிமைகள்

கொழும்பு, செப். 27

இலங்கையர்களில் 45 ஆயிரம் பேர் போதைப் பொருள்களுக்கு அடிமையான நிலையில் காணப்படுவதாக தேசிய தீங்கு விளைவிக்கக் கூடிய போதை வஸ்துக்களைக் கட்டுப்படுத்தும் சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது: கண்டி, நித்தம்புவ, காலி, கொழும்பு ஆகிய இடங்களில் நான்கு முகாம்கள் அமைக்கப்பட்டு போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டு வருகின்றது. சுமார் 2 ஆயிரம் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு ஆண்டு தோறும் இவர்களின் வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்கப்படுகின்றது. இவர்களில் ஆயிரம் பேருக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் சிகிச்சை வழங்கி வருகின்றன. மேலும் இவர்களுக்கு மூன்று மாத கால தொழிற் பயிற்சியும் வழங்கப்படுவதாக சபையின் தலைவரான திருமதி லீசா டி சில்வா தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இருபது வயதுக்கு உட்பட்டவர்களுக்கு கண்டியிலுள்ள புனர்வாழ்வு நிலையத்தில் சிகிச்சை வழங்கப்படுகின்றது. ஏனையவர்களுக்கு அவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையான காலப்பகுதியின் அடிப்படையில் ஏனைய நிலையங்களில் புனர்வாழ்வு அளிக்கப்படுகின்றது. விசேடமாக சிறுவர்களுக்கு பாடசாலைக் கல்வியும் வழங்கப்பட்டு வருகின்றது.

எமக்கு வார மொன்றுக்கு 250 இல் இருந்து 300 வரையான முறைப்பாடுகள் போதைப் பொருள் தொடர்பாகக் கிடைத்து வருகின்றன. நாம் இதை போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தக்குத் தெரியப்படுத்துகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

## உடனடி வேலைவாய்ப்பு

## பணிநிலை வெற்றிடம்

அலுவலக உதவியாளர்கள்
(Office Assistants)

**நேர்முகத்தேர்வு :**
27.09.2014 சனிக்கிழமை
மு.ப 09.30 மணி - பி.ப 01.00 மணி வரை

ANDRA Digital Image
356/167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0776622981, 021 222 8929

## கண்ணீர் அஞ்சலி



சிறந்த சிற்பாசாரியாரும் எமது நண்பருமான

**சின்னத்தம்பி மகேஸ்வரன்**

அவர்கள் இறைபதமெய்திய செய்தி கேட்டு வருந்துகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்
மதுரா நகை மாடம்

(52627) (10)

## விற்பனைக்கு

Scooty pep+, 5KV லிஸ்ரர் ஜெனரேற்றர், கச்சான் கோது நீக்கும் இயந்திரம், வீட்டுத் தளபாடங்கள், ரயர் கடை, அரைக்கும் ஆலை என்பவற்றுக்குரிய பொருள்கள் விற்பனைக்கு.

தொடர்புகொள்ள: 077 991 2304 (52623) (10)

## காணி விற்பனைக்கு

நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகிலும், யாழ்.கல்வி வலயத்திற்கு அருகிலும், நல்லூர் செல்லர்லேன் செம்மணி வீதியில் நிலப்பரப்பு இரண்டு (2) வருமானம் நிறைந்த வெறுங்காணி விற்பனைக்குண்டு.

(52618) (12.3.6) தொடர்பு: 077 743 2645

## VACANCY

மின்சார வேலை (Electrical) குழாய் பொருத்துவேலை (Plumbing) ஆகியவற்றில் அனுபவம் வாய்ந்த 30 - 45 வயதுக்கிடைப்பட்ட ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்கள் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அதிபர்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி15975) (12.3.6)

## எழுவைதீவு
## புனித தோமையார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்
## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தின் கருவாடு உற்பத்தி நிலையத்திற்கும் அதனோடிணைந்த ஏனைய தொழிற்பாடுகளுக்குமாக கீழே குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) பொது முகாமையாளர்

★ முன்னிலைப்படுத்தப்படும் கடமைப்பட்டியல்
* சங்கம் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல்.
* சங்க உற்பத்தி சார்ந்த அனைத்துக் கணக்கறிக்கைகளையும் உறுதி செய்தல்.
* நிர்வாக ஒழுங்கமைப்பு மற்றும் வியாபார திட்டமிடலுக்கு ஏற்றவாறான புதிய உத்திகளை முன்னெடுத்தல்.
* பணிப்பாளர் சபையினால் பணிக்கப்படும் அனைத்துக் கடமைகளையும் மேற்கொள்ளல்.
* சங்கத்தின் நிதி, தொழில்நுட்ப, சேவை, வியாபாரம் தொடர்பான தந்திரோபாயங்களை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.

★ தகைமைகள்
* க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியுடன் முகாமைத்துவத் துறையில் அல்லது இதனுடன் தொடர்புடைய துறையில் முன்னனுபவத்தைக் கொண்டிருத்தல்
* நிர்வாக ஒழுங்கமைப்பு மற்றும் வியாபார திட்டமிடலுக்கு ஏற்றவாறான புதிய உற்பத்திகளை முன்னெடுக்கும் திறன்களைக் கொண்டிருத்தல்.
* வேலைகளை முன்னெடுக்க கூடியளவில் கணினி மற்றும் ஆங்கில அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
* வயதெல்லை 18-45 வருடங்கள்.

2) உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்

★ முன்னிலைப்படுத்தப்படும் கடமைப்பட்டியல்
* உற்பத்தி செய்முறையை மேற்பார்வை செய்தல், உற்பத்தி மற்றும் உற்பத்தி வட்ட செயற்பாடுகளை உரிய ஆலோசனைகளைப் பெற்று முன்னெடுத்தல்.
* சந்தைப்படுத்தலில் சந்தையைத் தீர்மானித்து உரிய வழிகாட்டுதல்களைப் பெற்று கூட்டுறவு நடைமுறைகளுக்கேற்ப சந்தைப்படுத்தலை முன்னெடுத்தலும் அறிக்கையிடலும்.

★ தகைமைகள்
* க.பொ.த.உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியுடன் உற்பத்தி / சந்தைப்படுத்தலில் முன்னனுபவத்தைக் கொண்டிருத்தல்.
* உற்பத்தி / சந்தைப்படுத்தலில் மேலதிகக் கல்வி
* சிறந்த தொடர்பாடல் திறன்.
* வயதெல்லை 18-45 வருடங்கள்.

3) கணக்காளர்

★ முன்னிலைப்படுத்தப்படும் கடமைப்பட்டியல்
* மாதாந்த, வருடாந்த நிதிக்கணக்குகளை தயாரிப்பதற்காக நிதித் தகவல்களை பதிவு செய்தலும் ஆய்வு செய்தலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கத்தின் கொள்கைகள் நடைமுறைகளுக்கேற்ப நிதிப்பதிவுகள் அமைவதை உறுதிப்படுத்தல், நிதிப்பதிவுகளுக்கான காலக்கெடுக்களை அவதானித்து இயங்குதல் முகாமைத்துவத்திற்கும் பணிப்பாளர் சபைக்கும் நிதி முகாமைத்துவ அறிக்கைகளை தயாரித்து வழங்கல்.

★ தகைமைகள்
* க.பொ.த உயர்தரத்தில் வணிகத்துறையில் மூன்று பாடங்கள் சித்தியுடன் முன்னனுபவத்தை கொண்டிருந்தல்.
* கணக்கியலில் மேலதிக கல்வி
* வேலைகளை முன்னெடுக்க கூடியளவில் கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
* வயதெல்லை 18-45 வருடங்கள்

4) காசாளர்

★ முன்னிலைப்படுத்தப்படும் கடமைப்பட்டியல்
* நிதிகையாளுகையும் மற்றும் வாடிக்கையாளர் தொடர்பாடலுடன் கூடிய ஆவணங்களைப் பேணலும் வெளிப்படைத் தன்மையும்.

★ தகைமைகள்
* க.பொ.த.உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி / க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதத்தில் சித்தியுடன் 3 வருட முன்னனுபவத்தைக் கொண்டிருத்தல்.
* வயதெல்லை 18-45 வருடங்கள்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் உள்ளடக்கப்படுவதுடன் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 10.10.2014 இற்கு முன் கீழே உள்ள முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.

தலைவர்,
எழுவைதீவு புனித தோமையார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,
எழுவைதீவு, ஊர்காவற்றுறை.

(52619)(5.6)

## இலவச சட்ட ஆலோசனை முகாம்

- நீங்கள் அரச அல்லது தனியார் நிறுவனத்தினால் அநீதிக்கு இலக்கானவரா?
- அரச காணிகள் பற்றிய பிரச்சினைகளில் தொடர்புடையவரா?
- லஞ்சம், ஊழல், மோசடி தொடர்பில் நீங்கள் செய்த முறைப்பாட்டுக்கு நீதி கிடைக்கவில்லையா?
- சட்டத்தரணிகளால் நாம் உங்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்குகின்றோம்

செப்ரெம்பர் - 28 யாழ்ப்பாணம்

**இடம்: சிவன் கோயில் மண்டபம், பருத்தித்துறை.**

**காலை: 09.00 - மாலை 04.00 வரை**

நேர்மையின் புகலிடம்
ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல்
077 283 0915 / 077 896 1987

(சி15974) (12.3.6)

# தொடர்ச்சிகள்

## விசாரணைக்குத்

களைக் கொண்டன என்றும், அளவுக்கதிகமானவை என்றும் நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 69ஆவது அமர்வில் உரையாற்றும்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். போருக்குப் பிந்திய இலங்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உள்ள சிலரின் தீய நோக்கத்துடனான நிகழ்ச்சி நிரலுக்கு துரதிஷ்டவசமாகப் பலியாகியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை- இலங்கையின் நீண்டகால நலன்களைக் கருத்திற்கொண்டு சர்வதேச விசாரணைக்குழுவுடனும், விசேட அறிக்கையாளர்களுடனும் ஒத்துழைக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் நேற்றுமுன்தினம் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கை குறித்து ஜெனிவாவில் விடுத்துள்ள வாய்மூல அறிக்கையிலேயே இதுகுறித்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மஹிந்தவின் நியூயோர்க் உரை மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் கோரிக்கை ஆகியவை தொடர்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனிடம் நேற்று 'உதயன்' வினவியது.

இதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் வைத்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாக்கூசாமல் விமர்சித்துள்ளார். ஆனால், இதே மனித உரிமைகள் ஆணைக்குழுதான் 2009இல் இலங்கை அரசைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. அந்த ஆண்டில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ - மூனுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் ஜனாதிபதி அளித்திருந்த வாக்குறுதிகளின் பிரகாரம் இந்த அரசு மீது மனித உரிமைகள் ஆணைக்குழு அன்று நம்பிக்கை வைத்திருந்தது.

ஆனால், இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான விசாரணைகள், மீள்குடியேற்றம், அரசியல் தீர்வு என ஜனாதிபதி மஹிந்த அளித்திருந்த மூன்று வாக்குறுதிகளையும் இலங்கை நிறைவேற்றாமல் இருந்ததனால் 2012இல் உள்நாட்டு விசாரணையை வலியுறுத்தி மனித உரிமைகள் சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

எனினும், இதனையும் இலங்கை அரசு அலட்சியம் செய்திருந்தமையால்தான் 2013இலும், 2014இலும் இலங்கைக்கு எதிராக அடுத்தடுத்து இரண்டு தீர்மானங்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டன.

2014 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சர்வதேச விசாரணையை வலியுறுத்துகின்றது.

ஆனால், இந்த விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காமல் நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் அமர்வில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாக்கூசாமல் கண்டபடி விமர்சித்துள்ளார்.

ஜனாதிபதி கூறுவதுபோல் இந்த விசாரணை அரசியல் நோக்கங்களைக் கொண்டதோ அல்லது சிலரின் சுயலாபத்துக்கோ அல்ல. இது இலங்கையின் எதிர்கால நலனைக்கொண்டது.

எனவே, ஐ.நா. விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைக்காவிடின் இதன் விளைவுகள் ஜனாதிபதி மஹிந்தவையும், அவர் தலைமையிலான அரசையும் மட்டும் பாதிக்காது; நாட்டு மக்களையும் பாதிப்படையச் செய்யும். இதனை உணர்ந்து அரசு பயணிக்கவேண்டும்" - என்றார்.

## நீடிக்கிறது

இரண்டாம் வாரமளவில், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு கிடைக்கப் பெற்றிருந்தன. அதில் யாழ்ப்பாணத்தில் முன்னணியிலுள்ள மூன்று பிரபல ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங்கள் உள்ளிட்ட பத்து நிறுவனங்களின் ஐஸ்கிறீமில் மலத்தொற்று இருந்தமை கண்டறியப்பட்டது.

ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யப் பயன்படும் குடிதண்ணீரில் கோலிபோர்ம் என்ற பக்ரீறியா இருந்தமையினால், அதில் மலத்தொற்று இருந்தமை உறுதி செய்யப்பட்டது. இந்த மலத்தொற்று, யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் நெருப்புக் காய்ச்சலுக்குப் பிரதானமாக ஒன்றாகும். நாடளாவிய ரீதியில் யாழ்.மாவட்டமே நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட எண்ணிக்கையில் முதலிடத்தில் உள்ளது.

'குறித்த அறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு ஐஸ்கிறீம் நிறுவனங்கள் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளோம். அவர்கள் குறித்த ஐஸ்கிறீம் நிறுவனங்களுக்குச் சென்று அவர்களுடைய குறைகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர். நிறுவனத்தின் உற்பத்தியை நிறுத்தி, அந்தக் குறைகளை சீர் செய்யுமாறு பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது' என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

உடுவில் பிரதேசத்தில் ஓர் ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்திகளைத் தற்காலிகமாக நிறுத்துமாறும், மற்றையதொரு நிறுவனத்துக்குத் தண்டப்பணம் விதித்தும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஏனைய நிறுவனங்களுக்கு இது ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கேட்டபோது, குறித்த நிறுவனத்துக்கும் மேற்சொன்ன அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கும். அவர்கள் அதனை ஏற்றுச் செய்ய மறுத்திருந்தால், குறித்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி நீதிமன்றில் வழக்குத் தொடுத்திருப்பார். ஏனைய இடங்களில் இவ்வாறு பிரச்சினை ஏற்படவில்லை'-என்றார்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் மூன்று பிரபலமான ஐஸ்கிறீம் நிறுவனங்களிலும் இவ்வாறு குறைகள் கண்டறியப்பட்டிருந்தன. ஆனாலும் அங்குள்ள நிறுவனமொன்றில் தொடர்ந்தும் ஐஸ்கிறீம் விற்பனை இடம்பெறுகின்றதே என்று கேட்டதற்கு, அந்தப் பகுதிச் சுகாதார வைத்திய அதிகாரி மூன்று நிறுவனங்களுக்கும் குறைகளைத் தெரிவித்துள்ளார். அத்துடன் அதில் இரண்டு நிறுவனங்கள் ஐஸ்கிறீம் உற்பத்தியை நிறுத்தியுள்ளன. அவர்கள் தமது சிற்றுண்டி விற்பனைகளை மாத்திரம் செய்கின்றனர். ஓர் நிறுவனம் மாத்திரம் எமது அறிவுறுத்தலையும் மீறி தொடர்ந்தும் ஐஸ்கிறீம் விற்பனை செய்து கொண்டிருப்பதாக அறிந்துள்ளோம்.

அந்த நிறுவனத்தின் உற்பத்தியை நிறுத்திக் குறைகளைத் திருத்த நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதார வைத்திய அதிகாரியைப் பணித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், முன்னணி நிறுவனங்கள் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்கள் அனைத்துக்கும் அவர்களின் குறைகளைச் சரி செய்யும் வரை உற்பத்திகளை நிறுத்த உத்தரவிட்டுள்ளோம். தமது குறைகளைச் சரி செய்த பின்னர் எமக்கு அறிவித்து, அதனை மீள நாம் பரிசோதனை செய்து அதன் அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னரே, அந்த நிறுவனங்கள் தமது உற்பத்தியைச் சந்தைப்படுத்தலாமா இல்லையா என்பதைப் பொதுமக்களுக்குப் பகிரங்கமாக அறிவிப்போம் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

இதேவேளை- கடந்த 18 ஆம் திகதி, மலத்தொற்றுள்ள ஐஸ்கிறீம் விற்பனை தொடர்பில் 'உதயன்' செய்தி வெளியிட்டிருந்தது. அன்றைய தினம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்திடம், இது தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்பது தொடர்பில் வினவப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதற்குள் தமது உற்பத்திகளை நிறுவனங்கள் சீர் செய்யாவிட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

தற்போது ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் நேற்று மீளவும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டது 'உதயன்'. உடுவில் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஐஸ்கிறீம் நிறுவனத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. நகரிலுள்ள முன்னணி மூன்று நிறுவனங்களுக்கு எதிரான நடவடிக்கை என்ன என்பது தொடர்பில் வினவியபோது,

இந்தச் சின்ன விடயங்களை எல்லாம், நான் பார்த்துக் கொண்டிருந்தால், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரோ அல்லது பொதுச் சுகாதார பரிசோதகரோ தேவையில்லை' -என்றார் பொறுப்பாக. (த-5)

## இலங்கை

அது தொடர்பான விவாதம் இடம்பெறும்போது, அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, இந்தியப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

'ஒவ்வொரு நாடும் மனித உரிமை மீறல்களுக்கு, வலுவான உள்ளூர் பொறிமுறைகள் மூலம் தீர்வு காண்பதற்கான வழிமுறை கண்டறிய வேண்டியது அவசியம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு இதற்கு அவசியமான கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப வளங்களை வழங்க வேண்டும். குறிப்பிட்ட நாட்டுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை மேற்கொள்வதே முன்னோக்கி நகர்வதற்கான சிறந்த வழி.

இலங்கை, ஐ.நா. விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்துள்ள நிலையில் மேற்கொண்டு விசாரணைகளை எவ்வாறு முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படாதமை தொடர்பில் நாம் கரிசனை கொண்டுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் விசாரணை குழு குறித்தும், அது செயற்படும் விதம் பற்றியும், அதற்கான நிதியுதவிகள் குறித்தும் தகவல்கள் வழங்கப்படவில்லை. அறிக்கையின் நம்பகத்தன்மைக்காக அதனை பகிரங்கப்படுத்துமாறு ஆணையாளரை நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கையில், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புகூறும் நடவடிக்கைகளுக்கு கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது முக்கியமானது.

காணமற்போனோர் குறித்தும், தடுத்து வைக்கப்பட்டுள்ளோர், உயர் பாதுகாப்பு வலயத்தைக் குறைத்தல், தனியார் காணிகளிலிருந்து இராணுவத்தை விலக்குதல் மற்றும் வட பகுதியில் பொதுமக்களின் பகுதிகளிலிருந்து படையினரை அகற்றுதல் போன்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் சிறப்பாகவும் விரைவிலும் நடைமுறைப்படுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இலங்கையின் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மேலாகக் கட்டியெழுப்படும் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்குச் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும், இந்தியா வலியுறுத்துகிறது.

அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப் பகிர்வில் கூடிய விரைவில் ஏற்படும் முன்னேற்றங்கள், பொறுப்புகூறும் விடயத்தைச் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் திருப்பதியளிக்கக் கூடிய விதத்தில் தீர்ப்பதற்கு வழிவகுக்கும்" என்று இந்தியப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (த-5)

## அரசியல்

சேகுதாவூத் வித்தியாலயத்தில் 50 லட்சம் ரூபா செலவில் மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.எல். பாறூக் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இன்று முக்கியமான அரசியல் சூழ்நிலை இலங்கையில் நிலவுகிறது. எல்லா ஊடகங்களும் ஊவா மாகாண சபைத் தேர்தல் அரசுக்கான ஒரு சிவப்புச் சமிக்ஞை என்று செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இது அரசுக்கு மாத்திரம் சிவப்புச் சமிக்ஞை அல்ல, இது எதிர்க் கட்சிகளுக்கும் ஒரு சிவப்பு சமிக்ஞைதான்.

எல்லா இனங்களையும் சமத்துவமாக மதிக்கின்ற எல்லோரும் இலங்கையர்கள் என்கின்ற யாப்புத் திருத்தம் வந்தால் தான் இலங்கை இனப் பிரச்சினையின் சகல வடிவங்களையும் ஒட்டு மொத்தமாகத் தீர்த்து வைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். இந்த நிலையில் சிறுபான்மைக் கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் பேச்சில் ஈடுபட ஒப்புக்கொண்டிருக்கின்றன. இந்தப் பேச்சில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான விடயங்களைத் தெளிவாகப் பேசவேண்டும்.

இந்த இனப் பிரச்சினைத் தீர்வு விடயங்களிலே தமிழர்களுடைய அடிப்படை அபிலாசை என்பது வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்த ஒரு அலகு. அந்த அலகுக்குள்ளே தங்களுக்குள்ள உள்ளக சுய நிர்ணய உரிமை ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் நின்று கொண்டு இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்திலே, சரியான, தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கின்ற அடிப்படையிலான சுய நிர்ணய உரிமையோடு கூடிய ஒரு தீர்வு என்பது தான் முஸ்லிம்களுக்கு வேண்டும்.

தமிழரும் முஸ்லிம்களும் இதய சுத்தியோடு அரசியல் இணக்கப்பாட்டுக்கு வந்து தாங்கள் இருவரும் பிரிக்க முடியாத சமூகத்தினர் என்று பெரும்பான்மைக்கு நிரூபிக்கும் வரை இந்த இரு சமூகத்தையும் கூறுபோட்டு வாழ்க்கையைச் சீரழிக்கின்ற பெரும்பான்மையின் சூழ்ச்சிக்கும் அந்நிய சக்திகளின் ஆதிக்கத்துக்கும் அடக்குமுறைக்கும் ஆளாக வேண்டிவரும். சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலம் தொடக்கம் இந்த சூழ்ச்சியைத் தான் சிங்கள அரசியல் செய்து வருகின்றது. கூனிக் குறுகி நிற்கும் முஸ்லிம் சமூகம் அதிலிருந்து மீண்டெழுந்து முஸ்லிம் சமூகம் மீண்டும் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலே தனது உரிமை அரசியலுக்காகக் குரல் கொடுக்க வேண்டும் - என்றார்.

(த-10)

## பொலிஸ் காவல்

இருக்க தமிழ் அமைப்பினர் பொலிஸாரிடம் அனுமதி கேட்டிருந்தனர். அதற்கு அனுமதி அளிக்காமல், உண்வு தவிர்ப்புக்கும் பொலிஸார் தடை விதித்தனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை 25 கல்லூரி மாணவர்கள் தடையை மீறி உணவு தவிர்ப்பில் இருக்க கோயம் பேட்டு 100 அடி சாலையில் உள்ள செங்கொடி அரங்கத்திற்கு திரண்டு வந்தனர். அவர்களை பாதுகாப்புக்கு நின்ற பொலிஸார் தடுத்துநிறுத்தி கைதுசெய்தனர்.

இந்த உணவு தவிர்ப்பில் கலந்துகொள்ள வந்த ம.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் மல்லை சத்யா, விடுதலை தமிழ் புலிகள் கட்சி நிறுவன தலைவர் குடந்தை அரசன், இயக்குநர்கள் புகழேந்தி தங்கராஜ், கவுதமன், ஓவியர் வீர சந்தானம், தமிழ்தேசக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை ராமசாமி, தமிழர் முன்னேற்றபடை வீரலட்சுமி உள்ளிட்டோரும் உணவு தவிர்ப்பில் இருக்க வந்தனர். அவர்களையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் அருகில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டு அங்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர். ஆனால் பொலிஸ் காவலில் இருந்த படியே கைதுசெய்யப்பட்டோர் தியாக தீபம் திலீபனுக்கு வீரவணக்கம் செலுத்தினர்.

இதேவேளை- சென்னை அசோக் நகரில் உள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அலுவலகத்தில் திலீபனின் திருவுருவப் படத்துக்கு அக் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தினார்.

## விபத்தில்

பல்கலைக்கழக கலைப் பீட இறுதி ஆண்டு மாணவன் இ.சுதீபன் (வயது-24) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்த இருவரும் மந்திகை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேல்திக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(த-8)

## பொலிஸ்

இதன்போதே சட்டத்தரணிகள் இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் முறையிட்டனர்.

பொலிஸார் தனிச் சிங்களத்தில் வழக்குத் தொடுக்கின்றனர். முதல் முறைப்பாட்டு அறிக்கை உள்ளிட்டவற்றையும் தனிச் சிங்களத்திலேயே அறிக்கைகளாகச் சமர்ப்பிக்கின்றனர். அதனால் நாம் வழக்கைக் கொண்டு நடத்துவதில் சிக்கலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

நீதிமன்றங்களில் மொழி பெயர்ப்பாளர்கள் இல்லாத- போதாத காரணத்தாலும் இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

அவை தொடர்பில் தான் ஆராய்வதாகச் சட்டமா அதிபர் கூறியுள்ளார் என்று சட்டத்தரணிகள் கூறினர்.

(த-4)

## வடமராட்சியில்

கடும் வறட்சியும் நிலவியது. இந்த நிலையில் நேற்று பிற்பகல் ஒரு மணிக்குப் பொழியத் தொடங்கிய மழை சுமார், ஒரு மணி நேரமாகப் பெய்தது. இதனால் பெரும்பாலான இடங்களில் வெள்ளம் தேங்கியது.

இதேவேளை- நேற்றைய தினம் பாடசாலை தினமாகையால் மழையைக் கண்ட மாணவர்கள் குதூகலம் அடைந்தனர். அவர்கள் மழையில் நனைந்தவாறு விளையாட்டில் ஈடுபட்டதையும் அவதானிக்க முடிந்தது.

(த-108)

## வட மாகாண

செய்துள்ளது.

அத்துடன் 5 மாவட்டங்களிலும் உள்ள பிரதேச சபைகளின் தலைவர், செயலாளர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு அவர்களது பிரதேசங்களில் உள்ள சுற்றுலாத்துறை சம்பந்தமான செயற்திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்த மாநாட்டில் பல முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் சுற்றுலாத்துறையுடன் அனுபவம் உடைய கல்வியாளர்களையும் கலந்து கொண்டு தமது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(த-14)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.செப்.27
வடமாகாணத்தில் பயன்தரு மரங்கள் அலங்காரத் தாவரங்கள் ஆகியவற்றை உற்பத்திசெய்வோர் மற்றும் அவற்றை விற்பனை செய்வோருடனான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கண்டி வீதி அரியாலையில் உள்ள வட மாகாண விவசாய அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.
வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக்கலந்துரையாடலில் உற்பத்தி செய்வதிலும் விற்பனை செய்வதிலும் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், விற்பனைக் கண்காட்சி, ஏனைய மாகாணங்களில் இருந்து வரும் அலங்காரச் செடி விற்பனையாளர்களால் ஏற்படும் சவால்கள் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. (வ-14)



யாழ். முற்றவெளி மற்றும் அதனை அண்டிய பிரதேசத்தை ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு இராணுவத்தினர் மும்முரமாக துப்புரவு செய்தனர்.
யாழ். மாநகர தொழிலாளர்களுடன் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அந்தப் பகுதியை தூய்மையாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அந்த பிரதேசத்தில் படர்ந்து வளர்ந்திருக்கும் செடிகள் என்பன வெட்டி அழிக்கப்பட்டன. அதனை விட இந்தப் பகுதியில் உள்ள பனை வடலிகளும் சீர் செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டு வருகின்றன. (வ-17)

## விபத்துக்கள்

### கலாசார அலுவலர் விபத்தில் காயம்

வலி.வடக்கு, செப்.27
மருதனார்மடம் சந்தி கிழக்கு அண்மையாக இடம்பெற்ற விபத்தில் உடுவில் பிரதேச செயலக கலாசார அலுவலர் படுகாயத்துக்கு உள்ளாகிய நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இந்த விபத்து மருதனார்மடம் இராமநாதன் கலலூரி முன்றிலில் உள்ள வீதிக் கடவைக்கு அருகாமையில் நேற்று இடம்பெற்றது.
அலுவலகத்துக்குச் செல்வதற்காக குறிப்பிட்ட வீதிக் கடவையை கடக்க முற்பட்ட வேளையில் குறுக்கே ஒருவர் வந்த நிலையில் அவரைக் காப்பாற்ற முற்பட்டு நிறுத்த முயன்ற நிலையில்வீழ்ந்து படுகாயத்துக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.
விபத்தில் காயங்களுக்கு உள்ளாகியவர் திருமதி சிவஞான சேகரம் பத்மராணி (வயது- 50) என்பவராவார். அவர் தலைக் காயத்துக்கு உள்ளாகிய நிலையில் யாழ்.போதனா மருத்துவமனைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(வ-86)

### கட்டுப்பாட்டை இழந்த பஸ் மோதியதில் வயோதிபர் சாவு

திருமலை, செப்.27
திருகோணமலைகோணேஸ்வரர் ஆலயத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்று கட்டுப்பாட்டை மீறி மோதுண்டதால் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. 70 வயதுடைய ஒருவரே இதன் போது உயிரிழந்துள்ளதாக பொலிஸார்தெரிவித்துள்ளனர்.
நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் கட்டுப்பாட்டையிழந்து பின்னோக்கி நகர்ந்தபோது பஸ்ஸின் பின்னாலிருந்த வயோதிபர் மோதுண்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான வயோதிபர் திருகோணமலை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்
விபத்து தொடர்பில் திருகோணமலை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-10)

### விபத்தில் முதியவர் காயம்

தென்மராட்சி, செப்.27
வீதி விபத்தில் சிக்கி முதியவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நுணாவில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.
நுணாவில் மேற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் தனபாலசிங்கம் (வயது-67) என்பவரே காயமடைந்த நிலையில்சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டார். (வ-9)

## குற்றங்களும் கைதுகளும்

மட்டக்களப்பு

### தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு களுவங்கேணிப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மொறக் கொட்டாஞ்சேனை வீதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான ஸ்ரீகந்தராஜா ரவிச்சந்திரன்(வயது—24) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது மனைவி வெளிநாடு சென்றதன் பின்னர் இருவருக்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லை என்றும்—அவரது பிள்ளைகள் இருவரும் மனைவியின் தாயாரிடத்திலேயே பராமரிக்கப்படுவதாகவும் தனது பிள்ளைகளையும் அவர் சென்று பார்ப்பதில்லை என்றும் உறவினர்கள் விசாரணையின் போது தெரிவித்துள்ளனர். மதுவுக்கு அடிமையான குறித்த நபர் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மதியம் அவரது தந்தை கூலி வேலை செய்யும் தென்னந் தோட்டக் காணியில் உள்ள வீட்டினுள் தூக்கில் தொங்கியுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச இறப்பு விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் விசாரணைகளின் பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலத்தை செங்கலடி பிரதேச மருத்துவமனைக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். [வ—10]

யாழ்ப்பாணம்

### சட்டவிரோத சிகரெட் விற்றவர் கைது

நாட்டுக்குள் அனுமதிக்கப்படாத சட்டவிரோதமாக வெளிநாட்டு வகையான 38 சிகரெட் புகைபொருளை விற்பனைக்கு வைத்திருந்த கடைக்காரரை அச்சுவேலிப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர். அச்சுவேலி தம்பளையில் உள்ள கடைக்காரரே அவ்வாறு 38 சிகரெட்டுக்களை விற்பனைக்கு வைத்திருந்துள்ளார். புலனாய்வுப் பொலிஸார் அங்கு சென்று அவற்றை வாங்கி உறுதிப்படுத்திய பின்னர் நிலைய பொறுப்பதிகாரிக்கு அதுதொடர்பில் அறிவித்ததை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் அவற்றை மீட்டதோடு கடைக்காரரையும் கைது செய்தனர். அவரிடம் விசாரணை மேற்கொண்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்து எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு அவருக்கு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். [வ—4]

யாழ்ப்பாணம்

### இருவருக்கு அபராதம்

தென்மராட்சி,செப்.27
அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 25 ஆயிரம் ரூபா அபராதமும் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த நபருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டன.
பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.வழக்கை விசாரித்த நீதிவான் எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அபராதம் விதித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [வ—9]

வவுனியா

### அதிபர் வீட்டில் திருடியவர் பிடிபட்டார்

வவுனியா விபுலானந்தாக்கல்லூரியின் தற்காலிக அதிபர் வீட்டில் திருடியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள விபுலாணந்தாக் கல்லூரியின் தற்காலிக அதிபர் வீட்டில் மடிக்கணினி மற்றும் தொலைபேசி என்பன திருட்டு போயின் இது தொடர்பாக பாடசாலை அதிபர் வவுனியா பொலிஸாரிடம் முறையிட்டார். இதுதொடர்பாக தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி திருடனைப் பொலிஸார் கைது செய்தனர். குறித்த திருடனைப் பொலிஸார் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தினர். [வ—402]

தென்மராட்சி

### ஆவணங்களின்றி வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 19 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதி வாகன வரி ஆகிய ஆவணங்களின்றி வாகனம் செலுத்தியதாக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து குற்றங்களுக்காக 19 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். [வ—9]

யாழ்ப்பாணம்

### கர்ப்பிணியிடம் தாலி கொள்ளை



கோயிலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணின் தாலிக்கொடி உட்பட 8 பவுண் நிறையுடைய நகைகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தாவடி பத்திரகாளி அம்மன் கோயிலடியை அண்மித்து நேற்று முன்தினம் பி.ப. 2 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கோயிலுக்குச் சென்றுவிட்டு தனியே வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே முகத்தை மறைத்தபடி மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் தாலிக்கொடியையும் சங்கிலியையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.
அதுதொடர்பில் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
சுன்னாகம் பொலிஸாரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலும் தெரிவித்தனர். [வ—4]

## மட்டக்களப்பில் ஆரம்பமானது ஓவியங்கள் வரையும் திட்டம்



மட்டக்களப்பு, செப்.27
மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாற்று பாரம்பரியங்கள்ள பேணும் வகையிலும் சுற்றுலாப்பயணிகள் - வேறு பிரதேச மக்களைக் கவரும் வகையிலும் ஓவியங்களை வரையும் செயற்திட்டம் ஒன்று மாவட்ட செயலகத்தால் முன்னெடுக்கப்பப்பட்டுள்ளது.
இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு இந்து இளைஞர் சேவைகள் மன்றக் கட்டடத்தில் உதவி மாவட்டச் செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.
பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஓவியர்கள் நேற்று முன்தினம் ஓவியங்களை வரைந்தனர். இவற்றில் பிரதேச காட்சிகள்- வரலாற்றைக் காண்பிக்கும் ஓவியங்கள்- இயற்கைக் காட்சிகள் என்ற அடிப் படையில் பல ஓவியங்கள் ஓவியர்களால் வரையப்பட்டன. இந்த ஓவியங்கள் மாவட் டத்தின் பல்வேறு இடங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இந்நிகழ்வில் மாவட்ட கலாசார இணைப்பாளர் ரி.மலர்ச்செல்வன்- கலாசார உத்தியோகத்தர் எஸ்.எம்.ஜெயினுலாப்தீன்- மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (வ)

## மரக்கிளை முறிந்து பொலிஸார் காயம்

வவுனியா பொலிஸ் நிலையத்தில் உள்ள மரம் ஒன்றின் கிளை முறிந்து விழுந்ததில் பொலிஸ் நிலையக் கட்டடம் சேதமடைந்துள்ளது. மூன்று பொலிஸார் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

வவுனியாவில் நேற்று மாலை 5.45 மணியளவில் பெய்த கடும் மழையின்போது பொலிஸ் நிலைய வளாகத்துக்குள் உள்ள பெரிய மரம் ஒன்றின் கிளை முறிந்து பொலிஸ் நிலையக் கட்டடத்தின் மீது விழுந்துள்ளது. இதனால் அந்தக் கட்டடத்தில் இயங்கி வந்த சிறு குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவின் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளது. இதன்போது அந்தப் பிரிவில் கடமையில் இருந்த மூன்று பொலிஸார் சிறு காயங்களுக்கும் உள்ளாகினர். (த-421)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகப் பதவிப் பொறுப்பேற்றிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவை வரவேற்கும் மற்றும் கட்சியின் எட்டாவது தலைவராகச் சிறப்பாகப் பணியாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனைப் பாராட்டும் நிகழ்ச்சிகளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை நடத்தியது. கொழும்பு மாவட்டக் கிளையின் தலைவர் சட்டத்தரணி கே.வி.தவராஜாவின் கொழும்பு இல்லத்தில் அவரது தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் கொழும்புக் கிளை உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன் ஆகியோரும் பங்குபற்றினர். (த)

## மரண அறிவித்தல்

**சின்னத்தம்பி மகேஸ்வரன்** (மந்திரம்-சிற்பாசாரியார்)



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகேஸ்வரன் 26.09.2014 காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-முத்துமாரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பையா- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், குகராஜனின் (சிறைச்சாலை உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம், யாழ்.மாவட்ட துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்க உறுப்பினர்), பாசமிகு தந்தையும், ஜெயரூபியின் அன்பு மாமனும், கணபதிப்பிள்ளை, சரஸ்வதி, கோபாலசிங்கம், தங்கவேலு, இராசசிலோசனா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற நாகேஸ்வரி, வயித்திலிங்கம், காலஞ்சென்ற யோகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சகிந்தவி, சஞ்சீவ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2014) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (52617) (10.6)

தகவல்: ம. குகராஜன் (மகன்)

## இலங்கையின் பழிவாங்கல்கள்; ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குக

இலங்கை அரசு, ஐ.நா விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவோருக்கு எதிராக மேற்கொள்கின்ற பழிவாங்கும் நடவடிக்கைகள் குறித்து மனித உரிமை சபையின் உறுப்பு நாடுகள் உன்னிப்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இலங்கை அரசு தனது அணுகு முறையை மறு பரிசீல்னை செய்ய வேண்டும் எனவும், விசாரணைகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அந்த அமைப்பு கோரியுள்ளது.


மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தைத் தொடர்ந்து இலங்கை நிலைவரத்தை உன்னிப்பாக அவதானித்து அறிக்கையிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளது சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம். (த-சி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**அரியகுட்டி பொன்னம்பலம்**

(சுருவில்)



மலர்வு 22.07.1940 — உதிர்வு 07.10.2013

திதி : திருதியை

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கே
எமைப்பிரிந்து எங்கு சென்றீர்
ஆண்டொன்று ஆனாலும் ஆறாது எம்துயரம்
ஈன்று உம் நினைவாய் இருந்தே
நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணிவிளக்காய் ஒளிவீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே நாம்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

401/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சுருவில்)

உம் நினைவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

**After A/L What Next???**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது.

**Spoken English With Grammar - Quick Learning Course**

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General — We do Official Online Registration for Exam Candidates — Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
Duration: (2 Months)

(C/15913)(7.6.3)

28.09.2014@8.00am | 29.09.2014@3.00pm | 30.09.2014@9.00am

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 021 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

**வேலைவாய்ப்பு**



**விரையுங்கள்! துபாயில் தொழில்**

**400 டக்ஸி ஓட்டுநர் வெற்றிடங்கள்**

அபுதாபியின் முன்னணியில் உள்ள கார், டக்சி சாரதிகளுக்கான கம்பனியில் வேலைவாய்ப்பு இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

இடம் : துரையப்பா அரங்கிற்கு முன் (பழைய மாநகர சபை கட்டட வளாகம்)
காலம் : நாளை (28.09.2014) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.30 மணி

**தகைமை**

- ★ இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம் - குறைந்தது 2 வருடங்கள் (3 வருடங்கள் விரும்பத்தக்கது.)
- ★ வயதெல்லை: 23-47 வரை
- ★ UAE மற்றும் வளைகுடா சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

**தொழில் வகை**

- ★ அடிப்படைச் சம்பளம் மாதம் 30,000/= (இலங்கை ரூபா.) மற்றும் தரகுப் பணமும் வழங்கப்படும். (130,000/= தொடக்கம் 200,000/= வரை உழைக்கலாம்.)

**நிபந்தனைகள்**

- ★ தங்குமிடம், போக்குவரத்து வழங்கப்படும்.
- ★ அடிப்படைச் சம்பளம் 800 திர்ஹாம் + தரகுப் பணம்.
- ★ இரண்டு வருட ஒப்பந்த காலம்
- ★ மருத்துவம் தொழிலாளர் சட்டத்திற்கமைய.

**ஆவணங்கள்**

- ★ பாஸ்போட் /பிரதி உட்பட
- ★ சாரதி அனுமதிப் பத்திரம் /பிரதி உட்பட
- ★ சுயவிரவம்
- ★ 10 பாஸ்போட் அளவிலான படங்கள்.

*வங்கிக் கடன் வசதி 118,000 வரை வழங்கப்படும்.



உடன் பதிவுகளுக்கு:
Lanka Voice Adve (Jaffna) : 077 952 7575
Lanka Voice Adve (Vavuniya, Mannar) :076 669 7789

SECURE MANPOWER RECRUITMENT (PVT) LTD. பதிவு இல. LL-2813
No.8B,Vajira Road, Bambalapitiya, Colombo - 04,Srilanka

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.